நிலைப்படுத்துவதற்கு தயாராயிருத்தல்

# SET in Place

SEC இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

ஆண்டறிக்கை 2015

**நிலைப்படுத்துவதற்கு தயாராயிருத்தல்**

# SET in Place

உலகளாவிய முன்னேற்றங்களுக்கு எம்மை சீரமைப்பதற்காக, பங்காளிகளது நம்பிக்கையை உறுதிசெய்வதற்காக ஓர் முறைமைப்படுத்தல் கட்டமைப்புடன் உட்கட்டமைப்பு மற்றும் திறமைகளுக்கு நாம் தயாரான நிலையிலுள்ளோம். இந்த வருடத்தில் இ.பி.ப.ஆ. ஓர் திறமை மிக்க மற்றும் பயனுறுதி மிக்க முறைமைப்படுத்துபவராக வருவதற்கு எல்லையற்ற சாத்தியப்பாடுகளை நாம் ஆராயுவுள்ளதுடன் இது பரவலான நோக்கெல்லையைத் தழுவுவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும்.

# உள்ளடக்கம்

தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு 03
தலைவரின் மீளாய்வு 04
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு 08
ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் 14
சிரேஷ்ட முகாமைத்துவம் 20
பொருளியல் மீளாய்வு 22
மூலதனச் சந்தை மீளாய்வு 25
முகாமையாளர்கள் 28
ஊழியர்களை 29
செயற்பாட்டு மீளாய்வு 33
மேலதிகத் தகவல்கள 62
செய்கைப் பத்திரம் 68

**நிதியியல் அறிக்கைகள் - இ.பி.ப.ஆ.**
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 72
நிதி நிலைமைக் கூற்று 74
நிதிச் செயற்திறன் கூற்று 75
ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று 76
காசுப் பாய்ச்சல் கூற்று - இ.பி.ப.ஆ. 77
காசுப் பாய்ச்சல் கூற்று - தீர்வை நிதியம் 78
காசுப் பாய்ச்சல் கூற்று - இழப்பீட்டு நிதியம் 79
கணக்கீட்டுக் கொள்கைகள் 80
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 82

**நிதியியில் அறிக்கைகள் - தீ.உ.நி.**
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 94
நிதி நிலைமைக் கூற்று 96
நிதியியல் செயற்திறன் கூற்று 97
தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று 98
காசுப் பாய்ச்சல் கூற்று 99
கணக்கீட்டுக் கொள்கைகள் 100
குறிப்புகள் 104

கூட்டாண்மை தகவல்கள் **பின்பக்க உள் உறை**

# எம்மைப் பற்றி

இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு (இ.பி.ப.ஆ.) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டதுடன் இது 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றினால் திருத்தியமைக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விடயங்கள் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழ் வருகின்றது.

---

# தொலை நோக்கு

பயனுறுதிமிக்க, திறமைமிக்க மற்றும் உயிர்ப்பான மூலதனச் சந்தை முறைமைப்படுத்தலுக்கு தெற்காசியாவிலேயே சிறந்த முறைமைப்படுத்துபவராக வருவது

---

# பணி நோக்கு

நியாயமான, திறமைமிக்க, ஒழுங்கான மற்றும் வெளிப்படையான மூலதனச் சந்தை ஒன்றை ஊக்குவிப்பதற்கு, விருத்தி செய்வதற்கு மற்றம் பராமரிப்பதற்கு

# தலைவரின் மீளாய்வு



*முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் மூலதனச் சந்தை ஓர் நிலைதுறையாக கட்டியெழுப்புவதற்கும் ஓர் பலமான முறைமைப்படுத்தல் வடிவமைப்பு அவசியமென நான் திடமாக நம்புகின்றேன்.*

ஜனவரி 2015 இல் இரண்டாவது தடவையாக நான் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் பதவியினை பொறுப்பேற்றபோது எனக்கும் புதிய ஆணைக்குழுவிற்கும் முன்னால் பல சவால்கள் காணப்பட்டன. மேலும் இ.பி.ப.ஆ. ஆனது ஓர் உயிர்ப்பற்ற முறைமைப்படுத்துபவராக உணரப்பட்டது. எம்மை ஓர் நம்பகத்தன்மை மிக்க முறைமைப்படுத்துபவராக நிலைநாட்டுவதும் கடந்த 3 வருடங்களாக மிகவும் அலட்சியப்படுத்தப்பட்ட ஒழுங்கான முறைகள், செயல்முறைகள் மற்றும் நியமங்கள் என்பவற்றை புணருத்தாரனம் செய்வதும் எமது உடனடி முன்னுரிமையாகக் காணப்பட்டன. பிணையங்கள் சந்தையின் நாணயம் மற்றும் ஆரோக்கியத்தினை பலப்படுத்தி பாதுகாப்பதற்கும், எமது பங்காளிகளின் அவா மற்றும் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கு தொழில்சார் நியமங்களை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கைகள் அவசியமாகக் காணப்பட்டன.

உலகளாவிய பங்குச் சந்தைகளுக்கு இந்த வருடமானது ஓர் இலகுவான ஆண்டாக காணப்படாததுடன் அநேகமானவை வருட இறுதியில் எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தின. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இதிலிருந்து வேறுபடாததுடன் மீளாய்வாண்டில் 5.5% ஆல் வீழ்ச்சியடைந்தது. கிழக்கு மற்றும் தெற்காசிய பங்குப் பரிவர்த்தனைகளுடன் ஒப்பிடும்போது கொ.ப.ப. மிகவும் மோசமாகக் காணப்படவில்லை. தாய்லாந்தின் பங்குப் பரிவர்த்தனையானது 14% ஆலும், தாய்வான் பங்குப் பரிவர்த்தனையானது 10.4% ஆலும், பிலிப்பைன்ஸ் பங்குப் பரிவர்த்தனை 6.4% ஆலும், ஜகார்த்தா பங்குப் பரிவர்த்தனை 12.1% ஆலும், மும்பாய் பங்குப் பரிவர்த்தனை 0.8% ஆலும் வீழ்ச்சியடைந்தன. 2015 இல் உலகளாவிய சந்தைகளில் பாதிப்பினை ஏற்படுத்திய காரணிகளில் முக்கியமானவை பின்வருவனவாகும். பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக எண்ணெய் விலை, ஐக்கிய அமெரிக்க மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வட்டி வீத உயர்வு மற்றும் அமெரிக்க டொலரின் தொடர்ச்சியான பலம், சீனப் பொருளாதாரத்தின் மீள்சமநிலைப்படுத்தல், பூகோள அரசியலில் அதிகரித்த பதற்றம் மற்றும் மத்திய கிழக்கில் காணப்பட்ட பிரிவினைவாத வன்முறைகள், மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பாவுக்கான பெருந்திரளான குடிபெயர்வு என்பனவாகும். உள்நாட்டினைப் பொறுத்தளவில் உள்ளூர் வட்டி வீதங்களில் காணப்பட்ட நிலையற்றதன்மை மற்றும் 2015 இல் இடம்பெற்ற இரண்டு தேர்தல்கள் என்பன எமது சந்தையில் தாக்கத்தை உண்டுபண்ணின.

தன்னல அக்கறையுடைய சில தரப்பினர் முறைமைப்படுத்துபவருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கத்தில் சந்தையின் செயற்திறனுக்கு இ.பி.ப.ஆ. இன் மேல் பழி சுமத்துவதற்கு முயற்சித்தார்கள். எவ்வாறாயினும், சந்தையினை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடிய எவ்விதமான நடவடிக்கைகளையும் இ.பி.ப.ஆ. மேற்கொள்ளவில்லை என்று இங்கு குறிப்பிடுவது விவேகமானதாகும். இ.பி.ப.ஆ. இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்துரைப்பதற்கும் இ.பி.ப.ஆ. க்கு வழங்கப்பட்டுள்ள ஆணைகளான முதலீட்டாளர்கள் நலன்களைப் பாதுகாத்தல், நியாயமான, ஒழுங்கான மற்றும் செயற்திறனான சந்தையினைப் பராமரித்தல் என்பவற்றில் பொதுமக்களை தெளிவூட்டுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சந்தை துர்நடத்தைகள் விலை கண்டுபிடிப்பினை திரிபுபடுத்துவதுடன் நேர்மையினை பாதித்து சந்தையில் பொதுமக்களின் நம்பகத்தன்மையினை வலுவிழக்கச்செய்கின்றது. எனவே, பிணையங்கள் முறைமைப்படுத்துபவர்கள் இத்தகைய பிறழ்ச்சிகளை தடுத்து முதலீடு செய்யும் பொதுமக்களை பாதுகாப்பதற்காக சந்தைக் கையாளுகைகளை இனங்கண்டு, புலனாய்வுசெய்து வழக்குதொடருதல் வேண்டும். 2012 ஆகஸ்ட் மாதத்தில் இ.பி.ப.ஆ. இன் தலைவர் பதவியிலிருந்து நான் விலகியபோது, சந்தை துர்நடத்தைகள் தொடர்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த 16 புலனாய்வுகள் காணப்பட்டன. சில புலனாய்வுகள் அதன் பின்னர் போதியளவு சான்றுகள் இல்லை என்ற காரணம் காட்டி முடிவுறுத்தப்பட்டதுடன் ஏனைய சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்தவர்கள் வெறுமனே எச்சரிக்கை மட்டுமே செய்யப்பட்டார்கள்.

இவற்றை கவனத்திலெடுத்து, ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் 11 விடயங்களை மீள் பரிசீலிப்பதற்கு நாம் தீர்மானித்தோம். இதற்கும் மேலாக, அதிகளவு முன்னேற்றத்தை காண்பிக்கமுடியாத புலனாய்வுக் குழுவானது 2015 இன் இறுதியில் கலைக்கப்பட்டு புலனாய்வுகளை நடாத்துவதற்கு உள்ளகத்தே இருந்து ஓர் புதிய குழுவொன்று உருவாக்கப்பட்டது. பிணையங்கள் விடயங்கள் பொதுவாக சிக்கலானவை என்பதுடன் புலனாய்வு செய்வதற்கு நீண்டகாலம் தேவைப்படும். ஆயினும், இ.பி.ப.ஆ. மேற்கூறப்பட்ட புலனாய்வுகளுடன் இவ்வருடத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மேலும் 4 புதிய புலனாய்வுகளையும் சேர்த்து குற்றம்புரிந்தவர்களை கண்டிப்பதற்காக ஓர் நிலையான கால வரையறைக்குள் நிறைவுசெய்வதற்கு உறுதியாயுள்ளது. இந்த நடவடிக்கைகள் முதலீட்டாளர்களைக் கவர்ந்து பாதுகாக்கக்கூடிய நியாயமான மற்றும் சிறந்து செயற்படும் சந்தைக்கு இட்டுச்செல்வதற்கும் செயற்பாட்டு வினைத்திறன் மற்றும் எமது வலியுறுத்தல் முயற்சிகளின் விளைவினையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கும்மேலாக, மீளாய்வாண்டில் நாம் சில கண்காணிப்பு நடவடிக்கைகளை சீரமைத்ததுடன் சந்தையில் சாத்தியப்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தினை குறைப்பதற்காக பொருத்தமான செயல்திறனுடனான நடவடிக்கைகளை பின்பற்றினோம். கண்காணிப்பு முறையினை மேம்படுத்துவதன் மூலம் எமது கண்காணிப்பு திறமையினை மேம்படுத்தி சாத்தியப்படக்கூடிய சந்தை துர்நடத்தைகளை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம். இந்த முன்னெடுப்புகள் எவ்வித சந்தேகமுமின்றி சந்தை நடவடிக்கைகளது மேற்பார்வையின் தன்முனைப்பினை

# தலைவரின் மீளாய்வு தொடர்ச்சி.

மேம்படுத்துவதுடன் புலனாய்வு மற்றும் வலியுறுத்தல் செயற்பாட்டிற்கும் உறுதுணையளிக்கும். பிணையங்கள் சட்டங்களை மீறுவோரைக் கண்டுபிடிக்கும் எமது முயற்சியில் நாம் தளர்ச்சியடையாது எவ்வித சந்தை கையாளுகைகளுக்கும் சகிப்புத்தன்மையின்றி இருப்பதனையும் உறுதிசெய்வோம்.

இ.பி.ப.ஆ. இன் மற்றுமோர் பணிப்பாணையாக பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திக்கு வசதியளித்தல் காணப்படுகின்றது. மூலதனச் சந்தை அபிவிருத்தியும் ஊக்கமளிப்பும் ஒரே விடயமல்ல என்றாலும் சில அறிவற்றவர்கள் இரண்டும் ஒன்றென கருதுகிறார்கள். எனது கருத்தின்படி, சமீபத்தைய கடந்தகாலங்களில் சில சந்தர்ப்பங்களில் இ.பி.ப.ஆ. அதனது பணிப்பாணையினை மீறியுள்ளது. கொ.ப.ப. இற்கு அதனது சந்தை ஊக்கமளிப்பு நடவடிக்கைகளுக்கு உறுதுணையாற்றியதானது இ.பி.ப.ஆ. இன் முக்கிய பணிநோக்கு தொடர்பாக ஓர் குழப்பத்திற்கும் தவறான கருத்திற்கும் இட்டுச்சென்றுள்ளது. மீளாய்வாண்டில், நாம் எமது பணிப்பாணைக்குள் கடமையாற்றுவதற்கு எமது கவனத்தினை செலுத்தியது மாத்திரமன்றி ஏதேனும் சந்தேகங்களை நீக்குவதற்கும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையினை பொது மக்களுக்கு பதியவைக்கவும் முயற்சித்தோம்.

முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் மூலதனச் சந்தை ஓர் நிலைதுறையாக கட்டியெழுப்புவதற்கும் ஓர் பலமான முறைமைப்படுத்தல் வடிவமைப்பு அவசியமென நான் திடமாக நம்புகின்றேன். எனவே, 28 வருடங்களுக்கு முன்னர் இயற்றப்பட்ட பழைமையான சட்டத்தினை மாற்றீடு செய்வதற்கான புதிய பிணையங்கள் சட்டத்தினை இ.பி.ப.ஆ. வரைகின்றது. இது மூலதனச் சந்தை மற்றும் ஏனைய அனைத்து முறைமைப்படுத்தப்படுபவர்களையும் ஆளுமைப்படுத்தும் சட்டங்களை ஏனைய வெளித்தோன்றும் சந்தைகளது சட்டத்திற்கு இணையாகக் கொண்டுவருவதற்காகும். திரு. கே. கணகீஸ்வரன் ஜனாதிபதி சட்டத்தரணியினது தலைமையின் கீழ் பிணையங்கள் சட்டம், நிதியியல், கணக்கியல், புதிய சட்டங்களை வரைதல் போன்ற பல்வேறு துறைகளை சார்ந்த நிபுணர்கள் மற்றும் கொ.ப.ப. இன் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக் குழுவானது இந்த பணியில் செயலாற்றிக்கொண்டுள்ளது. இந்த வருடத்தில் குழுவின் ஒழுங்கான கூட்டங்கள் இடம்பெற்றதுடன் நாம் இப்புதிய பிணையங்கள் சட்டத்தினை 2016 இன் மூன்றாம் காலாண்டில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். இதன் பின்னர் மந்திரி சபையின் அங்கீகாரத்திற்கு திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும் என்றும் சட்டமியற்றல் வரையப்பட்டு சட்டமானது வாதத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டு 2017 இன் ஆரம்பத்தில் அனுமதிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சமயத்தில் ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கு இந்த சவாலைப் பொறுப்பேற்று அர்ப்பணிப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் செயலாற்றியமைக்காக எனது மனமார்ந்த நன்றிகளைப் பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கீட்டு கொள்கைகளுக்கு அமைவாக நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மையினை சான்றுபகர்வதில் கணக்காய்வாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். இ.பி.ப.ஆ. புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தில் கணக்காய்வாளர் மேற்பார்வை ஏற்பாடுகளை உள்ளடக்கும் சாத்தியப்பாட்டினை ஆராய்கின்றது. இந்த முயற்சியில் இலங்கையின் கணக்காய்வு குழுவானது ஒத்துழைக்கும் என நாம் ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றோம். முக்கியமாக உலகளாவிய ரீதியில் பிரசன்னத்தைக் கொண்டுள்ள கணக்காய்வு நிறுவனங்களின் தலைமைக் கம்பனிகள் ஏனைய நியாயாதிக்கங்களில் இந்த கோட்பாடுகளுக்கு இணங்கியுள்ளன. கணக்காய்வாளர் மேற்பார்வையானது நிதியியல் அறிக்கையிடல் செயற்பாட்டின் நேர்மை மற்றும் நம்பகத்தன்மைக்கும் முதலீட்டாளர் தன்னம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் வழிகாட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நாம் கொ.ப.ப. உடன் திடமான செயற்பாட்டு உறவுகளை தொடர்ந்தும் பேணுவதுடன் பரிமாற்றகத்தினை அதன் அங்கத்தவர்களுக்குச் சொந்தமான ஓர் பரஸ்பரமான கம்பனியிலிருந்து பங்குதாரர்களினால் சொந்தமாக்கப்பட்ட ஓர் கம்பனியாக மாற்றுவதற்கு தொடர்ந்தும் வசதியளிக்கின்றோம். இந்த முக்கியமான செயற்பாடானது கொ.ப.ப. இன் வணிக மாதிரியினை இலாபத்திற்கான ஓர் பரிவர்த்தனையாக உருமாற்றுமெனவும், அதன் ஆளுகை கட்டமைப்பினை சீர்திருத்தியமைக்குமெனவும் எதிர்பார்ப்பதுடன் பரிவர்த்தனையானது அதன் பெறுமதியினை அகலத்திறப்பதற்கான ஆற்றலினை அதிகரிப்பதற்கு விரிவான சட்டவியல் மாற்றங்களும் தேவைப்படுகின்றன. இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. என்பன அதன் பங்காளிகளிடையே பரிவர்த்தனையின் பெறுமதி ஒதுக்கீட்டினை தீர்மானிப்பதில் நிதானித்து யோசனை செய்தவண்ணமுள்ளன.

நிதியியல் ஸ்திரத்தன்மையினை வளர்ப்பதில் பிணையங்கள் சந்தை உட்கட்டமைப்பானது முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே, தீர்ப்பனவு தவறுதல் இடர்நேர்கை மற்றும் எதிர்தரப்பினர் இடர்நேர்கை என்பவற்றை கணிசமானளவு குறைக்கும் நோக்கத்தில் இ.பி.ப.ஆ. கொ.ப.ப. உடன் இணைந்து ஓர் மத்திய எதி தரப்பினராக (ம.எ.த.) கடமையாற்றுமென எதிர்பார்க்கப்படும் தீர்வக இல்லமொன்றினை உருவாக்கும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளன. ஓர் ம.எ.த. இனை அமுலாக்கும் பொறுப்பிற்கு உலகளாவிய ரீதியில் மூலதனச் சந்தை தொடர்பான ஒப்படைப்புகளில் விசேடத்துவமிக்க ஓர் ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளதுடன் புதிய இ.பி.ப.ஆ. சட்டத்தில் உள்ளடக்கபடவிருக்கும் ம.எ.த. க்கான விரிவான சட்ட வடிவமைப்பினை விருத்தி செய்யும் பொறுப்பினை இ.பி.ப.ஆ. பொறுப்பேற்றுள்ளது. இந்த முன்னெடுப்பானது முறையான இடர்நேர்கையினை குறைக்குமெனவும், முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பினை வழங்கி சந்தையில் நம்பகத்தன்மையினை பராமரிப்பதற்கு உதவுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்குத் தரகு நிறுவனங்களது பின்புல காரியாலய முறைகளில் ஒருமைப்பாட்டினை பேணுவதற்காகவும் தீர்ப்பனவு செயற்திறனை மேம்படுத்துவதற்காகவும் தரகர் பின்புல காரியாலயம் (த.பி.கா.) மற்றும் கட்டளை முகாமைத்துவ முறை (க.மு.மு.) ஆகியவற்றை விருத்திசெய்வதில் இவ்வாண்டில் கணிசமானளவு முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. ஆகியவற்றினால் கூட்டாக நிதியளிக்கப்பட்ட இத்திட்டமானது 2016 மார்ச் மாதமளவில் நேரலையாக செல்வதற்கு இலக்குவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் உலகளாவிய நியமங்கள் பொருத்துபவரான சர்வதேவ பிணையங்கள் ஆணைக்குழுக்களுக்கான ஒழுங்கமைப்புடனான (ச.பி.ஆ.ஒ.) ஒத்துழைப்பு மார்க்கங்களை இ.பி.ப.ஆ. விரிவுபடுத்தியது. அத்துடன் நாம் ச.பி.ஆ.ஒ. இன் பல்வேறு கூட்டங்கள் மற்றும் குழுக்களில் தீவிரமாக பங்கேற்றியதுடன் குழு 4 இல் (வலியுறுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றம்) அங்கத்துவத்தினையும் பெற்றோம். இக்குழுவானது உலகளாவிய நிதியியல் சந்தைகளிலுள்ள பிணையங்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளது மீறல்களை கண்டுபிடிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் உதவுவதனை நோக்காகக் கொண்டதாகும். மீளாய்வாண்டில் நிதியியல் துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியியல் துறையினது முற்றான மற்றும் ஆழமான மதிப்பீட்டில் நாமும் பங்குபற்றினோம். அத்துடன் ச.பி.ஆ.ஒ. இன் கொள்கைகளது அமுலாக்கலினை மதிப்பிடுவதற்கும் அமுலாக்களில் காணப்படும் ஏதேனும் இடைவெளிகளை நிவர்த்திசெய்வதற்கான வழிமுறைகளை பரிந்துரைப்பதற்காக ஓர் ச.பி.ஆ.ஒ. தேச மீளாய்வினை 2016 இல் பொறுப்பேற்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

மூலதனச் சந்தை பற்றிய சிறந்த புரிந்துணர்வினை வளர்ப்பதற்காகவும் சிற்றளவு முதலீட்டாளர்களது மிகவும் செயல்திறனுடனான மற்றும் தகவலறிந்த பங்குபற்றலை ஊக்கமளிப்பதற்காகவும் நாம் உயரிய நிதியியல் கல்வியறிவினை அதிகரிப்பதனை தொடர்ந்தோம். கருந்தரங்குகள், செயலமர்வுகள், பத்திரிகை மற்றும் இலத்திரணியல் ஊடகங்கள் மற்றும் அச்சுப் பிரசுரங்கள் முதலியவற்றினூடாக நாம் விழிப்புணர்வினை உருவாக்கினோம். செய்தித்தாள்களில் வழமையான அடிப்படையிலும் வாராந்தம் ஆகக்குறைந்தது இரண்டு கட்டுரைகள் என்ற அடிப்படையிலும் மூன்று மொழிகளிலும் எம்மால் கட்டுரைகளைப் பிரசுரிக்க முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வருடத்தில் ஊடகங்கள் எமக்கு வழங்கிய உறுதுணைக்காக நாம் எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். அறிவுபடைத்த முதலீட்டாளர்கள் அவர்களது முதலீடுகளை புத்திசாலித்தனமாக முகாமைப்படுத்துவதுடன் பிணையங்கள் மோசடிகளில் இரையாவதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன என்பது எமது கருத்தாகும்.

சந்தை மேற்பார்வை உலகினில் எம்மால் முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களில் சிறந்த உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்கை முகாமைத்துவம் என்பவற்றை உந்துவிப்பதற்காக எமது மேற்பார்வையினை நாம் தீவிரப்படுத்தினோம். இந்நிறுவனங்கள் வாடிக்கையாளர்களது நிதியத்தினை முகாமைப்படுத்தும்போது கடைப்பிடிக்கவேண்டிய தொழில்சார் நியமங்கள், நெறிமுறைகள் மற்றும் பராமரிக்கவேண்டிய சாதாரணமான அக்கறை என்பவற்றை மேம்படுத்துதல் அவசியமென நாம் ஓர் கடுமையான செய்தியினை இந்நிறுவனங்களுக்கு தெரிவித்தோம். எமது மேற்பார்வை முயற்சிகள் ஓர் அதிக பலமான மற்றும் மீளெழும் தன்மையுடைய மூலதனச் சந்தைக்கு இட்டுச்செல்லும் என நாம் நம்புகின்றோம்.

இறுதியாக நான் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விடயங்களுக்கான அமைச்சரான மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்களுக்கும் ஆணைக்குழு அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரசபைக்கும் உயர்ந்த தகமையுடைய மற்றும் அந்தந்த துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்ட ஆர்வமிக்க நிபுணர்கள் அடங்கிய ஓர் சிறந்த குழுவினை எனக்கு வழங்கியமைக்காக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது எமது ஆணைக்குழுக் கூட்டங்களை உயிர்த்தன்மை மிக்கதாக மாற்றியதுடன் தீர்மானம் மேற்கொள்ளலானது ஓர் கூர்மையான ஆனால் திருப்திகரமான செயல்முறைக்கு அமைய காணப்படுகின்றது. மாநில அமைச்சரான மதிப்பிற்குரிய நிரோசன் பெரேரா பா.அ. மற்றும் செயலாளர் திரு. எம்.ஐ.எம். ரவீக் மற்றும் அமைச்சின் ஏனைய ஊழியர்களுக்கும் எமக்கு வழங்கிய உறுதுணைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலகத்தின் அங்கத்தவர்களுக்கு இந்த வருடத்தில் வழங்கிய ஆதரவு மற்றும் ஒத்துழைப்பிற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாம் நீண்ட தூரம் கடந்து வந்துள்ளோம் ஆனால் வெற்றிகொள்ளவேண்டிய பல சவால்கள் இன்னமும் காணப்படுகின்றன என நான் நம்புகின்றேன். ஆணைக்குழு மற்றும் ஊழியர்களது உறுதுணையுடன் எதிர்வரும் வருடத்தில் இந்த சவால்களில் அனேகமானவற்றை வெற்றிகொள்ள முடியும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.



**தலைவர்**
*திலக் கருணாரத்ன*

*25 மே 2016*

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



*"இலங்கையின் மூலதனச் சந்தையினது ஆற்றல் வளம் பற்றி இ.பி.ப.ஆ. அளவற்ற விசுவாசத்தினைக் கொண்டுள்ளதுடன், அதன் வாக்குறுதியினை நிரூபிக்கத்தக்க செயற்திறனாக மாற்றுவது எமது நோக்கமாகும். நிதிக்கான அணுக்கம் மற்றும் ஓர் பொருளாதாரத்தின் வளர்ச்சி என்பவற்றிற்கிடையேயான பலமான தொடர்புகளின் நிமித்தம், எமது முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை பலப்படுத்துதல் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்திக்கு வசதியளித்தல் என்பவற்றிற்கான எமது மூலோபாய கவனமானது வங்கித் துறையினை முழுமையாக்கும் - இதன் மூலம் நாட்டினது பொருளாதார இலக்குகளுக்கு துணைபுரிவதாகும்."*

### சேமிப்பிலிருந்து முதலீட்டிற்கு - ஓர் அவசியமான மாற்றம்

வங்கித் துறையினில் அதீதமான சார்பு காணப்படும் இவ்வேளையில், பொருளாதாரத்தில் வங்கிகள் நிதியினை திரட்டுதல் மற்றும் முதலிடுவதில் ஆதிக்கம் செலுத்துகின்றன, முதலிடுதல் மற்றும் நீண்டகால நிதி திரட்டுதலுக்கு முன்னுரிமையுள்ள தெரிவாக மூலதனச் சந்தையினை மாற்றுதல் ஓர் சவால் மிக்க செய்பணியாகக் காணப்பட்டாலும் முற்றாக அடையமுடியாததொன்றல்ல. இந்த முயற்சியில் எமது வெற்றியினை, துரிதமான பொருளாதார விரிவாக்கலுக்கு மூலதனச் சந்தைகள் என்பதனை மையத்தின் கொள்கை தயாரிக்கும் செய்கருவி கலங்களை நம்பவைப்பதற்கான எமது ஆற்றலே தீர்மானிக்கும்.

உலகளாவிய ரீதியிலே காணப்படும் மூலதனச் சந்தைகள் முன்னரிலும் பார்க்க இன்று பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவை பொருளாதார அபிவிருத்திக்கு செயற்திறன் மிக்க நீண்டகால மூலதன வளர்ச்சி மூலங்களாக சேவையாற்றுவதுடன் நாட்டின் உயிர்ப்பான பொருளாதார வளர்ச்சி இலக்குகளுக்கும் துணைபுரிகின்றன. பொருளாதாரத்திற்கான மூலதனச் சந்தையின் பங்களிப்பினை அளவிடும் மட்டக்குறியாக மொத்த உள்ளூர் உற்பத்திக்கு (மொ.உ.உ.) சந்தை மூலதனவாக்க விகிதாசாரம் காணப்படுகின்றது. இலங்கையில், இது 25% ஆக காணப்படும்வேளை, பல பிராந்திய சந்தைகள் மொ.உ.உ. இன் கணிசமான சதவீதத்தை சந்தை மூலதனவாக்கமாக கொண்டுள்ளன. உதாரணமாக, இந்தியா மற்றும் தாய்லாந்தில் சந்தை மூலதனவாக்கமானது முறையே மொ.உ.உ. இன் 73% மற்றும் 88% ஆக காணப்படுவதுடன், மலேஷியாவில் இது 129% ஆகவும் ஐக்கிய அமெரிக்க குடியரசில் 140% ஆகவும் காணப்பட்டு சந்தை மூலதனவாக்கமானது மொத்தமாக மொ.உ.உ. இனை விஞ்சிக் காணப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட பொருளாதாரங்களில் சந்தை மூலதனவாக்கமானது மொ.உ.உ. இன் பன்மடங்காக காணப்படுகின்றது. சிங்கப்பூரில் (219%), சுவிற்சலாந்தில் (229%), தென் ஆபிரிக்காவில் (235%) ஆகும். இந்த ஒவ்வொரு சந்தைகளிலும் முனைப்புடனான மூலதனச் சந்தை சீர்திருத்தங்கள் பொருளாதார வளர்ச்சியினை எட்டுவதில் கணிசமான பங்களிப்பினை வழங்கியதுடன், எமது சந்தையினை ஓர் பொருளாதார வினையூக்கியாக ஏற்பளிப்பினை அடைவதற்கு இ.பி.ப.ஆ. உள்ள நாம் கொள்கை அமைப்பதில் உயர்ந்த மட்டத்திலுள்ளவர்களுக்கு அடிக்கடி சார்பாண்மையுரை மேற்கொள்வதனை தொடர்ந்தோம்.

எமது இலக்கினை அடைவதற்கு முன்னெப்போதிலும் பார்க்க சந்தையானது அதிக சேமிப்புகளை முதலீடாக மாற்றவேண்டும் என்பதனை நாம் உணர்ந்துகொண்டோம். இத்தகைய மாற்றங்கள் ஒருநாளில் ஏற்படாது, இதன் காரணமாக கடந்த சில வருடங்களாக இ.பி.ப.ஆ. இன் செயற்பணியானது மூலதனச் சந்தை பெருந்திட்டத்திற்கு ஏற்றாற்போல் மூலதனச் சந்தைக்கு அவசியமான அபிவிருத்திக்கு வசதியளிப்பதாகக் காணப்பட்டது. 2015 இல் விசேடமாக, மூலதனச் சந்தைக்கு ஓர் திடமான அடித்தளத்தை நாட்டக்கூடிய அத்தகைய பல முன்னெடுப்புகளுக்கு நாம் முன்னுரிமை வழங்கினோம்.

ஓர் நீண்டகால நிதியளித்தல் மற்றும் முதலீட்டு மூலமாக மூலதனச் சந்தையில் பொதுமக்களது நம்பிக்கையினை மீளக்கட்டியெழுப்புவதற்காக, நாம் பின்வரும் முயற்சிகளில் கவனஞ்செலுத்தினோம். எமது முறைமைப்படுத்தல் பொறுப்பாணையினை வலிமைப்படுத்தல், சர்வதேச நியமங்களுக்கு எதிராக முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை பயனுள்ளவாறு திறனளவிடுதல், எம்மால் முறைமைப்படுத்துபவர்களிடையே சிறந்த வணிக நடத்தைகளை ஊக்குவித்தல் என்பனவாகும். அதேசமயம், நாம் தொடர்ச்சியாக பயனுள்ளவாறு சந்தை நடவடிக்கைகளை கண்காணித்ததுடன் முறைமைப்படுத்தப்படுபவர்களது மேற்பார்வையினையும் மேம்படுத்தினோம். இணக்கப்பாடற்ற சமயங்களில், குறைகளை சீர்செய்வதற்கு நாம் துரிதமாக தலையிட்டதுடன் பொருத்தமானவாறு கடுமையான வலியுறுத்தல் நடவடிக்கைகளையும் பொறுப்பேற்றோம்.

இலங்கையில் நீண்டகால நிதி திரட்டுதல் மற்றும் முதலீட்டுக்கு முன்னுரிமையுள்ள முறையாக மூலதனச் சந்தை வருவதற்கான நிலைமையினை உறுதிப்படுத்தும் எமது முயற்சிகள் வெகுவிரைவில் வெற்றியடையும் என நாம் நம்புகின்றோம். அதன் நிலைநிறுத்தக்கூடிய விரிவாக்கலுக்கு வசதியளிப்பதற்கான எமது எதிர்கால முன்னெடுப்புகள் துணைபுரியும் என்னும் திடநம்பிக்கை காணப்படுகின்றது.

### 2015 இல் இலங்கைக்கு ஓர் அமைதியான நம்பிக்கை வாக்கு

2015 ஆம் ஆண்டானது பல உலகளாவிய அபிவிருத்திகளின் நிமித்தம் மூலதனச் சந்தைகளுக்கு ஓர் சவால்மிக்க ஆண்டாகக் காணப்பட்டது. இது எமது உள்ளூர் பாரிய பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், ஏனையவற்றுக்கிடையில் வட்டி வீதங்களிலான அதிகரிப்பிற்கும் உள்ளூர் மூலதனச் சந்தையில் எதிர்மறையான வளர்ச்சிக்கும் வழிசமைத்தது. 2015 இன் இறுதியில், அனைத்து பங்கு விலைச் சுட்டியானது 5.5% ஆல் வீழ்ச்சியடைந்தும், எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டியானது 11.3% வீழ்ச்சியினையும் அனுபவித்தது. இவை எமது பிராந்திய தரப்பினருடன் ஒப்பிடும்போது ஓர் சிறந்த செயற்திறனாகக் காணப்பட்டது.

எவ்வாறாயினும், உலகளாவிய ரீதியிலான இந்த பாரிய மாற்றங்களை தாங்கி நிற்பதிலும் அவற்றின் உள்ளூர் தாக்கத்தினை கட்டுப்படுத்திய அதேவேளை வெளிநாட்டு முதலீட்டாளர் பங்களிப்பினை அதிகரிப்பதிலும் நாம் வெற்றியடைந்துள்ளோம். 2014 இல் காணப்பட்ட 27.6% இலிருந்த 2015 இல் 34.6% ஆக காணப்பட்ட இந்த அதிகரிப்பானது உலகளாவிய பாரிய மாற்றங்களுக்கு எமது சந்தையானது தொடர்ந்தும் மீளெழுச்சியுடையதாக உணரப்படுகின்றது என்பதனை குறிப்பிடுகின்றது.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு தொடர்ச்சி.

## 2015 இல் எமது முயற்சிகள்:

### முறைப்படுத்தல் வலுவூட்டல்கள்

சந்தையில் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கும் சந்தையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கும் திடமான முறைமைப்படுத்தல் தவிர்க்கமுடியாதது என்று நாம் நம்புகின்றோம். இத்தகைய முறைமைப்படுத்தலை அடைவதற்கு பின்வரும் முன்னெடுப்புகள் அவசியமானதாகும். பின்வருவனவற்றினூடாக எமது முறைமைப்படுத்தல் கட்டமைப்பினை சர்வதேச திறனளவிடுதல்களுக்கு இணையாக மாற்றவேண்டியுள்ளது. இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்கள், பட்டியலிடல் மற்றும் இடையீட்டாளர்கள் விதிகள் உள்ளடங்களாக மூலதனச் சந்தை விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளது புனராய்வு என்பனவாகும்.

இந்த முயற்சிகள் 2015 இல் தொடர்ந்ததுடன், இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஒன்றுதிரட்டப்பட்ட ஆரம்ப வரைவிற்கு வழிசமைத்தது. இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான வரைவு திருத்தங்கள் பின்வருவனவற்றினூடாக எமது முறைமைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் செயல் வல்லமையினை பலப்படுத்தும். பிணையங்கள் சட்ட மீறல்களுக்கு குடியியல் மற்றும் நிருவாக வலுவளிப்புகள், இடையீட்டாளர்களது வணிக நடத்தையில் மேம்படுத்தப்பட்ட முறைமைப்படுத்தல், தவறுகளை வெளிக்கொணர்பவர்களது பாதுகாப்பிற்கான ஏற்பாடுகள், பரஸ்பரமற்ற உரித்துவம் பகிரப்பட்ட பரிமாற்றகத்தினது உருவாக்கம் மற்றும் ஓர் மத்திய எதிர் தரப்பினரை (ம.எ.த.) நிறுவுதல் என்பனவாகும். 2015 இல் இவற்றின் பயணத்தினை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த சட்டாவாக்கமானது துரிதமாக முடிவுறுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பிரசித்திபெற்ற நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

தற்போது இ.பி.ப.ஆ. னால் முறைமைப்படுத்தப்படுபவர்களை ஆளுமைப்படுத்தும் விதிகளை மறுசீரமைப்பதற்கான முன்னேற்பாடுகளும் நடந்தவண்ணமுள்ளன. இந்த மீளாய்வானது துண்டு துண்டான மாற்றங்களின்றி, தற்போது நடைமுறையிலுள்ள முற்றான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் ஓர் முறையான மேம்பாட்டினை விளைவிப்பதுடன் இது சந்தை முழுவதும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலினை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகும்.

இவ்வருடம் முழுவதும், முதலீட்டாளர்களை தவறாக வழிநடத்துதல், சூழ்ச்சி மற்றும் மோசடியான நடைமுறைகள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பதற்கும், தவறிழைப்பவர்களை பொறுப்பாளிகளாக வைத்திருத்தல், துரிதமான மற்றும் தீர்மானமான நடவடிக்கையினூடாக முதலீட்டாளர்களுக்கு உரிய நியாயம் கிடைக்கச்செய்தல் என்பவற்றிற்கு இ.பி.ப.ஆ. கடப்பாடுடையதாக இருந்தது. எமது கூட்டாண்மை கண்காணிப்பு செயற்பாடுகள் சிறந்த முதலீட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்வதனை முதலீட்டாளர்களுக்கு இயலுமையாக்கும் நோக்கில் சந்தை வெளிப்படுத்தல்களின் துல்லியத்தன்மையினை உறுதிப்படுத்தியதுடன் வலியுறுத்தல் நடைமுறைகளுக்கு துணைபுரிவதற்காக கணக்காய்வாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களுடன் ஈடுபடுவதற்கான ஓர் நிகழ்ச்சித்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

### துரிதமான மற்றும் தீர்மானமான தலையீடுகள்

துரிதமாகவும் தீர்மானமாகவும் நாம் செயற்படத் தவறும்போது இது முறைமைப்படுத்தப்படுபவர்கிளிடையே நெறிமுறையற்ற நடத்தையினை ஊக்குவிப்பதாகக் கருதப்படுகின்றது என்பதை நாம் இனங்கண்டதுடன், முறைமைப்படுத்தலில் அவர்களது இணக்கப்பாடுகளில் குறைகளை இனங்காண்பதில் இ.பி.ப.ஆ. செயல்திறனுடன் காணப்பட்டது.

கடந்த காலங்கள் தொடர்பான அமைவுறாமைகள் இனங்காணப்பட்டதுடன், அமைவுறுவதற்காக முன்னைய எடுத்துக்காட்டுகளில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்த சமயங்களில் ஏதேனும் எதிர்கால மீறல்களுக்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற தீர்மானத்தில் இ.பி.ப.ஆ. உறுதியாக இருந்தது.

இதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டானது பின்வருவனவற்றை கண்டது. ஓர் கடன் தரப்படுத்தல் முகவரினால் முறைமைப்படுத்தல் நியமங்களை மீறியமை மற்றும் முரண்பாட்டு நலன்களது கண்டுபிடிப்பு என்பவற்றின் காரணமாக ஓர் கடன் தரப்படுத்தல் முகவராக செயற்படுவதற்கான உரிமத்தினை இ.பி.ப.ஆ. புதுப்பிக்காமை, பல தரகுக் கம்பனிகள் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை சந்திக்காதபோது அத்தகைய குறைபாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தல் மற்றும் கடந்த காலங்களில் வெளிக்கொணரப்பட்ட நிகழ்வுகளிலான முதலீட்டாளர்களது முறைப்பாடுகளுக்கு துரித பதிலளித்தல்களை பொறுப்பேற்றல் என்பனவாகும். முக்கியமாக முதலீட்டாளர் முறைப்பாடுகள் தொடர்பாக, அனைத்து முறைப்பாடுகளும் ஓர் நேரகாலத்தினுள் கையாளப்பட்டு தீர்த்துவைக்கப்படுவதற்கான ஓர் முறையினை அறிமுகப்படுத்துவதற்காக கொ.ப.ப. உடன் இணைந்து நாம் செயலாற்றினோம்.

துரிதமான மற்றும் தீர்மானமான நடவடிக்கைக்களது எச்சரிக்கையானது முறைமைப்படுத்துபவரது மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு ஆற்றல்களின் பலத்தைப் போன்று நம்பத்தகுந்தமை ஆகையால் எமது பொறுப்புத்தீர்வில் உள்ள கருவிகளை நாம் மேம்படுத்துவது தலையாய முக்கியத்துவமானதாகும். எமது நோக்கங்களுக்கான நவீன மற்றும் சிறந்த பொருத்தமுடைய தொழில்நுட்பத்தின் கொள்வனவானது இ.பி.ப.ஆ. இல் நடந்துகொண்டிருப்பதுடன் இது சந்தை கண்காணிப்பு மற்றும் முறைமைப்படுத்தப்படுபவர்களது மேற்பார்வை என்பவற்றில் பயனுறுதிமிக்க விதத்தில் ஈடுபடுவதற்கான எமது செயல்திறனை பலப்படுத்துவதற்கு வசதியளிக்கும்.

### சர்வதேச ரீதியாக திறனளவிடப்பட்ட நியமங்கள்

கடந்த வருடத்தில், எமது மூலதனச் சந்தையின் தொடர்ச்சியான ஆரோக்கியம் மற்றும் முன்னேற்றத்திற்கு பொதுமக்களது நம்பிக்கை

மற்றும் முதலீட்டாளர்களது நம்பகத்தன்மை என்பவற்றை மீண்டும் அடைவதன் முக்கியத்துவத்தினை நாம் ஏற்றுக்கொண்டபோதும், 2015 ஆம் ஆண்டு முழுவதிலும் இந்த உள்ளுணர்வில் நாம் செயற்பட்டபோதும் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை என்பன இ.பி.ப.ஆ. க்கு மாத்திரம் பொருத்தமான உள்ளூர் அக்கறைகள் அல்ல என்பது குறித்து நாம் விழிப்பாயிருந்தோம்.

உள்ளூர் முறைமைப்படுத்தல் கட்டமைப்பானது சர்வதேச நியமங்களுடன் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்படும்போது இலங்கையானது உள்ளூர் முதலீட்டாளர்களிடம் மாத்திரமன்றி வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தும் ஆர்வத்தினை திரட்டுவதுடன் சந்தையானது நிறுவன முதலீட்டுத்தேக்க முதலீட்டாளர்களது குவிதலையும் அனுபவிக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். இந்த எல்லையை நோக்கி, பிணையங்கள் சந்தை முறைமைப்படுத்தலுக்கான உலகளாவிய நியமங்கள் அமைப்பவரான சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்களுக்கான ஒழுங்கமைப்பிடம் (ச.பி.ஆ.ஒ.) இலங்கையில் ஓர் தேசிய மீளாய்வினை நடாத்துமாறு வெற்றிகரமாக பிரதிநிதித்துவத்தினை மேற்கொண்டோம்.

ஓர் தேசிய மீளாய்வினை பெற்றுக்கொள்வதில் எமது வெற்றியானது அத்தகைய முறைமைப்படுத்தல் மீளாய்வுகளுக்கான உயர்ந்த சர்வதேச கேள்வியின் பின்னணியில் எழுந்துள்ளது. இது பிணையங்கள் முறைமைப்படுத்தலில் ச.பி.ஆ.ஒ. இன் 38 கொள்கைகளுக்கு நாம் அமைவுறுவதில் காணப்படும் இடைவெளிகளை இனங்காண்பதற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்பின்னர் இ.பி.ப.ஆ. உடன் கலந்தாலோசித்து ச.பி.ஆ.ஒ. இனால் முழுமையான இணக்கப்பாட்டிற்காக ஓர் திட்டமானது அபிவிருத்தி செய்யப்பட்டு அதன் அமுலாக்கலானது கட்டம் கட்டமாக இடம்பெறும்.

ச.பி.ஆ.ஒ. இன் தேசிய மீளாய்வு தொடர்பான ஆரம்ப கட்டவேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2016 இலும் தொடரும். அதன் பின்னர் இத்திட்டத்தின் அமுலாக்கலானது 2016 இன் இறுதியில் ஆரம்பிக்கப்படும்.

### மேம்படுத்தப்பட்ட வணிக நடத்தை

எமது முறைமைப்படுத்தலின் பயனுறுதித்தன்மையினை விதிகள் மாத்திரம் உறுதிப்படுத்த முடியாது. கண்காணிப்பினூடாக எமது சந்தை கண்காணிப்பின் வினைத்திறனை நாம் தொடர்ச்சியாக மேம்படுத்தும் அதேவேளை சுய முறைமைப்படுத்தல் மற்றும் சிறந்த வணிக நடத்தைகளின் மூலம் முறைமைப்படுத்தப்படுபவர்களது ஒத்துழைப்பு அவசியமாகும். இது இடையீட்டாளர்கள், கொ.ப.ப. மற்றும் ஏனைய சந்தை பங்குபற்றுனர்கள் மீதான நிலையான மற்றும் முழுமையான மேற்பார்வையினை பராமரிப்பதற்கும் முறைசார் இடர்நேர்கையில் எமது விழிப்புப் பணியினை உயர்வாக்குவதற்கும் வசதியளிக்கும்.

இடையீட்டாளர்கள் தொடர்பாக, எதிர்கால சந்தை அபிவிருத்திகளுடன் ஈடுகொடுக்கக்கூடிய கொள்திறனைக் கொண்டுள்ள திடமான நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு இ.பி.ப.ஆ. முனைகின்றது. இந்த நோக்கத்தில், முறைமைப்படுத்தப்படுபவர்களில் பிரயோகிக்கக்கூடிய விவேகமுள்ள தேவைப்பாடுகளின் மீளாய்வொன்று, ஒவ்வொருவரினாலும் பொறுப்பேற்கப்பட்ட இடர்நேர்கையினை இந்த மூலதன போதுமை தேவைப்பாடுகள் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, இ.பி.ப.ஆ. ஆல் ஆரம்பிக்கப்பட்டது.

### கூட்டாண்மை ஆளுகை மேம்படுத்தல்கள்

பட்டியலிடப்பட்ட கம்பனிகள் சந்தையில் ஓர் உறுதியான பங்களிப்பினை வகிக்கின்றன. பிணையங்களை வழங்குபவர்கள் அவர்களது வணிகத்தினை சட்டத்திற்கு இணங்க மற்றும் முதலீடு செய்யும் பொதுமக்களின் சிறந்த நலன்களை கருத்திற்கொண்டு நடாத்துவதனை உறுதிப்படுத்தல் இ.பி.ப.ஆ. இன் முன்னுரிமையாகும். அதேபோன்று கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் சிறப்பாக முகாமைப்படுத்தப்படுவதுடன் அவற்றின் வளர்ச்சி ஆற்றல் வளத்தினை புரிந்துகொண்டு பங்குச் சந்தைக்கு பெறுமதி சேர்த்தலும் முக்கியமாகும். முதலீட்டாளர் கேள்வியினை கவர்ந்து நிலைநிறுத்துவதற்காக, ஓர் பரிமாற்றகமானது அதனிடத்தில் கூட்டாண்மை ஆளுகையில் கடுமையான கொள்கைகளை கடைப்பிடிக்கும் கம்பனிகளை கொண்டிருத்தல் வேண்டும்.

எழுச்சியற்ற ஆளுகையானது கடந்த காலங்களில் வெறுப்பேற்றக்கூடிய நிதியியல் சிக்கல்களை ஏற்படுத்துவதில் வகித்த பங்கின் நிமித்தம், நிகழ் மற்றும் எதிர்கால முறைமைப்படுத்துபவர்கள் சந்தை முழுவதும் முக்கியமாக ஆளுகை நியமங்கள் உயர்த்தப்படுவதில் கவனஞ் செலுத்ததுல் வேண்டும். ஆளுகை கொள்திறனை கட்டியெழுப்புதலானது எமக்கு ஓர் முக்கியமான பொறுப்பாகும் என்பதுடன் உள்ளூர் கூட்டாண்மை ஆளுகை நியமங்கள் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு எதிரான இ.பி.ப.ஆ. இன் மீளாய்வானது தற்போது நடந்தவண்ணமுள்ளன.

### புதிய அபிவிருத்தி பொறுப்பேற்புகள்

எமது தற்போதைய மூலதனச் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகளில் பிரதானமாகக் காணப்படுவது கொ.ப.ப. இனை பரஸ்பரமற்ற தன்மையிலிருந்து உரித்துவம் பகிரப்பட்ட நிறுவனமாக மாற்றுவதும் மத்திய எதிர் தரப்பினர் முறையினை விரைவாக அமுல்படுத்துவதன் மூலம் மூலதனச் சந்தை கட்டமைப்பினை செயற்படுத்துவதும் ஆகும்.

முன்மொழியப்படும் பரஸ்பரமற்றதாக்கும் சட்டத்தின் மூலம் கொ.ப.ப. இன் பரஸ்பரமற்றதாக்குதலானது சாத்தியப்படுவதுடன், கொ.ப.ப. இன் அங்கத்தவர்களது வர்த்தகம் மேற்கொள்ளும் உரிமையினை உரித்துவம் மற்றும் முகாமைத்துவமானது பரிமாற்றகத்தின் மூலோபாய நலன்களை சிறப்பாக பின்பற்றுவதற்கு அவசியமாகும். இது கொ.ப.ப. இலுள்ள அனைத்து பங்காளிகளதும் நலன்களை சிறப்பாக

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு தொடர்ச்சி.

பிரதிநிதித்துவப்படுத்தும் : இது அதன் முறைமைப்படுத்துபவரான இ.பி.ப.ஆ. இன் முன்னுரிமையாகும். பரஸ்பரமற்றதாக்குவதற்கு எம்மிடம் தற்போது ஓர் வரைவுச் சட்டமூலம் காணப்படுவதுடன், இவ்வரைவுச் சட்டத்தின் போதுமையினை மீளாய்வு செய்வதற்கு தற்போது முனைவதுடன் இச்சட்டமூலத்தினை இ.பி.ப.ஆ. சட்டத்தை பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கும் அதே சமயம் சமா்ப்பிப்பதற்கு முன்னா் பங்காளிகளிடையேயான பெறுமதி ஒதுக்கத்தினை முடிவுறுத்த வேண்டியுமுள்ளது.

மத்திய எதிா் தரப்பினரை (ம.எ.த.) பொதுவான சந்தை உட்கட்டமைப்பின் ஓா் அங்கமாக நிறுவுவதனை உறுதிப்படுத்துவதற்காக இ.பி.ப.ஆ. கூட்டு நிதியளித்ததுடன், இது மூலதனச் சந்தையின் நிகழ்கால மற்றும் எதிர்கால தேவைகளுக்கு சிறப்பாக வசதியளிப்பதுடன் இந்தக் காரணிகளை பிரதிபலிப்பதற்காக கட்டமைக்கப்படும். பொருத்தமான இடா்நோ்கை முகாமைத்துவ பொறிமுறையுடன் நன்கு வடிவமைக்கப்பட்ட ம.எ.த. ஆனது சந்தையில் சொத்து ஒப்படைப்பினையும் தீா்ப்பனவு இடா்நோ்கையினையும் கையாள்வதுடன் நிதியியல் ஸ்திரத்தன்மைக்கு பங்களிப்பாற்றும். ம.எ.த. பொறிமுறையின் அமுலாக்கலானது எமக்கு முக்கியமான அக்கறையுள்ள விடயமாகும். அது நிறுவப்பட்டவுடன், இந்த ம.எ.த. ஆனது சந்தையினுள் செயற்திறனை அதிகரிப்பதுடன் உட்கட்டமைப்பினையும் மேம்படுத்தும். அத்துடன் இதன்பின்னா் புதிய கருவிகளது அறிமுகத்திற்கு அவசியமான முன்நிபந்தனைகளையும் நிவா்த்தி செய்யும்.

### நிதியியல் ரீதியாக அறிவுபடைத்த பங்குபற்றுனா்கள்

மூலதனச் சந்தை செயற்பாட்டில் முன்னணியிலுள்ள முதலீட்டாளா்களுக்கு அவா்களது முதலீடுகளிலிருந்து நலன்களை பெற்றுக்கொள்வதற்கு ஓரளவு மட்டத்திலான சுய உதவி அவசியமாகின்றது. எனவே, முதலீட்டாளா்களிடையே பரவலான நிதியியல் அறிவில் நாட்டமேற்படுத்துவது இ.பி.ப.ஆ. இன் ஓா் மூலோபாய அக்கறையாகும்.

2015 இல் நகர மற்றும் கிராமிய சூழல்களில் நாம் முதலீட்டாளா் கருத்தரங்குகள் நடாத்துவதனை தொடா்ந்தோம். எமது வெளிவாரி உறவுகள் அலகும் நேரகாலத்துடனான, பொருத்தமான மற்றும் மிகவும் இலகுவாக புரிந்துகொள்ளத்தக்க விதத்தில் மூன்று மொழிகளிலும் பிரபல்யமான பத்திரிகைகளில் வாராந்த அடிப்படையில் பிரசுரிப்பதற்கான கட்டுரைகளை உருவாக்கின.

எதிா்காலத்தில், இந்தக் கருத்தரங்குகளும் கட்டுரைகளும் குறிப்பிட்ட தேவைகளுக்கு எவ்வாறு செல்வத்தை கட்டியெழுப்புவது பற்றிய அறிவினை தற்போதைய மற்றும் சாத்தியப்படக்கூடிய முதலீட்டாளா்களுக்கு சக்தியளிப்பதிலும் ஆயத்தப்படுவதிலும் கவனஞ் செலுத்தும். இவை கல்வி தொடா்பான தேவையாக இருக்கலாம், இளைப்பாறுதலை எதிா்பாா்த்து அல்லது முற்றாக ஓா் வித்தியாசமான தேவையாகவும் இருக்கலாம்.

அவா்களது அறிவு மேம்படுத்தப்படும்போது, சந்தை நிலைமைகளை துல்லியமாக அளவிடுவதற்கு அவா்கள் சிறந்து தயாராக இருப்பதன் நிமித்தம் குறைவான முறைமைப்படுத்தல் தலையீடுகளும் செலவுகளும் தேவைப்படும். இதன் காரணமாக சந்தை தொழில்வல்லுனா்கள் நோக்கிய எமது மனப்போக்கானது தளா்வாகக் காணப்படும் என்ற அா்த்தமல்ல: பகுத்தறியும் முதலீட்டாளா்களது நம்பிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு இந்த தொழில்வல்லுனா்களுக்கு நடைமுறையிலுள்ள திறமைகளை கட்டியெழுப்புவதற்கான உறுதுணை தேவைப்படும். இந்த உறுதுணையானது அவா்கள் இ.பி.ப.ஆ. இன் தகுதிக் கட்டமைப்பில் மேலும் முன்னேறும்போது கிடைக்கின்றது.

கடந்த ஆண்டில், எமது மூலதனச் சந்தை கற்கை மற்றும் பயிற்றுவித்தல் அங்கமானது மூலதனச் சந்தை தொழில்வல்லுனா்களுக்கு அவா்களது தொழிலில் பல்வேறு கட்டங்களில் சான்றிதழளித்தல், உரிமமளித்தல் மற்றும் தொடா்ச்சியான தொழில்சாா் அபிவிருத்தி பாடக்கோப்புகளை நடாத்துவதனை தொடா்ந்தது. அத்துடன் 2016 இல் இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தை தகைமை வரைகூறுகள் மற்றும் கட்டமைப்பினை மேம்படுத்தி புதுப்பிப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### உள்வாரி கொள்திறன் கட்டியெழுப்புதல்

இ.பி.ப.ஆ. இல் எமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கொள்திறனை கட்டியெழுப்புதல் அவசியமானதாகும். இதன் காரணமாக, பொருத்தமான தொழில்நுட்ப திறமைகள், நிபுணத்துவம், அனுபவம் மற்றும் உயா்ந்த தரத்திலானதும் நோ்மையில் எவ்வித கேள்விக்குறியுமற்ற ஆளணியினரை கவா்வதும் தொடந்து வைத்திருப்பதும் முறைமைப்படுத்தல் கடப்பாடுகளை நிவா்த்தி செய்வதற்கான எமது ஆற்றல் தொடா்பாக தீா்மானமான காரணிகளாகும். சந்தை, அதன் பங்குபற்றுனா்கள் மற்றும் கருவிகள் வெளிப்படுவது தொடரும்போது அவ்வாறே இ.பி.ப.ஆ. இன் உள்வாரி கொள்திறன் மற்றும் நுட்பங்களும் தொடருதல் வேண்டும்.

2015 இல் இ.பி.ப.ஆ. மறுசீரமைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டு முகாமைத்துவ பயிற்சியாளா்கள் தொடா்பாக உயா்ந்த போட்டித்தன்மையுடைய ஆட்சோ்ப்பு செயல்முறை முன்னெடுக்கப்பட்டது. நடைமுறையிலுள்ள ஊழியா்களது திறமையினை மேம்படுத்துவது 2015 இல் எமது அக்கறைகளில் முதன்மையாகக் காணப்பட்டது.

### இ.பி.ப.ஆ. ஸ்ரீ லங்கா : உறுதியான மற்றும் தடுமாற்றமற்ற

2016 க்கும் அதற்கு அப்பாலும், நாம் எமது பங்காளிகளது உறுதுணையுடன், இலங்கையின் நீண்டகால நிதி திரட்டல் மற்றும் முதலீட்டிற்கு மூலதனச் சந்தையினை விருப்பப்படும் முறையாக ஆக்குவதற்கு அவசியமான ஆழத்தையும் அகலத்தையும் உருவாக்குவதற்கு எதிா்பாா்க்கின்றோம். இதற்கு, கட்டமைப்புசாா் மனோபலம், திடமான அடிப்படைகள் மற்றும் பலமான ஆளுகை ஆகிய மூன்று வெற்றிகளும் முக்கியமானவையாகும்.

இ.பி.ப.ஆ. இல் நாம் நிதி திரட்டுபவர்களுக்கும் அதேபோன்று முதலீட்டாளர்களுக்கும் வசதியளிப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், ஓர் பாதுகாப்பான மற்றும் நன்கு முறைமைப்படுத்தப்படும் சூழலினுள் புதிய மற்றும் நவீன நிதி திரட்டல் மற்றும் முதலீட்டு வழிகளை ஆராய்வதனையும் ஊக்கப்படுத்தவும் ஏதிர்பார்க்கின்றோம்.

சந்தையின் விரிவாக்கலுடன், துறைசார் ஆலோசனைகளுக்கான தேவை வளர்ச்சியடைவது போன்று நிதியியல் துறை முறைமைப்படுத்துபவர்களிடையே மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு பொறிமுறையின் அவசியமும் காணப்படுகின்றது. நிதியியல் துறையினை பொருத்தமான விதத்தில் முறைமைப்படுத்துவதற்காகவும், முறைமைப்படுத்தல் உறுதிப்பாடு மற்றும் கொள்கை என்பவற்றை உறுதிசெய்வதற்காகவும், திடமான உள்ளூர் நிறுவனங்களை கட்டியெழுப்புவதற்கும் இ.பி.ப.ஆ. இந்தத் தேவைகளை சந்திப்பதற்கு ஆயத்தாமாயுள்ளது.

சிறந்த, மிகவும் வசதியளிக்கக்கூடிய முறைமைப்படுத்தல், மிகவும் திடமான செயல்முறைகள் மற்றும் பொறிமுறைகளிலான எமது வற்புறுத்தல் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணையாக எமது பின்தொடரல்கள் என்பவற்றை பரிந்துரைப்பதில் இ.பி.ப.ஆ. உள்ள நாம் உறுதியோடும் தடுமாற்றமின்றியும் காணப்படுகின்றோம்.

இ.பி.ப.ஆ. தற்போது ஓர் திடமான அடித்தளத்தை நாட்டுவதற்கும் சந்தையினை அதன் ஆற்றல் வளமளவிற்கு வளர்ச்சியடைவதனை இயலுமையாக்குவதற்கும் புதிய கொள்கைகளை உருவாக்கிக்கொண்டுள்ளது. நாம் தற்போது புதிய சந்தை நிறுவனங்கள் மற்றும் புதிய கருவிகளது அறிமுகத்தினை இயலுமையாக்குவதிலும் செயலாற்றிக்கொண்டுள்ளோம். முனைப்பான கொள்கை உருவாக்கதினூடாக சமீபத்தைய மற்றும் நீண்டகால வாய்ப்புகள் மற்றும் தோற்றத்தில் அதன் வளர்ச்சிக்கு இத்தகைய காலப்பகுதியில் வசதியளிப்பதற்கும் எமது நம்பகத்தன்மையினை வெளிப்படுத்துகின்றது. தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு இவ்வருடம் முழுவதும் எமக்கு வழங்கிய வழிகாட்டல்களுக்கும் உறுதுணைக்கும் நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை இ.பி.ப.ஆ. இன் ஊழியர்களுக்கு எமது பொறுப்பாண்மையினை நிறைவேற்றுவதில் அவர்களது அயராத முயற்சிக்கும் கடப்பாட்டிற்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எவ்வாறாயினும், இது தொடர்பில் நாம் தனிமைப்படவில்லை: எமது சந்தையின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையளிக்கக்கூடிய ஓர் திடமான அடித்தளத்தை கட்டியெழுப்புவதற்கு இ.பி.ப.ஆ. க்கு உறுதுணையளித்த தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விடயங்களுக்கான அமைச்சு, கொழும்பு பங்கு பரிமாற்றகம், எமது ஏனைய முறைமைப்படுத்தப்படுபவர்கள் மற்றும் ஊடகங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனைத் தொடரும் பக்கங்கள் கணிசமான கூட்டு முயற்சியின் உச்சக்கட்டமாகும். சந்தையானது புதிய எல்லைகளினுள் நுழைவதற்கும் அதன் முற்றான ஆற்றல் வளத்தினை அடைவதற்கும் ஆயத்தாமாயுள்ள வேளையில் இலங்கையின் மூலதனச் சந்தையில் பாதுகாவலனாக இருப்பதற்கு இச்சமயத்தில் எழுந்து எம்முடன் இணையுமாறு நாங்கள் உங்களை வற்புறுத்துகின்றோம்.



**வஜிர விஜேகுணவர்தன**
*பணிப்பாளர் நாயகம்*

*25 மே 2016*

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்






1. திரு. எஸ். ஆர். ஆட்டிகல
2. செல்வி. டில்ஷானி விஜயவர்தன
3. திரு. பி. சமரசிரி
4. திரு. டி. என். ஆர். சிறிவர்தன
5. திரு. திலக் கருணாரத்ன






6. திரு. லசந்த விக்கிரமசிங்க
7. திரு. சுரேஸ் ஷா
8. திரு. ரனில் டி. விஜேசிங்க
9. செல்வி. மரீனா பர்னாந்து
10. திரு. ரஜீவ் அமரசூரிய

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தொடர்ச்சி.

### திரு. திலக் கருணாரத்ன- தலைவர்

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் அவரது நடுத்தரக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் அவர் அப்போதைய இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு கெம்பஸ்க்கு நுழைந்து இராசயன சாஸ்திரத்தில் இளமானி பட்டத்தைப் பெற்றார். முதுமானி யுகத்திற்கு முன்னர், அவர் வணிக முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பிற்கு பின்னரான டிப்ளோமா ஒன்றை பெற்றுக்கொண்டார். இவர் ஓர் பட்டய இராசயன விஞ்ஞானியாவார். திரு. கருணாரத்ன அவர்கள் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஜப்பான், இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் ஏனைய நாடுகளில் சந்தைப்படுத்தல் மற்றும் பொது முகாமைத்துவத்தில் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார். இவர் அத்துடன், ஜப்பானில் AOTS உச்ச முகாமைத்துவ கற்கைத்தொடர் 1991, ஓர் மூலோபாய முகாமைத்துவ கற்கைத்தொடர் (IIM அலஹாபாத் இந்தியா 1993) மற்றும் 1997 இல் இங்கிலாந்திலுள்ள ரீடிங் பல்கலைக்கழகத்தில் உயர்ந்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் AIT ஆகியவற்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்தார்.

திரு. கருணாரத்ன அவர்கள் ஓர் ஒப்படை அதிகாரியாக அப்போதைய RCyAF இல் தனது தொழிலை ஆரம்பித்து பின்னர் ஓர் பல்தேசிய கம்பனியில் முகாமைத்துவ பயிற்சியாளராக சேர்ந்து ஓர் குறுகிய காலப்பகுதியில் சிரேஷ்ட முகாமையாளராக உயர்வு பெற்றார். இதன் பின்னர் இவர் தனது சொந்த வணிகத்தை ஆரம்பித்து 37 வருடங்களின் பின்னர் தனது துறையில் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவராகக் காணப்பட்டார். இவர் பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தில் (PRI SL) சந்தைப்படுத்தல் திறமைக்காக ஓர் விசேட விருதினை வென்றார். இவர் வணிக சாதனைகள் மற்றும் சமூக சேவைக்கு பல விருதுகளைப் பெற்ற ஒருவராவார்.

1983 இல் ஸ்கந்திநேவிய நாடுகளுக்கு இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் அனுசரணையில் முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக் கோஷ்டியின் ஒரு அங்கத்தவராக திரு. கருணாரத்ன காணப்பட்டார். 2000 ஆம் ஆண்டுவரை 12 வருடங்களுக்கு இவர் ஓர் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்து தனியார் துறைக்கு மீண்டும் சேர்வதற்காக அவராகவே பதவி விலகினார். இவர் இலங்கை பணிப்பாளர் நிறுவகத்தின் வாழ்நாள் அங்கத்தவராதுடன், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர், லயன்ஸ் இயக்கத்தின் முன்னாள் பிரதி மாவட்ட ஆளுனர் மற்றும் ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஆவார். இவர் 2008 இலிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சபை அங்கத்தவரும், பிரிட்ஜ் விளையாட்டின் ஆளுகை அங்கமான இலங்கை பிரிட்ஜ் சம்மேளனத்தின் தலைவராக 2009 முதல் 2011 வரை பதவி வகித்தார். இவர் ஓர் விருப்பமிக்க பிரிட்ஜ் விளையாட்டு வீரராவார். இவர் வன விலங்குகளும் பறவைகளும் சேர்ந்த உயிரினங்களில் ஆர்வமிக்கவரும் ஓர் சுற்றுச்சூழல் பாதுகாப்பாளரும் ஆவார்.

### திரு. டி.என்.ஆர். சிறிவர்தன

திரு. டி. என். ஆர். சிறிவர்தன அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பூகோளவியலில் இளமானி (மேன்மை) பட்டத்தையும் இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டத்தையும் (LLB) பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் எல்.எல்.எம். பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பதிவுசெய்யப்பட்ட மாணவரும் ஆவார். இவர் தொழில் ரீதியாக ஓர் வழக்கறிஞர் ஆவார். திரு. சிறிவர்தன அவர்கள் 1988 இல் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் சேர்ந்தார். தற்போது இவர் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக கடமை புரிகின்றார். திரு. சிறிவர்தன அவர்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினதும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச்சபை ஆகியவற்றின் பதவிவழி அங்கத்தவராவார். இவர் இலங்கை காப்புறுதிச் சபையினதும் பதவிவழி அங்கத்தவராவார்.

### திரு. ரணில் டி விஜேசிங்ஹ

திரு. ரணில் விஜேசிங்ஹ அவர்கள் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்தவராக 2015 பெப்ரவரியில் நியமிக்கப்பட்டார்.

#### திறமை மற்றும் அனுபவம்

இவர் 35 வருடங்களுக்கும் அதிக தகமையின் பின்னரான அனுபவத்தைக்கொண்ட ஓர் நடைமுறை பட்டயக் கணக்காளர் மற்றும் சுயாதீன சர்வதேச முகாமைத்துவ ஆலோசகருமாவார். இவர் தனித்தன்மையுடைய சமநிலையான தனியார் துறையில் தனிப்பட்ட தொழில்முறைப்பணி மற்றும் தனியார் தொழில்களிடையேயும் பொதுத் துறையில் ஆலோசனை, சட்டபூர்வ மற்றும் முறைமைப்படுத்தல் பாத்திரங்களிடையேயும் உள்ளூர் மற்றும் வெளியூர் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

தனியார் துறையில் இவரது அனுபவமானது ஜோன் கீல்ஸ் குழுமம், பிரைஸ் வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ், இலங்கை மற்றும் பஹாமாசில் டெலோயிட் ஆகியவற்றில் சேவையாற்றியதனை உள்ளடக்குகின்றது. இலங்கையின் KPMG இல் பயிற்சியை பெற்ற இவர் ஜோன் கீல்சுடன் தனது தகமையின் பின்னரான தொழிலை ஆரம்பித்தார். அதன் பின்னர் வெளிநாட்டில் பஹாமாஸிலுள்ள நசவ்வின் டெலோய்ட்டுடன் தொழிலை ஆரம்பித்து பஹாமாஸின் விரிபோட்டில் ஓர் புதிய கிளையை நிறுவும் பொறுப்பு இவருக்கு ஒப்படைக்கப்பட்டு அதன் முதலாவது வதிவிட முகாமையாளராக பணிபுரிந்தார். நாட்டிற்கு திரும்பியவுடன், இவர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் குழுமத்தின் முதலாவது வியாபார அபிவிருத்தி பிரிவினை முன்னெடுத்து நிறுவியதுடன் பணிப்பாளர் வியாபார அபிவிருத்தியாக கடமையாற்றினார். இவரது பொறுப்பு பிரதான சபைக்கு மூலோபாய மீள்வழிநடத்தல், கூட்டாண்மை திருப்பங்கள், புதிய திட்ட மதிப்பிடல்கள், தனியார்மயமாக்கல் தொடர்பான கண்டறிதல் மற்றும் ஏலம், பொறுப்பேற்றல் மற்றும் சொத்து விற்பனைகள் ஆகியவற்றில் ஆலோசனை வழங்குவதாகும். இதன் பின்னர் கூப்பர்ஸ் அன்ட் லைப்ரன்ட் நிறுவனத்தினால் அதன் ஆலோசனை மற்றும் அறிவுரை சேவைகளை உயிர்ப்பூட்டுவதற்கும் மறுசீரமைப்பதற்கும் அதன் பங்குதாரராக வரவேற்கப்பட்டு, நிறுவனத்தின் உலகளாவிய இணைப்பின் பின்னர் பிரைஸ்வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் இலங்கையின் ஆலாசனை மற்றும் நிதியியில் அறிவுரை சேவைகள் பிரிவிற்கு தலைமையாகவும் பங்காளராகவும் கடமையாற்றினார்.

கடந்த தசாப்தத்தில் பொதுத் துறைக்கான இவரது பங்களிப்பானது பிரதானமாக வெளிநாட்டு ஒப்படைப்புகளிலாகும். பல நாடுகளிலுள்ள வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு பன்முக அபிவிருத்தி பங்காளிகளான ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் சார்பில் ஆலோசனை சேவையை மேற்கொள்வதாகும். இந்த ஒப்படைப்புகள் ஆர்மேனியா மற்றும் அசர்பஜான் போன்ற சோவியத் தேசங்களுக்குப் பின்னரான கவுகசுவின் பொது நிதியியல் முகாமைத்துவம் மற்றும் கொள்முதல் தொடர்பான ஆளுகை மற்றும் துறைசார் இடர்நேர்கை மதிப்பீடுகளுக்கு குழுத் தலைவராக கடமையாற்றியதனை உள்ளடக்கும். இவர் கிரிஜிஸ் குடியரசு, ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உட்கட்டமைப்பு தொடர்பான நிதியியல் முகாமைத்துவ மதிப்பீடுகள், திட்ட மதிப்பாய்வுகள், நிறுவன அபிவிருத்தி மற்றும் கொள்திறன் கட்டியெழுப்புதல் மதிப்பீடுகள் என்பவற்றை செயலாற்றியுள்ளார். அத்துடன் உலகவங்கி, UNESCAP, UNIDO, UNDP, IFAD, USAID மற்றும் விரெட்ரிக் நோமன் வவுன்டேசன் ஆகியவற்றிற்காகவும் ஒப்படைகளை பொறுப்பேற்றார்.

நாட்டிற்கு திரும்பியவுடன் 1989 - 1994 இடையிலும் 2001 - 2004 இடையிலும் இலங்கையின் பொதுத்துறைக்கு பங்களிப்பு செய்துள்ளார். 1989 - 1994 இடைப்பட்ட காலத்தில் அப்போதைய கைத்தொழில் அமைச்சருக்கு பல்வேறு ஆலோசனை பங்களிப்பினூடாக அப்போதைய கைத்தொழில்மயமாக்கல் மூலோபாயத்திற்கு கணிசமான பங்களிப்பினை மேற்கொண்டார். இவை ஆலோசனைக் குழுக்களில் சேவையாற்றல், பொருளாதார கொள்கை மற்றும் மூலோபாயம், முதலீட்டு ஊக்குவிப்பு, உள்ளூர் மற்றும் வெளியூர் நேரடி மற்றும் முதலீட்டுத் தேக்க முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக முதலீட்டு சலுகைகள் மற்றும் இறைவரிச் சலுகைகள் ஆகிவயற்றை உள்ளடக்கும். இவை மூலதனச் சந்தையினை புதுப்பித்து ஊக்குவித்ததுடன், யுனிட் ட்ரஸ்ட்ஸ் / மியூச்சல் வன்ட்ஸ், துணிகர முதலீட்டு கம்பனிகள் போன்றவற்றின் அறிமுகம் என்பவற்றுடன் அப்போதைய பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவினை தற்போதைய முதலீட்டுச் சபைக்கு உருமாற்றுவதனையும் உள்ளடக்கியது. 2003 - 2004 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஆணைக்குழுவின் அழைப்பின்பேரில் இ.பி.ப.ஆ. இனது பிரிவுகளது முறைமைப்படுத்தல் பயனுறுதித்தன்மையில் கண்டறிதல் மதிப்பீட்டினை மேற்கொண்டதுடன் மூலதனச் சந்தை அபிவிருத்தி மற்றும் முறைமைப்படுத்தல் பயனுறுதித்தன்மையினை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான மூலோபாய முன்னெடுப்புகளை வடிவமைத்தார். இது தொடர்பில் இவர் தற்போது இ.பி.ப.ஆ. மூலோபாய புதிய முன்னெடுப்புகள் நோக்கி தனது நேரத்தை அர்ப்பணிப்பு செய்கின்றார்.

### தொழில்சார் மற்றும் பட்டப்படிப்பின் பின்னரான தகமைகள்

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் சமூக அங்கத்தவராவதுடன், ஐக்கிய அமெரிக்க குடியரசின் பென்சில்வேனியாவிலுள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் பன்முக நிறுவனங்கள் மற்றும் அரசியல் இடர்நேர்கை பகுப்பாய்வு என்பவற்றில் பல்கலைக்கழகத்தின் பொது மற்றும் சர்வதேச விடயங்களது பட்டதாரி கல்லூரியிலும் கற்றுள்ளார்.

### ஏனைய தற்போதைய நியமனங்கள்

2015 பெப்ரவரியில், இலங்கையின் பாரிய வங்கியான இலங்கை வங்கியில் ஓர் சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இங்கு இவர் மார்ச் 2015 இலிருந்து சபைக் கணக்காய்வுக் குழுவின் தலைவராக சேவையாற்றுகின்றார். 2015 ஆம் ஆண்டில், இலங்கை வங்கியின் துணை நிறுவனமான ஹோட்டல் கொழும்பு (1963) லிமிடட்டில் பணிப்பாளராக சேவையாற்றினார். ஜூலை 2015 க்கும் ஜூன் 2016 க்கும் இடையில் ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ் பி.எல்.சி. இல் ஓர் சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராகவும் கடமையாற்றினார். இங்கும் இவர் கம்பனியின் கணக்காய்வுக் குழுவின் தலைவராக கடமை புரிந்தார்.

### முன்னைய நியமனங்கள்

இவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் முன்னாள் தலைவராவதுடன் 23 தேசங்களை உள்ளடக்கிய ஆசிய மற்றும் பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பினதும் முன்னாள் தலைவராவார். இவர் பின்வரும் நிறுவனங்களில் பின்வரும் பதவிகளை வகித்துள்ளார். ஆயோஜனா வன்ட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்டில் தலைவர், நெஷனல் வெல்த் கோப்பரேஷனின் ஸ்தாபக தலைவர், லங்கா வென்சர்ஸ் லிமிட்டட்டின் ஸ்தாபக தலைவர். அத்துடன் இவர் பின்வரும் தராதரத்திலும் சேவையாற்றியுள்ளார். வலு மற்றும் சக்தி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் ஆலோசனைக் குழுவின் தலைவர், முதலாவது நுகர்வோர் விடயங்கள் அதிகார சட்டத்தின் கீழ் முதலாவது நுகர்வோர் அலுவல்கள் சபையின் அங்கத்தவர், கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு கண்காணிப்புச் சபையின் அங்கத்தவர். 2000 - 2001 காலப்பகுதியில், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் அங்கத்தவராகவும், வணிக முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தின் ஆளுகைச் சபையின் அங்கத்தவராகவும், பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவராகவும், இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் பிரதான குழுவின் அங்கத்தவராகவும், இலங்கையின் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சம்மேளனங்களது கூட்டமைப்பின் ஆலோசகராகவும் சார்க் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.

## திரு. எஸ்.ஆர்.ஆட்டிகல

திரு. எஸ். ஆர். ஆட்டிகல அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஓர் உதவி ஆளுனராவதுடன் தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளராக கடமையாற்றுகின்றார். இவர் நாணய மற்றும் இறைவரிக் கொள்கை ஆகிய பிரிவுகளில் 25 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. ஆட்டிகல அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகத்தில் அளவியல் அபிவிருத்தி பொருளாதாரத்தில் முதுமானி பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானத்தில் இளமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

திறைசேரியின் பிரதிச் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் திரு. ஆட்டிகல அவர்கள் நிதி திட்டமிடல் அமைச்சின் இறைவரிக் கொள்கை திணைக்களம் மற்றும் அரச நிறுவனங்கள் திணைக்களம் ஆகியவற்றின்

# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் தொடர்ச்சி.

பணிப்பாளர் நாயகமாக செயலாற்றியுள்ளார். இவர் அரசாங்கத்தின் முயற்சியான இறைவரி ஒருங்கிணைப்பு செயல்முறைக்கு கணிசமானளவு பங்களிப்பை மேற்கொண்டுள்ளார். இவர் வருடாந்த பாதீட்டின் உருவாக்கத்திற்கு பங்களிப்பு செய்துள்ளதுடன் சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்காக தொழில்நுட்ப குழுவொன்றை வழிநடத்தியுள்ளார்.

திரு. ஆட்டிகல அவர்கள் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளராகவும் பதில் தலைவராகவும் இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையில் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு போன்ற முக்கியமான அரச நிறுவனங்களின் சபைகளில் சபை அங்கத்தவராக திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

தற்போது திரு. ஆட்டிகல அவர்கள் பிராந்திய அபிவிருத்தி வங்கி, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் வானூர்தி சேவைகள் என்பவற்றில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்.

### திருமதி. மெரினா பர்னாந்து

திருமதி. மெரினா பர்னாந்து அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டத்தையும் பொதுச் சட்டத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் டிசம்பர் 1993 இல் வழக்குரைஞராக அனுமதிக்கப்பட்டார். இவர் தற்போது வர்த்தகச் சட்டத்தின் அனைத்து பிரிவுகளிலும் சட்ட ஆலோசனைச் சேவையை வழங்குகின்றார்.

2004 ஜனவரியில் இவர் இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டம் மற்றும் அமுலாக்கல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஜூன் 2007 இல் இவர் இ.பி.ப.ஆ. இன் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு இப்பதவியில் 2007 முதல் 2009 வரை சேவையாற்றினார். ஜூன் 2007 முதல் ஜூன் 2008 வரையான காலப்பகுதியில் இவர் இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகத்தின் பணியிலிருந்தார்.

இவர் பின்வரும் முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகளில் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை வழிநடத்தினார்.

- பிணையங்களாக்குதலை முறைமைப்படுத்துவதற்கான சட்டத்தின் உருவாக்கம் (வர்த்தமானி, மார்ச் 2009)
- பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை நியமங்களது அறிமுகம்
- எல்லைக் கடன் வழங்குனர்கள், முதலீட்டு முகாமையாளர்கள் மற்றும் கடன் தரப்படுத்தல் முகவர்களுக்கான முறைமைப்படுத்தலது அறிமுகம்

காப்புறுதித் துறைக்கு நியமிக்கப்பட்ட முறைமைப்படுத்துபவராக இ.பி.ப.ஆ. நியமிக்கப்பட்ட காலப்பகுதியில் இவர் இலங்கை காப்புறுதிச் சபையின் சட்டம் மற்றும் அமுலாக்கல் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இ.பி.ப.ஆ. இல் இவரது நியமனத்திற்கு முன்னர் இவர் ஓர் தனிப்பட்ட சட்டத்துறை வழக்குரைஞராகவும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் மற்றும் முற்றிலும் உரித்துவத்தைக் கொண்ட கொ.ப.ப. இன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட (தனியார்) மத்திய வைப்பகத்திற்கும் சட்ட ஆலோசகராகவும் கடமையாற்றினார்.

### செல்வி. டில்சானி விஜயவர்தன

செல்வி. டில்சானி விஜயவர்தன அவர்கள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞராவதுடன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில், வர்த்தகச் சட்டத்தில் விசேடத்துவம், முதுமானி பட்டத்தையும் (LLM) பெற்றவருமாவார். சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வில் இலங்கையில் தகுதி முறையில் முதல் பத்து ஸ்தானத்தினுள் வந்ததுடன் அரசாங்கத்தின் "மஹாபொல அனுசரணை" வழங்கப்பட்டது. இலங்கையின் சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் தகுதி அடிப்படையில் இவர் முதல் 2% க்குள் அடங்கினார்.

கே. கணகீஸ்வரன், ஜனாதிபதி சட்டவுரைஞர், அவர்களது ஆலோசனை அறையில் 18 வருடங்களுக்கு மேலாக உயிர்ப்புள்ள சட்டத்துறை பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். இவர் கூட்டாண்மை, வங்கியியல், மற்றும் அறிவுசார் சொத்து மற்றும் காப்புறுதி, வர்த்தக நடுத்தீர்ப்பு உள்ளடங்களான வர்த்தக சட்ட விடயங்கள் போன்றவற்றில் முதன்மை மற்றும் மேன் முறையீட்டு வழக்காடல்களில் தனித்திறன் பெற்றுள்ளார். அத்துடன் கூட்டாண்மை, வங்கியியல், பிணையங்கள், காப்புறுதி மற்றும் ஏனைய வர்த்தக விடயங்களில் சட்ட அபிப்பிராயங்களை வரைதல் மற்றும் சீரமைத்தல் என்பவற்றிலும் ஈடுபட்டுள்ளார். இவர் கூட்டாண்மைச் சட்டம், வங்கியியல் மற்றும் நடுத்தீர்ப்பு தொடர்பான விடயங்களில் சட்ட ஆலோசனையையும் வழங்கியுள்ளார். இவர் சிங்கப்பூரிலுள்ள ஓர் முன்னணி சட்ட நிறுவனமான "சூக் லின் அன்ட் பொக்", வழக்குரைஞர்கள் மற்றும் மன்றாடியார்கள், இல் தொழில் அனுபவத்தையம் பெற்றுள்ளார். திருமதி விஜேவர்தன அவர்கள் பல மன்றங்களில், நடுத்தீர்ப்பு, அறிவுசார் சொத்து, கம்பனிச் சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டத்தின் பல்வேறு தோற்றங்கள் போன்ற தலைப்புகளில் பல கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

2014 இல் இவர் ஜனாதிபதி சட்டவுரைஞர் கே. கணகீஸ்வரனுடன் கூட்டுச்சேர்ந்து 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளை ஆராயும் "கம்பனிகள் சட்டம்" எனும் புத்தகத்தை எழுதினார்.

### திரு. ரஜீவ் அமரசூரிய

திரு. ரஜீவ் அமரசூரிய அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் இளமானி (LLB Hons) பட்டத்தைக் கொண்டுள்ளதுடன் ஓர் வழக்கறிஞருமாவார். இவர் முகாமைத்துவ பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CIMA) (UK) சமூக அங்கத்தவரும் ஓர் உலகளாவிய முகாமைத்துவ பட்டயக் கணக்காளரும் (CGMA) ஆவார்.

திரு.அமரசூரிய அவர்கள் உயர் நீதிமன்றம் மற்றும் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் முன்னர் வழக்கமான தொழில்நடத்துனராக கடமையாற்றுவதுடன் ஓர் கூட்டாண்மை மற்றும் சட்ட ஆலோசகருமாவார்.

2013 இல், திரு. அமரசூரிய அவர்களுக்கு முகாமைத்துவ பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (CIMA) 40 வயதுக்கு குறைந்த மிகவும் பிரபலமான CIMA அங்கத்தவராக CIMA நட்சத்திர தங்க விருது வழங்கப்பட்டது. இவர் இலங்கை சட்டக் கல்லூரியினால் 2003 இல் நடாத்தப்பட்ட வழக்கறிஞர் இறுதிப் பரீட்சையில் உயர் நிலையை அடைந்து தங்கப் பதக்கம் பெற்றதுடன் வேறு பல கல்வி உதவித்தொகைகள் மற்றும் விருதுகளைப் பெற்றுள்ளார். றோயல் கல்லூரியில் இவரது கடைசி பரிசு வழங்கல் விழாவில் ஆகக்கூடிய எண்ணிக்கையிலான பரிசில்களைப் பெற்ற தனித்தன்மை வாய்ந்தவராவார்.

திரு. அமரசூரிய அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீடத்தில் வரிச் சட்டத்தில் விஜயம்செய்யும் விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் இலங்கைச் சட்டக் கல்லூரியிலும் ஓர் பரீட்சகராக கடமையாற்றியுள்ளார். இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் 2015 தேசிய சட்டக் கருத்தரங்கின் தலைமையாகவும் 2014 தேசிய சட்டக் கருத்தரங்கில் அடிப்படை உரிமை நிறை அமர்வில் தலைவராகவும் இருந்துள்ளார். பொது சட்டத்தில் பல்வேறு மன்றங்களில் பல கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

திரு.அமரசூரிய அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர் சங்கத்தின் தற்போதைய தலைவருமாவார்.

### திரு. சுரேஷ் ஷ்சா

திரு. சுரேஷ் ஷ்சா அவர்கள் சிலோன் பெவரேஜர்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும் லயன் புரவரி (சிலோன்) பி.எல்.சி. ஆகியவற்றின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஆவார். இவர் கார்சன் கம்பர்பெச் பி.எல்.சி., புக்கிட் டாரா பி.எல்.சி. ஆகியவற்றின் பணிப்பாளரும் ஆவார்.

இவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இதற்கு முன்னரான தலைவரும் மற்றும் இலங்கை தொழில்தருநர் சம்மேளனத்தின் பிரதித் தலைவரும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மன்ற அங்கத்தவரும் ஆவார்.

இவர் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் சமூக அங்கத்தவரும் ஆவார்.

### திரு. பி. சமரசிரி

திரு. பி. சமரசிரி அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஓர் பிரதி ஆளுனராவார். பிரதி ஆளுனராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் இவர் இலங்கை மத்திய வங்கியில் உதவி ஆளுனர், நாணயச் சபையின் செயலாளர், இணக்கப்பாட்டு அதிகாரி, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் போன்ற சிரேஷ்ட பதிவிகளை வகித்துள்ளார். இவர் இலங்கை வங்கியாளர்கள் நிருவகத்தினதும் இலங்கைக் கடன் தகவல் மையத்தினதும் தலைவர் பதவியை வகிப்பதுடன், இலங்கை காப்புறுதிச் சபையின் அங்கத்தவரும் ஆவார்.

திரு. சமரசிரி அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியலில் இளமானி பட்டத்தையும் (BA Hons.) ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் பொருளியிலில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. சமரசிரி அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் புள்ளிவிபரங்கள், பொருளாதார கொள்கைகள், வங்கிகள் மற்றும் வங்கிகளல்லாத நிதி நிறுவனங்களது முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை, நிதியியில் முறை ஸ்திரத்தன்மை, கூட்டாண்மை ஆளுகை, நாணய முகாமைத்துவம், அந்நிய செலாவணிக் கொள்கைகள், நிதியியல் நுண்ணறிவு மற்றும் பிராந்திய அபிவிருத்தி ஆகிய பிரிவுகளில் 33 வருடங்கள் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. சமரசரி அவர்கள் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்படட பின்வரும் மூன்று புத்தகங்களை சிங்கள மொழியில் எழுதியுள்ளார். “நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள், வங்கி மற்றும் பொருளாதாரம்”, “அடிப்படை பொருளாதாரக் கொள்கைகள்” மற்றும் “பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள்” என்பனவாகும். இவர் பொருளாதாரம் மற்றும் நிதியியல் தலைப்புகளில் பல பிரசுரங்கள் மற்றும் பத்திரிகைகளில் பல்வேறு கட்டுரைகளை பிரசுரித்துள்ளார்.

### திரு. லசந்த விக்கிரமசிங்க

லசந்த விக்கிரமசிங்க அவர்கள் 2016 /2017 காலப்பகுதிக்கு இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தலைவராவார். இவர் 2006 இலிருந்து நிருவகத்தின் மன்ற அங்கத்தவராகவும் 2014 /2015 காலப்பகுதியில் நிருவகத்தின் பிரதித் தலைவராகவும் இருந்துள்ளார். இவர் 20 வருடங்களுக்கும் மேலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

விக்கிரமசிங்க அவர்கள் சர்வதேச கணக்காளர்கள் சம்மேளனத்தின் சிறிய மற்றும் நடுத்தர பயிற்சி குழுவின் பிரதித் தலைவருக்கு தொழில்நுட்ப ஆலோசகராவார். இவர் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் சபை அங்கத்தவரும் ஆசிய பசிபிக் கணக்காளர்களின் ஐக்கியத்தின் சபை அங்கத்தவருமாவார். இவர் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஆளுகை என்பவற்றை மேம்படுத்தும் குழுவின் தலைவருமாவார். தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனமானது தெற்காசிய நாடுகளிடையே சிறப்பாக சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகக்கான விருதுகளை ஒழுங்கு செய்கின்றது.

விக்கிரமசிங்க அவர்கள் 2009 -2010 காலப்பகுதியில் தொழில்சார் மன்றத்தினது அமைப்பின் பொருளாளராகவும் பி. ஆர். டி. சில்வா அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர்களின் பங்காளருமாவார். இவர் 1997 இலிருந்து நடைமுறையிலுள்ளார்.

இவர் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையில் அங்கத்தவராக பணியாற்றுவதுடன் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தின் பதவிவழி அங்கத்தவருமாவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்






1. வஜிர விஜேகுணவர்தன ( பணிப்பாளர் நாயகம்)
2. அயந்தி ஜயரத்ன (பணிப்பாளர், நிதி மற்றும் நிர்வாகம்)
3. துஷார ஜயரத்ன (பணிப்பாளர், வெளிவாரி தொடர்புகள் மற்றும் கண்காணிப்பு)
4. சிந்தக்க மெண்டிஸ் (பணிப்பாளர், வழக்காடல்கள்)
5. உஷா சிவகுருநாதன் ( உதவிப் பணிப்பாளர், மேற்பார்வை)






6. சுனெத் பெரேரா (உதவிப் பணிப்பாளர், மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்றுவித்தல்)
7. மனுரி விஜேசிங்க (உதவிப் பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்)
8. ஹர்சன பீரிஸ் சூரியப்பெரும (பணிப்பாளர், கூட்டாண்மை அலுவல்கள்)
9. அயந்தி அபேவிக்கிரம (பணிப்பாளர், சட்டம் மற்றும் அமுலாக்கல்)

சமூகமளிக்காதோர்: தம்மிக்க பெரேரா ( பிரதிப் பணிப்பாளர் நாயகம்)
இந்திகாப் சமீம் (பணிப்பாளர், ஆய்வு மற்றும் கொள்கை)

# பொருளியல் மீளாய்வு

### உலகளாவிய பொருளாதாரம்

தெளிவின்மை, தளம்பல் மற்றும் ஓர் பலமான அவநம்பிக்கையின் சாயல் என்பன உலகளாவிய பொருளாதாரத்தையும் வணிக செய்திகளையும் 2015 இல் ஆதிக்கம் செலுத்தின. ஆரம்ப கண்ணோட்டத்தில் மனநிலையானது சீனாவின் நிதியியல் சுழற்சியினால் நியாயப்படுத்தப்பட்டதுடன், எண்ணெய் விலையில் காணப்பட்ட தளம்பல்கள் மற்றும் பாரிய வெளித்தோன்றும் சந்தைப் பொருளாதாரங்களில் சில மேலும் பலவீனமடைந்து இதற்கு உடந்தையாகக் காணப்பட்டன. இந்த அபிவிருத்திகள் தாமாகவே நிகழவிருக்கின்ற உலகளாவிய பொருளாதார பின்னடைவுகளை குறிகாட்டவில்லை.

சிரிய சிக்கலில் வட அட்லான்டிக் ஒப்பந்த ஒழுங்கமைப்பு (NATO) அங்கத்தவரான துருக்கி மற்றும் ரஷ்யா என்பவற்றின் ஈடுபாடானது மத்திய கிழக்கு சிக்கலை அதிகமாக்கியதுடன் இவற்றின் எதிர்முனைகளது நிலைமையானது பரவலான கிளைத்தல்களைக் கொண்ட ஓர் நீடித்த முரண்பாட்டிற்கு வழிசமைத்தது. மற்றுமோர் ஒட்டியுள்ள அபிவிருத்தியாக 2014 இல் காணப்பட்ட எண்ணெய் விலையான அமெரிக்க டொலர்கள் 59.2 இலிருந்து 2015 இல் அமெரிக்க டொலர்கள் 37.2 ஆக உலகளாவிய எண்ணெய் விலையின் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது. இந்த அபிவிருத்தியானது பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் ஒழுங்கமைப்பினது (OPEC) எண்ணெயில் தங்கியுள்ள பொருளாதாரங்களின் கடுமையான சிரமத்தினை ஏற்படுத்தியது மாத்திமன்றி, மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பண உள்வருகைகளை நம்பியிருக்கும் சிறிய பொருளாதாரங்களான, முக்கியமாக இலங்கை போன்ற நாடுகளையும் பாதித்தன.

பாரிய பொருளாதாரங்களில் ஐரோப்பிய யூனியன் சில எதிர்பார்ப்புகளை காட்டியபோதிலும், மீண்டும் ஒருமுறை அதன் பாதிப்பை வெளிப்படுத்தியது. தவறுதல் முறிவிலிருந்து நாட்டை காப்பதற்காக கிரீஸ் நாட்டிற்காக பணமனுப்பலற்ற பிணை, சமூக பொருளாதார சமநிலையில் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்த சிரிய நாட்டின் புலம்பெயர் நெருக்கடிகள், நிகழவிருக்கின்ற பிரெக்ஸிட் கருத்து வாக்கெடுப்பு மற்றும் பாரிஸ் மற்றும் பிரசல்ஸ் தாக்குதலுடனான பயங்கரவாத ஆபத்து அனைத்தும் ஐரோப்பிய யூனியன் கொள்கை அமைப்பாளர்களில் தொடர்ச்சியாக சுமையை அளித்தன.

ஆனால் இவ்வருடத்தின் பாரிய தலையங்கமாக காணப்பட்டது சீனாவின் பாரிய சுருக்கல், யூவான் பெறுமதியிறக்கத்தினால் சங்கிரகிக்கப்பட்டு அதனுடனிணைந்த பொருளாதார தீவர் தரையிறக்கம் என்பனவாகும். சீனாவின் மக்கள் வங்கியானது சந்தை சார்ந்த பொருளாதாரம் நோக்கிய சீனாவின் முன்னேற்றத்திற்கேற்றாற்போல் யூவான் பெறுமதியிறக்கத்திற்கு அனுமதித்தது. வருடத்தின் இறுதிப்பகுதியில், சீனாவின் ஒதுக்கமானது அமெரிக்க டொலர்கள் 3.3 டிரில்லியனாகக் காணப்பட்டதுடன் மேலதிக பெறுமதியிறக்கத்திற்கு எதிராக தம்மை பாதுகாத்துக்கொள்வதற்காக சீனாவின் மக்கள் வங்கியானது யூவானை தீவிரமாக பாதுகாத்ததை காணக்கூடியதாயிருந்தது.

ஒரு சமயத்தில் எதிர்காலத்திற்கான வெளிச்ச வீடாகக் கருதப்பட்ட பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா) பலவீனமான பேரளவு பொருளாதார வகைகளினால் தடங்கலபட்டு காணப்பட்டது. துவளும் எண்ணெய் விலையின் நிமித்தம் ரஷ்யா பின்னடைவிற்கு தள்ளப்பட்டது, தென் ஆபிரிக்கா விளிம்பில் காணப்பட்டது, பிரேசில் பொருளாதாரச் சுருக்கத்தினை தவிர்க்க முடியாதும் இந்தியா மாத்திரம் ஓரளவு ஒத்த இயல்பினை காட்டக்கூடியதாகவும் இருந்தது.

உலக வங்கியின் பிரகாரம், உலகளாவிய பொருளாதாரமானது 2015 இல் 2.4% ஆல் விரிவடைந்தது. உயர்ந்த வருமானத்தையுடைய நாடுகளது வளர்ச்சியான 1.6% உடன் ஒப்பிடும்போது ஐக்கிய அமெரிக்கா அதன் களத்தில் சிறந்த செயற்திறனுடையவராக 2.5% வளர்ச்சியுடன் காணப்பட்டது. தெற்காசியா மீண்டும் 7.0% வளர்ச்சியுடன் முன்னணி வகித்ததுடன் இந்தியா 7.3% வளர்ச்சியுடன் முன்நிலை வகித்தது. (உருவம் 01)

### உள்ளூர் பொருளாதாரம்

உலகளாவிய சிரமங்களின் மத்தியில் இலங்கைக்கு ஓர் கலவையான ஆண்டாக 2015 காணப்பட்டது. வருடத்திலிருந்து வருடம் அடிப்படையில் உலகளாவிய போட்டித்தன்மை மற்றும் வணிகம் மேற்கொள்ளல் தரப்படுத்தல்கள் அரங்கத்தில் உலக வங்கி தரப்படுத்தலில் காணக்கூடிய முன்னேற்றங்கள் இருந்தன. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் இலங்கை SAARC (பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கம்) இன் நடுக்கோட்டிற்கு சற்று மேலாகவும் ASEAN (தென் கிழக்காசிய தேசங்களின் சங்கம்) நடுக்கோட்டிற்கு சற்று குறைவாகவும் மதிப்பிடப்பட்டது. (உருவம் 02)

பாரிய பொருளாதார சுட்டிக்காட்டிகளில் ஓரளவு நம்பிக்கை காணப்பட்டது. மொத்த உள்ளூர் உற்பத்தியானது (மொ.உ.உ.) (அடிப்படை ஆண்டு 2010) 2015 இல் 4.8% ஆக வளர்ச்சியடைந்து அமெரிக்க டொலர்கள் 82 பில்லியன் இலக்கை எட்டியதுடன் மொ.உ.உ. தலா வருமானமானது அமெரிக்க டொலர்கள் 3,924/= இனை எட்டியதுடன் உயர் நடுத்தர வருமான நிலைமையான அமெரிக்க டொலர்கள் 4,125 இனை எட்டும் தூரத்தில் காணப்பட்டது. (உருவம் 03)

பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக நாணயக் கொள்கையானது இறுக்கமாக்கப்பட்டது, 12 மாத திறைசேரி உண்டியல்களுக்கான வட்டி வீதம் 2014 இல் 6.0% இலிருந்து 2015 இல் 7.3% ஆக அதிகரித்ததுடன் தனியார் துறைக்கான கடனளிப்பானது 2014 இல் காணப்பட்ட 8.8% தாழ்நிலையிலிருந்து 2015 இல் அளவுக்கதிகமான 25.1% இனை எட்டியது.

காணக்கூடிய சாதனைகளுக்கு மத்தியிலும் கணிசமான சவால்கள் மற்றும் அக்கறைகள் தொடர்ந்திருந்தன. வர்த்தகப் பற்றாக்குறையானது தொடர்ந்தும் அதிகரித்து அமெரிக்க டொலர்கள் 8.4 பில்லியனை அடைந்ததுடன் இதற்கும் மேலாக மொ.உ.உ. வளர்ச்சியுடன் ஏற்றுமதிகள் வளர்ச்சியடையா சிக்கல்களும் காணப்பட்டன. பாதீட்டு பற்றாக்குறையானது 2014 இல் 5.7% இலிருந்து 2015 இல் மொ.உ.உ.இன் 7.4% ஆக உயர்வடைந்தது. நடைமுறைக் கணக்கின் நிலுவையானது ஓரளவு முன்னேற்றத்தினை காட்டினாலும் தொடர்ந்தும் மொ.உ.உ. இன் 2.4% எதிர்மறையாக காணப்பட்டது.

மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் அமெரிக்க டொலர்கள் 7,300 மில்லியனாக அல்லது 4.6 மாத இறக்குமதிக்குச் சமனாக காணப்பட்டன. பற்றாக்குறை பொருளாதாரங்கள் மற்றும் பலவீனமான வெளிவாரி நிலைமைகளினால் உந்தப்பட்ட இலங்கை ரூபாயானது 9.03% ஆல் பெறுமதியிழக்கப்பட்டு ஒரு டொலர் ரூபா 144.06 ஆகக் காணப்பட்டது. (உருவங்கள் 04, 05)

வெளிநாட்டு நேரடி முதலீடும் (வெ.நே.மு.) ஓர் முடக்கப்பட்ட எண்ணாகக் காணப்பட்டது. வெ.நே.மு. ஆனது 2014 இல் அமெரிக்க டொலர்கள் 894 மில்லியனிலிருந்து 2015 இல் அமெரிக்க டொலர்கள் 681 மில்லியனாகக் குறைவடைந்தது. பண உள்வருகைகளும் 2014 இல் காணப்பட்ட அமெரிக்க டொலர்கள் 7,018 மில்லியனிலிருந்து 2015 இல் அமெரிக்க டொலர்கள்

6,980 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு எதிர்மறையாக உல்லாசத் துறை வருமானங்கள் மாத்திரமே 2014 இல் காணப்பட்ட அமெரிக்க டொலர்கள் 2,431 மில்லியனிலிருந்து 2015 இல் அமெரிக்க டொலர்கள் 2,981 மில்லியனாக அதிகரித்தது.

ஆனால் பொருளாதார நிலையின் ஆபத்தான நிலைமையானது பாரிய பொருளாதார மாறிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. விச் ரேட்டிங்ஸ் நிறுவனமானது இலங்கையினை ஓர் எதிர்மறையான கண்ணோட்டத்தில் பின்வரும் காரணங்களுக்காக B+ ஆக தரமிறக்கியது. ஓர் பலவீனமான வெளிவாரி திரவத்தன்மை நிலைமை, கணிசமான கடன் முதிர்வுகள் மற்றும் தொடர்ச்சியான தாழ் இறைவரி வருமானங்கள் என்பவற்றுக்காகும். மேலும் மொ.உ.உ. இன் அரசாங்க வருமானமான 13% ஆனது நடைமுறையிலுள்ள கடன் சேவைத் தேவைப்பாடுகளுடன் பார்க்கும்போது நீடிப்புத்திறனற்றதாகக் காணப்படுகின்றது. இந்தத் தரமிறக்கமானது நாட்டின் பாரிய பொருளாதார மாதிரிகளை பலவீனப்படுத்துவதுடன் அதிகரித்த இடர்நேர்கை முகத்தோற்றத்தின் காரணமாக எதிர்கால கடன்பெறல் கிரயங்களை அதிகரிக்கும்.

**உருவம் 01 : மெய்யான மொத்த உள்ளூர் உற்பத்தியின் வளர்ச்சி 2015**




**உருவம் 02: வணிகம் மேற்கொள்வதில் இலகுத்தன்மை சுட்டி - 2016**




**உருவம் 03: மொத்த உள்ளூர் உற்பத்தி - ஸ்ரீலங்கா**




**உருவம் 04: மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கம்**



# பொருளியல் மீளாய்வு தொடர்ச்சி.

**உருவம் 05: நாணயமாற்று விகித அசைவுகள் - ஒரு டொலருக்கான ரூபாக்கள்**




தற்போதைய பொருளாதாரத்தில் எதிர்வரும் வருடத்திற்கான நிதியளித்தல் இடைவெளியானது அமெரிக்க டொலர்கள் 2.5 பில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக இலங்கை அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அமெரிக்க டொலர்கள் 1.5 பில்லியன் தொகையினை இந்த இடைவெளியினை நிரப்புவதற்காக வேண்டியுள்ளது. இந்தியாவுடனான நாணய பரிமாற்று வணிகமான அமெரிக்க டொலர்கள் 1.1 பில்லியன் சிற்றிடைவெளி திரவத்தன்மை ஏற்பாடாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசாங்கமானது வித்தியாசமாக காணப்படும் தொகைக்கு ஏனைய இருதரப்பு மற்றும் பலதரப்பு கொடையாளிகளை நாட உள்ளது. (உருவம் 06)

**உருவம் 06 அரசாங்கக் கடன் தரப்படுத்தல்கள்**

| விட்ச் ரேட்டிங் - 2016 | |
|---|---|
| மலேஷியா | A - உறுதியானது |
| தாய்லாந்து | BBB + உறுதியானது |
| இந்தியா | BBB - உறுதியானது |
| பங்களாதேஷ் | BB - உறுதியானது |
| வியட்நாம் | BB - உறுதியானது |
| இலங்கை | B + எதிர்மறையானது |
| பாக்கிஸ்தான் | B |

*தரவு மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2015*
*உலகளாவிய பொருளாதார வாய்ப்பு வளம் ஜனவரி 2016*

முன்னோக்கிச் செல்லும்போது அரசாங்கமானது இறைவரி ஒழுக்கம், பாரம்பரிய இறைவரி ஆதிக்கத்திலும் பார்க்க ஓர் சுயாதீனமான நாணயக் கொள்கை மற்றும் பாரிய பொருளாதார பிறழ்வுகளை தீர்ப்பதில் உயரிய வினைத்திறன் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு ஆர்வமாயுள்ளது. அரசாங்கமானது, ச.நா.நி. உதவியானது நிதியளித்தல் தேவைப்பாடுகளுக்கும் அப்பால் செல்வதுடன் ஏனைய கொடையாளிகளான உலக வங்கி மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் ஆகியோர் ச.நா.நி. உதவியினை பின்தொடருவார்கள் எனும் அபிப்பிராயத்தினைக் கொண்டுள்ளது.

மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டிகளுக்கு அமைய அரசாங்கமானது மொ.உ.உ. வளர்ச்சிக்கு புதிய மார்க்கங்களை தேடுவதுடன் நடைமுறையிலுள்ள நெரிசலான இறைவரி இடைவெளியினை விடுவிப்பதற்காக பாரம்பரிய கடன் நிதியளிக்கப்பட்ட நீண்டகால மூலதன செலவினங்களிலும் பார்க்க உரித்துடமை நிதியளிக்கப்பட்ட உட்கட்டமைப்பினை இலக்கு வைக்கின்றது.

உலக வங்கியின் பிரகாரம், தாழ் நடுத்தர வருமான நிலைமையினுள் சிறைபிடிக்கப்பட்டுள்ள இலங்கையானது 2016 இல் அதன் மொ.உ.உ. 5.3% இனால் வளர்ச்சியடையுமாயின் உயர்ந்த நடுத்தர வருமான ஆதிக்கத்திற்கு உயரலாம். தற்போதைய சூழலில், சிரமமான உலகளாவிய சூழல், அதனுடனிணைந்த மெதுவான பொருளாதார அபிவிருத்தி, அவ்வாறு நடந்துகொள்வது பாரிய செயற்பணியாக இருக்கின்றது.

# மூலதனச் சந்தை மீளாய்வு

பாரிய பொருளாதாரக் காரணிகளின் சங்கமத்தின் நிமித்தம் 2015 இல் உலகளாவிய சந்தைகளிடையே காணப்பட்ட தளம்பல்களின் மத்தியில், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது (கொ.ப.ப.) அதன் மீளெழும்தன்மையினை நிரூபித்தது. அளவை மட்டக்குறியான அனைத்து பங்கு விலைச்சுட்டி (அ.ப.வி.சு.) மற்றும் எஸ் அன்ட் பி எஸ் எல் 20 சுட்டி என்பன முறையே 5.5% மற்றும் 11.0% ஆல் வீழ்ச்சியடைந்தன. (உருவம் 07)

அளவு மட்டக்குறி அ.ப.வி.சு. மீளாய்வாண்டில் 404.5 புள்ளிகள் வீழ்ச்சியினை பதிவுசெய்து 6,894.5 புள்ளிகளாக நிறைவடைந்தது. பாரிய கம்பனிகளை உள்ளடக்கிய எஸ் அன்ட் பி 20 எஸ் எல். சுட்டி 463.8 புள்ளிகள் வீழ்ச்சியடைந்து 2015 டிசம்பர் 31 இல் 3,625.6 புள்ளிகளாக நிறைவடைந்தது.

2015 இல் உலகளாவிய பங்குச் சந்தைகள் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தன. கொ.ப.ப. 2015 இல் 5.5% ஆல் வீழ்ச்சியடைந்ததுடன் கொ.ப.ப. இல் காணப்பட்ட தளம்பல்களுக்கு வெளியூர் மற்றும் உள்ளூர் காரணிகள் காரணமாயிருந்தன. இந்தக் காரணிகள் உள்ளூர் வட்டி வீதங்களிலான ஓரளவு அதிகரிப்பு, அரசியல் ஸ்திரமற்றதன்மை, உள்ளூர் நாணயமாற்று விகிதத்திலான பெறுமதியிழப்பு என்பவற்றுடன் உலகளாவிய காரணிகளான பண்டங்களது விலையிலான வீழ்ச்சி, முக்கியமாக எண்ணெய், அமெரிக்க மத்திய வங்கியினால் வட்டி வீதங்களிலான அதிகரிப்பு மற்றும் சீனாவின் பொருளாதார மீள்சமநிலைப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இதற்கும் மேலாக, அமெரிக்க டொலருக்கெதிராக பல உலக நாணயங்கள் வீழ்ச்சியடைந்தன, சதவீத அடிப்படையில் பல இரட்டை இலக்கங்களினால் வீழ்ச்சியடைந்தன.

சந்தை மூலதனவாக்கம் என்பது ஏதாவது ஒரு நேரத்தில் பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் கம்பனிகளது நிலுவையிலுள்ள பங்குகளது மொத்தப் பெறுமதியாகும். கொ.ப.ப. இல் சந்தை மூலதனவாக்கமானது 5.3% ஆல் வீழ்ச்சியடைந்து மீளாய்வாண்டில் ரூபா 2,938.0 பில்லியனாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டில் சந்தை மூலதனவாக்கமானது ரூபா 3,104.9 பில்லியனாகக் காணப்பட்டது.

விலை உழைப்பு விகிதமானது பங்குகளின் பெறுமதியினை பிரதிபலிக்கின்றது. முன்னைய ஆண்டில் நிலவிய போக்கினை ஒத்தாற்போல் இந்த வருடத்திலும் விலை உழைப்பு விகிதமானது 19.6 மடங்கிலிருந்து 17.9 மடங்காக வீழ்ச்சியடைந்தது. குறைவடைந்த புரள்விற்கேற்றாற்போல் கொ.ப.ப. இல் பங்குகளது வர்த்தக அலைவெண்ணும் வீழ்ச்சியடைந்தது. வர்த்தக அலைவெண்ணானது பங்குச் சந்தையில் காணப்படும் திரவத்தன்மையினது அடையாளமாக உள்ளது. வருடத்தின் இறுதியில் கொ.ப.ப. இல் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளின் எண்ணிக்கையானது 294 ஆகக் காணப்பட்டது.

பிராந்திய போக்குகளுக்கேற்றாற்போல், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிக பாதுகாப்புடைய முதலீட்டு நிலைமைகளுக்கு மாறியதுடன், கொ.ப.பரிவர்த்தனையும் வெளிநாட்டு நிதி வெளிப்பாய்ச்சல்களை எதிர்கொண்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொ.ப.ப. இல் தேறிய விற்பனையாளர்களாகக் காணப்பட்டதுடன் கொ.ப.ப. முன்னைய

**உருவம் 07: சந்தைச் செயற்திறன் - 2015**



# மூலதனச் சந்தை மீளாய்வு தொடர்ச்சி.

ஆண்டின் ரூபா 21 பில்லியன் திரண்ட தேறிய உட்பாய்ச்சலோடு ஒப்பிடும்போது 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூப 5.3 பில்லியன் திரண்ட தேறிய வெளிப்பாய்ச்சலை பதிவுசெய்தது. இருப்பினும், சிதறலான உள்ளூர் நிறுவன முதலீட்டாளர்கள் ஓரளவிற்கு வெளிநாட்டு உரித்துவ வெளிப்பாய்ச்சலை ஈடுசெய்தார்கள். இது உலகளாவிய தளம்பலான சூழலுக்கு எதிராக ஓர் கிரமமான சந்தை சீரமைப்பிற்கு வழிசமைத்தது. அதேசமயம், மீளாய்வாண்டில் உள்ளூர் சிற்றளவு முதலீட்டாளர்கள் பெருமளவு பங்குபற்றாது காணப்பட்டார்கள். மொத்த சந்தை புரள்வில் உள்ளூர் தனிநபர் முதலீட்டாளர்கள் 35.2% பங்களிப்பினை செய்தவேளை உள்ளூர் கம்பனிகள் 30.4% க்கு பங்களிப்பு செய்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் 2015 இன் மொத்த புரள்வில் 34.6% பங்களிப்பினை மேற்கொண்டார்கள். (உருவம் 08)

**உருவம் 08: முதலீட்டாளர் பங்களிப்பு**

| | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|
| வெளிநாட்டு கம்பனிகள் | 32.8% | 26% | 34.3% |
| வெளிநாட்டு தனிநபர்கள் | 1.6% | 1.6% | 1.8% |
| மொத்த வெளிநாட்டு முதலீட்டாளர்களது பங்களிப்பு (%) | 34.4% | 27.6% | 36.1% |
| உள்ளூர் கம்பனிகள் | 30.4% | 34.7% | 30.4% |
| உள்ளூர் தனிநபர்கள் | 35.2% | 37.7% | 33.5% |
| மொத்த உள்ளூர் முதலீட்டாளர்களது பங்களிப்பு (%) | 65.6% | 72.4% | 63.9% |

வருடத்தின் முதலாம் காலாண்டின் முதல் இரண்டு கிழமைகளில் சந்தையானது ஓர் ஆரவாரமான கொள்வனவினை சந்தித்ததுடன் இது மட்டக்குறி சுட்டிகளில் ஓர் செங்குத்தான அதிகரிப்பினை விளைவித்தது. எவ்வாறாயினும், உயர்வடையும் உந்துவிசையானது நீடிக்காததன் நிமித்தம் சந்தையானது முதலாம் காலாண்டின் இறுதிப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணியாக ஆகஸ்ட் 2015 இல் பொதுத் தேர்தல் நிலுவையிலிருந்ததன் நிமித்தம் வியாபித்திருந்த அரசியல் ஸ்திரமற்றதன்மையாகும். அ.ப.வி.சு. இவ்வருடத்திற்கான ஆகக்குறைந்த மட்டமான 6,782.4 புள்ளிகளை மார்ச் 30 இல் எட்டியது.

வருடத்தின் இரண்டாம் காலாண்டில், மட்டுப்படுத்தப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் காணப்பட்டதுடன் இது விலைச் சுட்டிகளது மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தின. எவ்வாறாயினும், கொள்வனவு நடவடிக்கைகளை நீடிக்க முடியாததன் காரணமாக சுட்டியானது 2015 ஜூலையில் 6,923.7 புள்ளிகளாக வீழ்ச்சியடைந்து நிறைவுசெய்தது. ஏனெனில் இதன் பின்னரான உள்ளூரில் காணப்பட்ட அரசியல் ஸ்திரமற்றதன்மை மற்றும் உலகளாவிய நிகழ்வுகள் உள்ளூர் முதலீட்டாளர்களை அவதானமாக வைத்தது. இதற்கும் மேலாக, வெளித்தோன்றும் சந்தை நிதியங்களிலிருந்து ஒட்டுமொத்த உலகளாவிய விற்பனை நெருக்கடியின் நிமித்தம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையிலிருந்து வெளியேறுவதில் சுறுசுறுப்பாய் இருந்தார்கள். சாத்தியமான கூட்டாண்மை உழைப்புகளின் மத்தியிலும் இவ்விரு மாறிகள் மாத்திரம் சந்தையில் புள்ளிகள் வீழ்ச்சியடைவதற்கு உந்துவிசையாகக் காணப்பட்டன.

வருடத்தின் மூன்றாம் காலாண்டில், பங்குச் சந்தையில் ஓர் செங்குத்தான மீளுயர்வு காணப்பட்டது. அ.பி.வி.சு. 311.2 புள்ளிகளால் உயர்வடைந்தும் எஸ். அன்ட். பி. எஸ். எல். 20 சுட்டியானது 199.9 புள்ளிகளாலும் உயர்வடைந்தன. சுட்டிகளில் காணப்பட்ட அதிகரிப்பிற்கு நாட்டில் ஏற்பட்ட அரசியல் அபிவிருத்திகள் காரணியாயிருந்தன.

வருடத்தின் இறுதி காலாண்டில், பங்குச் சந்தையானது எதிர்பார்த்தளவுக்கு செயற்பட தவறியதுடன், அ.ப.வி.சு. வருட இறுதியில் 6,894.5 புள்ளிகளாக நிறைவடைந்தது.

### வளத் திரட்டு - முதன்மைச் சந்தை

உயர்வான சந்தை தளம்பலானது வருடம் முழுவதும் எச்சரிக்கையான முதலீட்டுத் தொனியினை விளைவித்தது. இவ்வாண்டில் இரண்டு (உரித்துவ) ஆரம்ப பொது வழங்கல்கள் மாத்திரமே காணப்பட்டன. இரண்டு உரித்துவ பட்டியலிடல்களும் ரூபா 329.5 மில்லியனை திரட்டின. முன்னைய ஆண்டில் 5 பட்டியலிடல்களில் ரூபா 2,693.8 மில்லியன் திரட்டப்பட்டது (உருவம் 09)

**உருவம் 09: ஆ.பொ.வ. 2015 (உரித்துவம்)**

| பெயர் | ஒதுக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | பட்டியல்படுத்தப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | பங்கொன்றிற்கான விலை (ரூபா) | திரட்டிய தொகை (ரூபா) | பட்டியலிடப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| ஆர்ப்பிக்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. | 6,630,400 | 66,230,407 | 12.00 | 79,564,800.00 | 16 ஜனவரி 15 |
| சிங்ஹ ஹொஸ்பிட்டல் லிமிட்டட் | 100,000,000 | 398,225,895 | 2.50 | 250,000,000.00 | 21 ஏப்ரல் 15 |

மீளாய்வாண்டில் 25 கடன் ஆ.பொ.வ. காணப்பட்டதுடன் இவை ரூபா 83.4 பில்லியனை திரட்டின. 2014 ஆம் ஆண்டில் இது ரூபா 54.2 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2015 இல் கடன் ஆ.பொ.வ. ஊடாக திரட்டிய தொகையில் கணிசமான அதிகரிப்பினை காண்பிக்கின்றது. உரிமை வழங்கல்களூடாக திரட்டிய தொகையும் 2015 இல் கணிசமான அதிகரிப்பினை காட்டியது. 2014 இல் திரட்டப்பட்ட ரூபா 8.1 பில்லியனுடன் ஒப்பிடும்போது 16 உரிமை வழங்கல்களூடாக ரூபா 16.2 பில்லியன் திரட்டப்பட்டது.

மீளாய்வாண்டில் 3 கம்பனிகள் பட்டியலிலிருந்து அகன்றன.

### இரண்டாந்தரச் சந்தை

2015 இற்கான மொத்த புரள்வானது ரூபா 253.2 பில்லியன் ஆவதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 25.7% வீழ்ச்சியினை குறிப்பிட்டது. இந்த வீழ்ச்சிக்கேற்றாற்போல் வருடாந்த புரள்வும் தினசரி சராசரி புரள்வும் முன்னைய ஆண்டின் ரூபா 1,414.6 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 1,059.6 மில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

வர்த்தக எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்தது. வருடத்திற்கான வர்த்தகம் செய்யப்பட்ட மொத்த தொகையானது 9,414 மில்லியன் பங்குகளாவதுடன், இது 2014 இலிருந்து 43% வீழ்ச்சியினை பிரதிபலிக்கின்றது. மீளாய்வாண்டில் மொத்தமாக 1,506,790 வர்த்தகங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் இது 2014 இன் 1,982,709 வர்த்தகங்களுடன் ஒப்பிடும்போது 24% வீழ்ச்சியாகும்.

### நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளது செயற்திறன்

2015 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறையினது தேறிய சொத்தின் பெறுமதியானது 2% அதிகரிப்புடன் ரூபா 130 பில்லியனாக அதிகரித்தது. 6 புதிய நிதியங்களின் தொடக்கமும் அலகுடைமையாளர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பும் இத்துறையின் விரிவாக்கத்திற்கு பங்களிப்பு செய்தது. அலகுடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கையானது 17% ஆல் அதிகரித்து 38,140 இனை எட்டியது. செயற்பாட்டு வாழுமையின் அக்கறையின் நிமித்தம் ஒரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியமானது முடிவுறுத்தப்பட்டது. வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையானது 10% ஆல் வீழ்ச்சியடைந்து 8,812 அலகுகளாகக் காணப்பட்டன. (உருவம் 10)

**உருவம் 10: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களது ஒட்டுமொத்த நிலைமை**

| | 31.12.2015 இல் | 31.12.2014 இல் | % மாற்றம் |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை | 79 | 74 | 7% |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளது தேறிய சொத்தின் பெறுமதி (அண்ணளவாக ரூபா மில்லியன்) | 129,844 | 127,356 | 2% |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 38,140 | 32,619 | 17% |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (அண். மில்லியன்) | 8,812 | 9,772 | -10% |
| உரித்துவத்திலான முதலீடு (அண். ரூபா மில்லியன்) | 14,376 | 14,591 | -1% |
| திறைசேரி முறிகளிலான முதலீடு (அண். ரூபா மில்லியன்) | 28,294 | 60,897 | -54% |
| ஏனைய கருவிகளில் முதலீடு (அண். ரூபா மில்லியன்) | 87,272 | 52,202 | 67% |

*மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள், கொ.ப.ப. என்பவற்றின் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்.*

# முகாமையாளர்கள்



மதுகயனி பலபிட்டிய - *முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்*



ரன்மினி ஜயதிலக்க - *முகாமையாளர், தகவல் முறைகள்*



சர்மிளா பண்டிதரத்ன - *முகாமையாளர், சட்டம் மற்றும் வலியுறுத்தல்*



சஜீவனி பக்மீதெனிய - *முகாமையாளர், மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்றுவித்தல்*



சவுமி கொடிப்பிலி - *முகாமையாளர், மேற்பார்வை*



ஷீனா குணரத்ன - *முகாமையாளர், வெளிவாரி உறவுகள்*



மஞ்சுளா சந்திரரத்ன - *முகாமையாளர், கண்காணிப்பு*



டீ எம் ஜி பிரியந்த - *முகாமையாளர், புலனாய்வுகள்*

# ஊழியர்கள்


லக்ஷ்மி விக்கிரமநாயக்க


பிரபாஷினி சமரக்கோன்


சுகத் அல்விஸ்


அசோகா கே ஜயரத்ன


ஆர் கே வசந்த சுனிமல்


மேகலா ஜயபால


அனுலா விஜேசிங்க


பிரதிபானி ஹேரத்


ரக்கித்த பண்டார


ஏஷினி பண்டார


பி எம் நிரோஷிகா உதயங்கனி


மஹேஸ் அபேசேகர


தக்சிலா பிரான்சிஸ்


சாமரி எரங்க மந்திரிரத்ன


பிரியந்த ஹேரத்

# ஊழியர்கள் தொடர்ச்சி.


சுஹாதினி விக்கிரமசிங்க


பிம்பா கமாதிகே


புத்தினி ஹேரத்


நிமல் குமாரசிங்க


ஜே கே பிரியதர்சினி


சி எரந்தி வைத்தியசேகர


தனேஷா ராஜபுர


பிரினீகா நிலக்ஷி பெரேரா


ஒலிவி சொலங்காராச்சி


மேரியன் கிளன்டா சந்தானம்


சுபுன் குணசேகர


நுவனி சிறிவர்தன


மரியெஸ் வணிகசேகர


ஏ சி டயஸ்


நிசன்சலா யு ஹேரத்


ஜி டி கபில குமார


எம் எம் இம்ரான்


ரோஷினி பீரிஸ்


தனிஸ்கா திலக்கரத்ன


லலிந்த தயாரத்ன


தாரக்கா குலதிலக்க


கயன் லொகுகமகே


கிரிஷாந்தி முத்துதந்திரிகே


ஷாலினி பெரேரா


ஜூலி அலகக்கோன்


குமாரி சிறிவர்தன


நிஷோகா ஜயதுங்க


நுஹாலா தேவதாசன்


லக்ஷ்மி அத்தபத்து


ஹேறன் கிரிஷாந்தி பர்னாந்து

## ஊழியர்கள் தொடர்ச்சி.


தனூஜா தல்பிட்ட


எஸ் டி தர்மசிறி


எம் ஜயசேகர


பி டபிள்யு எல் பியதிஸ்ஸ


சந்திரன் நாகேந்திரன்


டபிள்யு ஆரியரத்ன


அநுர பெரேரா


டி பெத்தும் நிரோஷன


சந்தருவன் விஜேரத்ன


பி டி பத்மராணி

**சமூகமளிக்காதோர்:** கிரிஸ்டோபள் சில்வா, சுரேகா ஜயசேகர, சாமரி புத்திக, வை டி சந்தமாலி, சமந்தி குணவர்தன

# செயற்பாட்டு மீளாய்வு

## முறைமைப்படுத்தல்

முதலீட்டாளர்கள் நலன்களை பாதுகாக்கவும், ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் இடர்நேர்கைகள் வைத்திருக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கும், பயனுறுதிமிக்க விலை கண்டுபிடிப்பனை ஊக்குவிக்கவும் மற்றும் ஓர் நம்பகத்தன்மையுள்ள பிணையங்கள் சந்தையினை உருவாக்குவதற்கும் ஓர் திடமான முறைமைப்படுத்தல் கட்டமைப்பு காணப்படுதல் அவசியமாகும். இலங்கையின் பிணையங்கள் சந்தையின் நேர்மை மற்றும் வலுவான நிலைமை என்பவற்றை பலப்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் இ.பி.ப.ஆ. கொள்கைகளை உருவாக்குகின்றது.

### உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்

பின்வரும் முறைமைப்படுத்தப்படும் நடவடிக்கைகளில் வணிகத்தினை தொடர்வதற்கு ஓர் நிறுவனமானது இ.பி.ப.ஆ. ஆல் ஒன்றில் உரிமமளிக்கப்படல் அல்லது பதிவீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (உருவம் 11)

**உருவம் 11: உரிமமளித்தல் மற்றும் பதிவீடுகள்**

| சந்தை இடையீட்டாளர்கள் | 31 டிசம்பர் 2015 இல் உரிமமளிக்கப்பட்ட / பதிவீடளிக்கப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை | 2015 இல் வழங்கப்பட்ட உரிமங்கள் / பதிவீடுகள் |
|---|---|---|
| பங்குப் பரிமாற்றகங்கள் | 01 | - |
| பங்குத்தரகுக் கம்பனிகள் | 36 | 01 |
| பங்கு வர்த்தகக் கம்பனிகள் | 16 | 02 |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் முகாமைத்துவக் கம்பனிகள் நிதியங்கள் | 14<br>79 | -<br>06 |
| முதலீட்டு முகாமையாளர்கள் | 34 | 01 |
| எல்லைக் கடன் வழங்குனர்கள் | 32 | - |
| ஒப்புரவாளர்கள் | 09 | - |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 02 | - |
| தீர்வக இல்லம் | 01 | - |

### கொள்கை முன்னெடுப்புகள்

இ.பி.ப.ஆ. அதன் ஆதிக்கவரம்பினுள் காணப்படும் அனைத்து நிறுவனங்களையும் முறைமைப்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள சட்ட வடிவமைப்பினை மேம்படுத்தும் பொருட்டு கொள்கை முன்னெடுப்புகளை பொறுப்பேற்கின்றது.

### இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான திருத்தங்கள்

இ.பி.ப.ஆ. சட்டத்திற்கு முன்பு பிரேரிக்கப்பட்ட திருத்தங்களை மீளாய்வு செய்வதற்காக திரு. கணகீஸ்வரன் தலைமையிலான ஓர் ஆலோசனைக் குழு ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்டது.

இ.பி.ப.ஆ. சட்டத்திற்கான பிரேரிக்கப்பட்ட திருத்தங்களது கொள்கைக்கான அடிப்படை மற்றும் காரணவிளக்கத்தை வழங்கும் ஓர் கலந்துரையாடல் பத்திரிகையானது ஆலோசனைக் குழுவினரிடையே சுற்றனுப்பப்பட்டது.

இத்திருத்தங்கள் இலங்கையின் மூலதனச் சந்தையானது அடுத்த கட்ட அபிவிருத்திக்கு செல்வதற்கு அவசியமான சட்ட வடிவமைப்புடன் தொடர்புடையதாகும். இது பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகள் மற்றும் இ.பி.ப.ஆ. னால் முறைமைப்படுத்தப்படுபவர்கள் இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் அல்லது மீறக்கூடிய சந்தர்ப்பங்களில் கணக்காய்வாளர்கள் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கவேண்டும் என்ற கட்டாய ஏற்பாடுகள் உள்ளடங்களான முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆலோசனைக் குழுவின் பிரதிநிதிகளும் இ.பி.ப.ஆ. இன் உத்தியோகத்தர்களும் இணைந்து பிரேரிக்கப்பட்ட திருத்தங்களில் கணக்காய்வாளர்கள் தொடர்பான ஏற்பாடுகள் சம்பந்தமாக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள்.

இலங்கையின் சட்டவரைவு மரபுகளுக்கமைய ஏற்பாடுகளை மீள வரைவதற்காக திரு. டி. எல். மென்டிஸ் (முன்னாள் சட்ட

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

வரைஞர் திணைக்களத்தைச் சோந்தவர்) அவர்களது சேவை பெற்றுக்கொள்ளப்பட்டது.

### பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவை

நீதியரசர் சலீம் மர்சூவ் ஜ.ச. அவர்களது தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலின் கீழ் புதிய பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் விதிக்கோவையின் வரைவினை இ.பி.ப.ஆ. முடிவுறுத்தியது. இவ்வரைவானது இறுதியான பொது ஆலோசனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பதில்களுக்கமைய திருத்தியமைக்கப்பட்டுக்கொண்டுள்ளது.

### ஓர் மத்திய எதிர் தரப்பினராக (ம.எ.த.) செயற்படும் ஓர் தீர்வக இல்லத்தின் முறைமைப்படுத்தல்

மத்திய எதிர் தரப்பினராக செயற்படும் ஓர் தீர்வக இல்லத்தினை முறைமைப்படுத்தல் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் இ.பி.ப.ஆ. இன் ஆலோசனைக் குழு மற்றும் கொ.ப.ப. இனால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களிடையே கலந்துரையாடப்பட்டது. இது இ.பி.ப.ஆ. சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள நகல் திருத்தங்களில் ஏதேனும் மேலதிக ஏற்பாடுகளை சேர்த்துக்கொள்ளவேண்டுமா என்பதை தீர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.

புதிய ஏற்பாடுகள் பிரதானமாக ம.எ.த. இனது செயற்பாடுகள் தொடர்பானதுடன் இவை குறிப்பாக கொ.ப.ப. இனால் அமுல்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள மாதிரி பற்றியதாகும்.

### பங்குச் சந்தை தகவல்கள் உத்தியோகபூர்வ மொழிகளில் கிடைக்கப்பெறுவதற்கு வழிசமைத்தல்

கொ.ப.ப. இன் பங்குச் சந்தை தகவல்கள் அதன் ஆங்கில பதிப்புருவிற்கு மேலாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கிடைக்கக்கூடியவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழு கொ.ப.ப. இனை கேட்டுக்கொண்டது. இது ஓர் பரவலான முதலீட்டாளர்கள் குழுவிற்கு முக்கியமான மூலதனச் சந்தை தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு வசதியளிப்பதற்காகும். இ.பி.ப.ஆ. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கைக்கமைய, பொதுமக்களுக்கான மூலதனச் சந்தை அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் அனைத்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் மூன்று மொழிகளிலும் இடம்பெறுவதனை உறுதிசெய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### விற்பனைப் பதிவினை கட்டியெழுப்புவதற்கான வரைவு விதிகள்

ஓர் ஆரம்ப பொது வழங்களில் பங்கின் விலையினை தீர்மானிப்பதற்காக வழங்குனர் கம்பனிகளினால் பயன்படுத்தக்கூடிய விற்பனைப் பதிவினை கட்டியெழுப்புதலில் கொ.ப.ப. இனால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச வரைவு விதிகளை இ.பி.ப.ஆ. மீளாய்வு செய்தது. இந்த முறையானது, ஓர் முதலீட்டு வங்கியினால் வழங்கப்படும் விலை எல்லைகளில் தகமைபெற்ற முதலீட்டாளர்கள் ஓர் ஏலவிற்பனை அடிப்படையில் விலை கோருவதனை அமுல்படுத்தும் ஓர் விலை கண்டுபிடிப்பு பொறிமுறைக்கு வசதியளிக்கும். இந்த விதிகள் இன்னும் முடிவுறுத்தப்படவில்லை.

### இ.பி.ப.ஆ. ஆல் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

### முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாப்பதற்கான முறைமைப்படுத்தல் தலையீடுகள்

- ஓர் பொது பட்டியலிடப்பட்ட கம்பனியினது வர்த்தகத்தினை இடைநிறுத்துதல்

நிலுவையிலுள்ள அனைத்து இடைக்கால நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கைகளை சந்தைக்கு வெளியிடும்வரைக்கும் 2015 பெப்ரவரி 26 முதல் பட்டியலிடல் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய மிரமார் பீச் ஹோட்டல் பி.எல்.சி. இன் பங்குகளது வர்த்தகத்தினை இடைநிறுத்துமாறு கொ.ப.ப. இனை இ.பி.ப.ஆ. பணித்தது. கம்பனியானது 2009 இலிருந்து கொ.ப.ப. இன் தவறுதல் பலகையில் காணப்பட்டது.

முதலீட்டாளர்களது நலனைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களுக்கு ஒரு மாத அறிவித்தலுடன் கம்பனியினது பங்குகளில் வர்த்தகத்தினை இடைநிறுத்துமாறு இ.பி.ப.ஆ. பணிப்புரையினை வழங்கியது.

- முன்விவரணக் கோவையில் வழங்கப்பட்டுள்ள பொறுப்பேற்றலுக்கு அமைய ஓர் விசேட பொதுக் கூட்டத்தினை நடாத்துமாறான பணிப்புரை - கல்பிட்டிய பீச் ரிசோர்ட் பி.எல்.சி.

ஓர் பொது வழங்கலின் முன்விவரணக் கோவையில் பொறுப்பேற்ற குறிப்பிட்ட கால அவகாசத்தினுள் ஓர் ஹோட்டலை கட்டுவதற்கு கம்பனி தவறியது. முன்விவரணக்கோவையில், இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாவிடின் நிதியினைப் பயன்படுத்துவதற்கான ஓர் மாற்றுத்திட்டத்தினை கருதும் முகமாக பங்குதாரர்களது ஓர் விசேட பொதுக்கூட்டத்தினை நடத்துவதாக மேலும் ஓர் பொறுப்பேற்றலை வழங்கியிருந்தது.

முன்விவரணக்கோவையில் குறிப்பிடப்பட்டிருந்த காலப்பகுதியினுள் ஹோட்டல் கட்டாததன் நிமித்தம் கல்பிட்டியவில் பிரேரிக்கப்பட்ட ஹோட்டல் புகலிடக் கட்டுமாணம் தொடர்பாக பங்குதாரர்களுக்கு ஓர் வளம்பெறக்கூடிய மாற்றீட்டினை வழங்குவதற்காக கம்பனியினை ஓர் விசேட பொதுக்கூட்டத்தினை நடாத்துமாறு இ.பி.ப.ஆ. பணித்தது.

கம்பனி ஆளுகை தொடர்பாக கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கு அமைவுறுவதற்கு தவறியமை - புளூ டயமன்ட்ஸ் ஜுவலரி வேர்ல்ட்வைட் பி.எல்.சி.

புளூ டயமன்ட்ஸ் ஜுவலரி வேர்ல்ட்வைட் பி.எல்.சி. அவர்களது விடுபாடுகளின் மூலம் கம்பனி ஆளுகை தொடர்பான கொ.ப.ப. பட்டியலிடல் விதிகளுக்கு அமைவுறுவதற்கு தவறியது:

- கம்பனியின் பணிப்பாளர் சபையில் தேவையான எண்ணிக்கையிலான சுயாதீன பணிப்பாளர்களை வைத்திருத்தல்;
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியினது வேதனக் குழுவினை உருவாக்குதல்; மற்றும்
- மேற்கூறப்பட்ட விதிகளில் தேவைப்படும் வண்ணம் கணக்காய்வு குழுவினை உருவாக்குதல்.

இ.பி.ப.ஆ. மேற்குறிப்பிடப்பட்ட விடுபாடுகளை ஓர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிவர்த்தி செய்யுமாறு கம்பனியினை பணித்தது. அத்துடன் இந்தப் பணிப்புரைக்கு அமைவுறுவதற்கு தவறினால் 2014 ஒக்டோபரில் அறிவிக்கப்பட்ட உரிமை வழங்கலின் மூலம் திரட்டப்பட்ட நிதியினை கம்பனி பயன்படுத்துவதனை இ.பி.ப.ஆ. கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருக்குமென அறிவித்தல் விடுத்தது.

- ஈ ஏ பி பிரோட்காஸ்டிங் கம்பனி லிமிட்டட்டினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்கள் தொடர்பாக வழங்கப்பட்ட பணிப்புரை

  ஓர் சுயாதீன தரப்படுத்தல் முகவரிடமிருந்து ஓர் தரத்தினை பெற்றுக்கொள்ளும் வரைக்கும் ஈ ஏ பி பிரோட்காஸ்டிங் கம்பனி லிமிட்டட்டினது தொகுதிக்கடன் வழங்கலுக்கான ஆரம்ப திகதியினை பிற்போடுமாறு இ.பி.ப.ஆ. கொ.ப.ப. இனை பணித்தது. இப்பணிப்புரையானது வழங்குனருக்கும் தொகுதிக்கடன் வழங்கலை தரப்படுத்திய தரப்படுத்தல் முகவருக்குமிடையே ஓர் விடயத்தில் சாத்தியப்படக்கூடிய ஓர் முரண்பாட்டு நலன் காணப்படுவதன் நிமித்தம் வழங்கப்பட்டது.

- புதிய வாடிக்கையாளர்களது ஆதரவு நாடுதலை தடைசெய்தல் தொடர்பான பணிப்புரை - நேஷன் லங்கா ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட்

  நேஷன் லங்கா ஈக்கியூட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் புதிய வாடிக்கையாளர்களது ஆதரவு நாடுவதனை தடைசெய்து ஓர் பணிப்புரை வழங்கப்பட்டது. இது கொ.ப.ப. இன் பங்குத்தரகர் விதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள வாடிக்கையாளர் நிதி போதுமை மற்றும் ஏனைய சில மூலதனத் தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு கம்பனியானது தொடர்ச்சியாக அமைவுறாததன் பலனாக வழங்கப்பட்டது.

- சந்தை இடையீட்டாளர் விதிகள்

  முன்னர் "சந்தை இடையீட்டாளர்கள் பிரயோகிக்கவேண்டிய விதிகள்" என்னும் தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட விதிகளுக்குப் பதிலாக இ.பி.ப.ஆ. ஓர் பணிப்புரையினூடாக பதிவீடு செய்யப்பட்ட சந்தை இடையீட்டாளர்களினால் அமைவுறவேண்டிய அங்கீகரிக்கப்பட்ட முறைமைப்படுத்தல் நியமங்களை மீள் வழங்கியது.

  ச.பி.ஆ.ஒ. இனால் ஓர் மீளாய்வு மேற்கொள்ளப்படும்வரைக்கும் வர்த்தமானியிடல் தேவைகளுக்காக நடைமுறை முறைமைப்படுத்தல் நியமங்கள் முடிவுறுத்தப்படும்வரைக்கும் ஆணைக்குழு இந்தத் தீர்மானத்தினை மேற்கொண்டது. முன்னர் ஆணைக்குழுவானது குறிப்பிட்ட முறைமைப்படுத்தல் நியமங்களை சந்தை இடையீட்டாளர்களுக்கு பிரயோகிக்கப்படும் விதிகள் என வர்த்தமானியிடுவதற்காக சட்ட வரைஞருக்கு சமர்ப்பித்திருந்தது. எவ்வாறாயினும், இந்த செயல்முறையானது ச.பி.ஆ.ஒ. மீளாய்வு வரும்வரைக்கும் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

### ஏனைய முறைமைப்படுத்தல் விடயங்கள்

#### ஓர் முதலீட்டாளர் கணக்கினை இடைநிறுத்தல்

2006 இல் இ.பி.ப.ஆ. இன் அறிவுறுத்தலின் பேரில் இடைநிறுத்தப்பட்ட ஒரு முதலீட்டாளரது மத்திய வைப்புத் திட்டக் கணக்கிலுள்ள (ம.வை.தி.) பங்கு முதலீட்டுத் தேக்கத்திலான இடைநிறுத்தலை நீக்குமாறு முதலீட்டாளர் சார்பில் இ.பி.ப.ஆ. க்கு ஓர் வேண்டுகோள் கிடைத்தது. பெறுமதி சேர்த்தல் வரி தொடர்பாக இடம்பெற்ற மோசடிக்காக நிலுவையிலுள்ள விசாரணையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் விண்ணப்பத்திற்கு ஏற்ப கோட்டை நீதவான் மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டளைக்கமைய முதலீட்டாளரது ம.வை.தி. கணக்கானது முடக்கப்பட்டது. இ.பி.ப.ஆ. வாடிக்கையாளருக்கு இடைநிறுத்தலை நீக்குவதற்கு இ.பி.ப.ஆ. இன் இயலாமையை அறிவித்தது.

### அங்கீகாரங்கள்

#### பார்ட்லீட் வைனான்ஸ் பி.எல்.சி. உடன் ஓரியன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இன் ஒருங்கிணைப்பு

பார்ட்லீட் வைனான்ஸ் பி.எல்.சி. இடமிருந்து பார்ட்லீட் வைனான்ஸ் பி.எல்.சி. உடன் ஓரியன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. இனை ஒருங்கிணைப்பதற்காக இ.பி.ப.ஆ. இன் உடன்பாட்டினைக் கோரி ஓர் பிரேரணை பெறப்பட்டது.

இந்தப் பிரேரணையானது இலங்கை மத்திய வங்கியின் ஒருங்கிணைப்பு திட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய காணப்பட்டதுடன், ஓரியன் வைனான்ஸ் பி.எல்.சி. ஆனது பார்ட்லீட் வைனான்ஸ் பி.எல்.சி. உடன் ஓர் பங்கு பரிமாற்றலூடாக ஒருங்கிணைக்கப்பட இருந்தது. இக்குறிப்பிட்ட ஒருங்கிணைப்பானது ஓரியன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. மற்றும் பார்ட்லீட் வைனான்ஸ் பி.எல்.சி. ஆகிய இரு நிறுவனங்களும் சில குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அமைய அங்கீகரிக்கப்பட்டது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்கள்

ம.வை.தி. இன் சிபாரிசிற்கமைய இ.பி.ப.ஆணைக்குழுவானது உலகளாவிய, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு கொ.ப.பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. இவ் அங்கீகாரமானது அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணச் சலவைத் தடுப்புச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கைச் சட்டம் மற்றும் இலங்கையின் பிணையங்கள் தொடர்பான சட்டம் ஆகியவற்றிற்கு அமைவுறுதலைப் பொறுத்தே வழங்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் இ.பி.ப.ஆ. 154 உலக, பிராந்திய மற்றும் தேச நிதியங்களுக்கு இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் 65 பெயர் மாற்றங்களையும் அங்கீகரித்தது.

## கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 5.4 (பி) ஏற்பாடுகளுக்கமைய விட்டுவிடல்கள்

தனிப்பட்ட ஏற்பாட்டின் மூலம் பங்குகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது விண்ணப்பங்களை இ.பி.ப.ஆ. செய்முறைப்படுத்துகின்றது. தற்போது வழங்கப்பட்டுள்ள பங்குகளில் இத்தகைய தனிப்பட்ட ஏற்பாட்டின் ஊடாக வழங்கப்படும் பங்குகள் வழங்கலின் பின்னர் உடனடியாக 20%க்கு அதிகரிக்கும்போது இவ்விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டில் ரேணுகா வுட்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு ஓர் தனிப்பட்ட ஏற்பாட்டின் ஊடாக ரேணுகா வுட்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகளை சி ஜே பட்டேல் அன்ட் கம்பனி மற்றும் ஈகள் வியு மெனேஜ்மன்ட் லிமிட்டட் ஆகியவற்றிற்கு ஷோ வொலஸ் சிலோன் லிமிட்டட்டிலுள்ள அவர்களது பங்குகளுக்கு பரிமாற்றுவதற்கு ஓர் விடுவிப்பு வழங்கப்பட்டது. கம்பனியானது அதன் ஒன்றிணைப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக அதன் துணைக் கம்பனியான ஷோ வொலஸ் சிலோன் லிமிட்டட்டினை கம்பனியினுள் ஒன்றிணைப்பதற்காக கம்பனி இந்த விடுவிப்பினை வேண்டியது. இந்த விடுவிப்பானது பின்வரும் இரண்டு நிபந்தனைகளுக்கு கட்டுப்படும் வேளை வழங்கப்பட்டது.

- தனிப்பட்ட ஏற்பாட்டிற்கு முன்னர் பங்குதாரர்களது அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்; மற்றும்
- விதி இலக்கம் 5.4 (பி) விடுவிப்பின் கீழ் வரும் ஒதுக்கப்படும் பங்குகள் ஒதுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது 12 மாதக் காலப்பகுதிக்கு மனமுவந்து பூட்டி வைத்திருக்கப்படல் வேண்டும். இந்த நிபந்தனையானது பங்கின் விலையில் எழக்கூடிய ஏதேனும் அசாதாரணமான தளம்பல்களை தவிர்ப்பதற்காக சுமத்தப்பட்டது.

## கொ.ப.ப. இன் அமைப்புவிதிகளை திருத்தியமைப்பதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் 25ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வாண்டில் கொ.ப.ப. இன் அமைப்புவிதிகளில் விதி இலக்கம் 47, விதி இலக்கம் 48 மற்றும் விதி இலக்கம் 51 ஆகியவற்றில் நிதி அமைச்சினுடைய மேற்கோளினை அகற்றுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

முன்னர் கொ.ப.ப. இன் அமைப்புவிதிகளின் விதி இலக்கம் 47, 48 மற்றும் 51 என்பன நிதி அமைச்சரை கொ.ப.ப. இன் சபைக்கு “நியமன அங்கத்தவர்களை” நியமிக்கும் அதிகாரசபையாக அங்கீகரித்திருந்தது. இ.பி.ப.ஆ. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சருடன் அமைவுறுவதற்காக இந்த ஏற்பாடுகள் கொ.ப.ப. இனால் திருத்தியமைக்கவேண்டிய தேவை காணப்பட்டது. இந்த மாற்றம் முக்கியமாக காணப்பட்டது ஏனெனில் இ.பி.ப.ஆ. கான விடய அமைச்சர் நிதி அமைச்சரல்லாததனால் இ.பி.ப.ஆ. இன் வேண்டுதலின் பிரகாரம் கொ.ப.ப. இன் அமைப்புவிதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள்

மீளாய்வாண்டில் பட்டியலிடல் விதிகளுக்கான பின்வரும் திருத்தங்கள் இ.பி.ப.ஆ. ஆல் அங்கீகரிக்கப்பட்டன:

- விதி 11 க்கான திருத்தங்கள் - கொ.ப.ப. இன் பட்டியலிடல் கட்டணத்தின் சீராய்வு தொடர்பானது.
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் விதி இலக்கம் 3.1.4 க்கான திருத்தங்கள். இது ஓர் ஆரம்ப பொது வழங்களில் விற்பனை விலையின் அடிப்படை தொடர்பானதாகும். இவ்விதியானது கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பொது மக்களுக்கு வழங்கப்படும் பங்குகளுக்கான விலையானது நிறுவனத்திற்கும் மற்றும் அனைத்து நடைமுறையிலுள்ள பங்குதாரர்களுக்கும் நியாயமானது மற்றும் சாதாரணமானது என பணிப்பாளர் சபையானது குறிப்பிடவேண்டும் எனும் தேவைப்பாட்டினை அமுல்படுத்துகின்றது.
- ஓர் அறிமுகத்தினூடாக பங்குகள் பட்டியற்படுத்தப்படும்போது குறிப்பு விலை தொடர்பான விதி இலக்கம் 3.4.8 ற்கான திருத்தங்கள். இத்திருத்தமானது கொ.ப.ப. இனால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் சுயாதீன நிபுணரினால் தயாரிக்கப்பட்ட நியாயமான கருத்தின் அடிப்படையில் குறிப்பு விலை காணப்படல் வேண்டும் எனும் தேவைப்பாட்டினை சுமத்துகின்றது. அத்துடன் குறிப்பு விலையும் அத்தகைய குறிப்பு விலையினது தீர்மானத்திற்கான அடிப்படையும் அறிமுக ஆவணத்தில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளில் விதி இலக்கம் 3.4.11 க்கான திருத்தங்கள். இது ஓர் அறிமுகத்தினூடாக பங்குகள் அல்லது கடன் பிணையங்கள் பட்டியற்படுத்தப்படும்போது சுமத்தப்படும் தேவைப்பாடுகள் தொடர்பானவை. இந்தத் திருத்தமானது அறிமுக ஆவணம், வழங்கும் கம்பனியின் அமைப்புவிதிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புறுதி (கடன் பிணையங்களுக்கு மாத்திரம்)

என்பன வழங்கும் கம்பனியின் இணையத்தளத்தில் மற்றும் கொ.ப.ப. இன் இணையத்தளத்தில் ஆகக் குறைந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் பதிவேற்றம் செய்யப்படல்வேண்டும் எனும் தேவைப்பாட்டினை சுமத்துகின்றது.

### பட்டியலிலிருந்து அகலும் விண்ணப்பங்களுக்கான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆ. விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலிலிருந்து அகலும் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய 02 கம்பனிகள் மீளாய்வாண்டில் பட்டியலிலிருந்து அகன்றன. இந்தக் கம்பனிகள் பின்வருவனவாகும் :

1. என் டி பி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.
2. வின்லேஸ் கொழும்பு பி.எல்.சி.

### பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையினது நிர்வாகம்

2015 ஆம் ஆண்டில் பின்வரும் பொறுப்பேற்புகள் இ.பி.ப.ஆ. இனால் நிர்வகிக்கப்பட்டன. (உருவம் 12)

**உருவம் 12: பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடைமுனைவுகள்**

| கொடைமுனைபவர் | பொறுப்பேற்கப்படுபவர் | கொடைமுனைவின் வகை | கொடைமுனைவின் இறுதியில் காணப்படும் உரித்துவம் |
|---|---|---|---|
| சி எச் சி இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | டெப்ரோபேன் ஹோல்டிங்ஸ் பி.எல். சி. | கட்டாயக் கொடைமுனை | 55.52% |
| பீபள்ஸ் பேங் அன்ட் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி எல்.சி. | பீபள்ஸ் மெர்ச்சன்ட் வைனான்ஸ் பி எல் சி | கூட்டுக் கட்டாயக் கொடைமுனை | 87.21% |
| டபிள்யு டி என் எச் பெரேரா | கலாமசு சிஸ்டம்ஸ் பி எல் சி | கட்டாயக் கொடைமுனை | 69.30% |

### இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

கொ.ப.ப. இல் பட்டியலிட விரும்பும் அனைத்துப் பொதுக் கம்பனிகளும் ஓர் பரிமாற்றகத்தில் பட்டியலிடுவதற்கு ஒரு வருட காலத்திற்கு முன்னர் யாரேனும் நபருக்கு பங்குகளை ஒதுக்கியிருப்பின் அதற்கான எழுத்துமூல முன்னனுமதியை ஆணைக்குழுவிடமிருந்து பெற்றாலன்றி அப்பங்குகளை பட்டியலிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இவ்வருடத்தில் ஓரியன்ட் வைனான்ஸ் பி எல் சி க்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் கீழான அங்கீகாரங்கள்

இ.பி.ப.ஆணைக்குழுச் சட்டத்தின் 29 ஏ பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படும் பட்டியலிடப்படா பிணையங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் இ.பி.ப.ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பின்வரும் நிறுவனத்திற்கு ஆணைக்குழுவினது அங்கிகாரம் வழங்கப்பட்டது. (உருவம் 13)

**உருவம் 13 : பட்டியலிடப்படா பிணையங்களை வழங்குவதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரங்கள்**

| வழங்குனரின் பெயர் | வழங்கலின் தன்மை | பிணையத்தின் வகை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | காலம் |
|---|---|---|---|---|
| சிலோன் கார்டியன் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பி.எல்.சி. | பங்குப் பங்கிலாபம் | பட்டியலிடப்படா ஒத்திவைக்கப்பட்ட பங்குகள் | ரூபா 12 மில்லியன் | - |

### தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடாக ஆகக் குறைந்த பொது உடைமையினை பராமரிப்பதற்கான விதிகள்

கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய ஆகக் குறைந்த பொது உடைமையின் பராமரிப்பு தொடர்பாக பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளது இணக்கப்பாட்டினை இ.பி.ப.ஆ. கண்காணித்தது.

ஆகக் குறைந்த பொது உடைமையின் பராமரிப்பு தொடர்பான கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகளுக்கு அமைவுறுவதற்கு மேலதிக நேரத்தை கோரி இருபத்தி இரண்டு கம்பனிகள் இ.பி.ப.ஆ. க்கு விண்ணப்பங்களை மேற்கொண்டன. மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களை கருத்திற்கொண்டு, இ.பி..ப.ஆ. மேலதிக நேரத்திற்கான வேண்டுகோளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

### ஏ ஐ ஏ இன்சூரன்ஸ் லங்கா பி எல் சி இனால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம்

ஏ ஐ ஏ இன்சூரன்ஸ் பி எல் சி பின்வரும் அடிப்படையில் ஆகக் குறைந்த பொது உடைமையின் பராமரிப்பு தொடர்பான விதிகளுக்கு அமைவுறுவதிலிருந்து ஓர் நீடிப்பு அல்லது ஓர் விலக்களிப்பினை கோரியது. 2000 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் துறையினை முறைமைப்படுத்தும் சட்டத்தின் 15 ஏ பிரிவுக்கான திருத்தம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டவுடன் கொ.ப.ப. இல் பட்டியல்படுத்துவதிலிருந்து சட்டரீதியாக விலக்களிப்பினை பெறுவதற்கு கம்பனி உத்தேசித்துள்ளது.

இ.பி.ப.ஆ. ஆகக் குறைந்த பொதுப் புழக்கப் பராமரிப்பு தொடர்பான விதிகளுடன் அமைவுறுவதிலிருந்து கம்பனியினை விலக்களிப்பதற்காக கம்பனிக்கு அங்கீகாரம் வழங்கியது. இது 31 டிசம்பர் 2016 வரை அல்லது நிகழவிருக்கும் சட்டவாக்கம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதும், எது முதலில் நிகழ்கின்றதோ, 31 டிசம்பர் 2016 இல் பிரேரிக்கப்பட்ட சட்டவாக்கம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாதவிடத்து விலக்களிப்பதற்கான தீர்மானத்தினை மீளாய்வு செய்வதற்கான உரிமையை ஆணைக்குழு கொண்டுள்ளது என்பதற்கு உட்பட்டதாகும்.

### தளத்திற்கப்பாலான பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான அங்கீகாரம்

இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 28 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய உரிமமளிக்கப்பட்ட ஓர் பங்குப் பரிமாற்றகத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு பொதுக் கம்பனியில் பிணையங்களை வைத்திருக்கும் எந்த ஒரு நபரும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிமாற்றகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வர்த்தக செயல்முறைக்கு இணங்கிலான்றி, ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி, அத்தகைய பிணையங்களை கொள்வனவு, விற்பனை, கொடை அல்லது இல்லையெனில் வர்த்தகம் செய்வதற்கு முடியாது.

மீளாய்வாண்டில் 588 அசாதாரணமான மாற்றல்களுக்கும் 108 பங்குத் தானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எல்லைக் கடன் வர்த்தகம், நிதி முகாமைத்துவம், பட்டியலிலிருந்து நீக்கல் மற்றும் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டுத்தேக்கங்களை மறுசீரமைத்தல் ஆகியவற்றில், உரித்துவ நலன் மாறாதவாறு, அசாதாரணமான மாற்றல்கள் இடம்பெற்றன.

### மேற்பார்வை மற்றும் இணக்கப்பாடு

முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்கள் பிணையங்கள் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன், அவற்றின் வாடிக்கையாளர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் பிணையங்கள் சந்தையின் நம்பகத்தன்மையினை பாதுகாப்பதற்காகவும் அமைவுறுமாறு வேண்டப்படுகின்றன. இந்நிறுவனங்களது முறைமைப்படுத்தலானது உள்வருகை வரன்முறைகள், விவேகமுள்ள மற்றும் மூலதனத் தேவைப்பாடுகளுடன் தொடர்ச்சியான மேற்பார்வை என்பவற்றை உள்ளடக்கும். மேலும், முதலீட்டாளர்கள் தகவலறிந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும்பொருட்டு பட்டியிலிடப்பட்ட நிறுவனங்கள் அனைத்து முக்கிய தகவல்களையும் வெளிப்படுத்தி பரப்புதல் வேண்டும். எனவே நாம் இதனுடனான இணக்கப்பாட்டினை உறுதிசெய்வதற்காக இந்நிறுவனங்களது நிதியியல் மற்றும் செயற்பாட்டு கண்ணோட்டத்தினை பரிசீலனை செய்கின்றோம்.

### பட்டியிலிடப்பட்ட கம்பனிகள்

அனைத்து பட்டியலிடப்பட்ட கம்பனிகளும் நிதியாண்டு நிறைவடைந்து 5 மாதங்களுக்குள் அவற்றின் பங்குதாரர்களுக்கும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கும் (கொ.ப.ப.) வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

இ.பி.ப.ஆ. பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்து அமைவுறா விடயங்கள் தொடர்பாக கம்பனிகளுக்கு அறியப்படுத்துகின்றது. இந்த முயற்சியில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளது பதிலளிப்பானது மிகவும் சாதகமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கமானது பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் தகவல் பரப்புதல் மற்றும் நிதியியல் அறிக்கையிடலின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். பிணையங்கள் சந்தையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை நிலைநிறுத்துவதற்காகவும் தொழில்சார் நியமங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் முக்கியமான தகவல்களை உடனடியாக பரப்புதல் வேண்டும் என்ற தேவைப்பாடு காணப்படுகின்றது.

வருடாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்வதில் இ.பி.ப.ஆ. பின்வரும் விடயங்களில் கவனஞ்செலுத்துகின்றது.

- கொ.ப.ப. இன் பட்டியலிடல் விதிகள், இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிகள் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கு அமைவுறுதல்
- நிதியியல் எடுத்துக்காட்டல்கள்
- தலைவரின் அறிக்கை
- கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள்
- பணிப்பாளர்களின் அறிக்கை
- கணக்காய்வாளர்களின் அறிக்கை
- பங்குதாரர் மற்றும் முதலீட்டாளர் தகவல்கள்
- நிதியியல் தரவுகள்

மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. 124 பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளின் நிதியியல் கூற்றுக்களில் மீளாய்வினை ஆரம்பித்து 108 கம்பனிகளில் மீளாய்வு முடிவுறுத்தப்பட்டு 64 கருத்துக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்தச் செயல்முறையானது வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்குகளை தயாரித்து முன்வைப்பதில் கம்பனிகள் மீது சுமத்தப்பட்டுள்ள கடப்பாடுகள் தொடர்பாக கம்பனிகளது விழிப்புணர்வு மட்டத்தினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்யும்.

**உரிமமளிக்கப்பட்ட / பதிவீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் மேற்பார்வை**

இ.பி.ப.ஆ. இன் முறைமைப்படுத்தல் பங்களிப்பானது மூலதனச் சந்தையில் ஸ்திரத்தன்மையினை வளர்ப்பதற்காகும். எனவே, மூலதனச் சந்தையில் முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையினை விருத்திசெய்யவும் முதலீட்டாளர் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்கும் உரிமமளிக்கப்பட்ட / பதவீடளிக்கப்பட்ட நிறுவனங்களது நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் செயற்பாட்டு இயலுமை என்பவற்றை நாம் மேற்பார்வை செய்து கண்காணிக்கின்றோம்.

**பங்குத் தரகுக் கம்பனிகள்**

2015 ஆம் ஆண்டில் வெவ்வேறு இடர்நேர்கை பிரிவுகளில் கவனஞ்செலுத்தப்பட்ட ஓர் இடர்நேர்கை அணுகுமுறையினூடாக பங்குத்தரகுக் கம்பனிகளில் தளத்திலான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை விவேகம், திரவத்தன்மை, நிதியியல், கடன், சட்டம் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்கைகளை உள்ளடக்குகின்றது. மேலும், இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் அதன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவுறுவதற்கான அழுத்தத்துடன் பங்குத் தரகுக் கம்பனிகளை உயர்ந்த தொழில்சார் நியமங்களை அடைவதனை நோக்கி நாம் வழிநடத்தினோம்.

முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் அமைவுறாமை மற்றும் செயலிழப்பு இடர்நேர்கை ஆகியவற்றுக்கு முகங்கொடுக்கக்கூடிய செயற்பாடுகள் மற்றும் கம்பனிகளை இனங்காண்பதனை நோக்காகக் கொண்ட ஓர் இடர்நேர்கை அடிப்படையான மேற்பார்வை செயல்முறையினை பயன்படுத்தி 2015 இல் தளத்திற்கப்பாலான மீளாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கும் மேலாக, பங்குத் தரகுக் கம்பனிகளினால் இரண்டு வாரத்திற்கொருமுறை சமர்ப்பிக்கப்படும் “கடன் பட்டோர் பிரகடனங்களை” மீளாய்வுசெய்வதன் மூலம் கடன் இடர்நேர்கை வெளிப்பாடானது உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டது. தளத்திற்கப்பாலான பரிசீலனைகளில் அவதானிக்கப்படும் ஏதேனும் முரண்பாடுகள் மற்றும் அமைவுறாமைகள் திருத்தப்படுவதற்காக உடனடியாக கம்பனிக்கு அறிவிக்கப்படுகின்றது.

மீளாய்வாண்டில் முறைமைப்பாட்டு தேவைப்பாடுகளை மீறிய சில பங்குத் தரகுக் கம்பனிகள் இனங்காணப்பட்டு ஓர் நியாயமான காலப்பகுதியினுள் அமைவுறுதலை உறுதிப்படுத்துவதற்காக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டன.

பிணையங்கள் துறை பங்குபற்றுனர்களில் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் மதிநுட்ப அலகினால் அமுல்படுத்தப்பட்டுள்ள பணம் சலவை செய்வதற்கு எதிரான ஒழுங்குவிதிகள் /நியமங்களில் பங்குத் தரகுக் கம்பனிகளது உயர்ந்த மட்டத்திலான அமைவுறலுக்கு நாம் தொடர்ச்சியாக வசதியளித்து பலப்படுத்தினோம். 2014 உடன் ஒப்பிடும்போது பங்குத் தரகுத் துறையின் மொத்த புரள்வானது 2015 இல் வீழ்ச்சியடைந்தது. பங்குத்தரகுக் கம்பனிகளின் செயற்திறன் பற்றிய ஒப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உருவம் 14)

**உருவம் 14: பங்குத் தரகுத் துறையின் சிறப்புக்கூறுகள்**

| | **2015** | **2014** | **சதவீத வேறுபாடு** |
|---|---|---|---|
| புரள்வு | ***2,395,888*** | 3,087,228 | -22.39 |
| தேறிய தரகு | ***2,175,440*** | 2,833,873 | -23.23 |
| செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) | ***205,297*** | 794,562 | -74.16 |
| ஏனைய வருமானம் | ***678,041*** | 510,000 | 32.95 |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம;/(நட்டம்) | ***(6,174)*** | 727,606 | -100.85 |
| வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் / (நட்டம்) | ***(103,803)*** | 604,053 | -117.18 |
| மொத்தச் சொத்துக்கள் * | ***9,822,482*** | 11,333,864 | -13.33 |
| மொத்தப் பொறுப்புக்கள் * | ***3,634,502*** | 4,924,007 | -26.19 |
| தேறிய மூலதனம் * | ***4,959,272*** | 4,966,033 | -0.14 |

* 31 டிசம்பர் 2015 /2014 இல் உள்ளவாறு.
மூலம்: இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள்

**சந்தை இடையீட்டாளர்கள்**

மூலதனச் சந்தையில் சந்தைப் பங்குபற்றுனர்களாக கடமையாற்றுவதற்கு எல்லைக் கடன் வழங்குனர்கள், முதலீட்டு முகாமையாளர்கள், கடன் தரப்படுத்தல் முகவர்கள், ஒப்புரவாளர்கள் மற்றும் தீர்வக இல்லம் ஆகிய ஐந்து பிரிவினர்களுக்கு இ.பி.ப.ஆ. பதிவீடுகளை வழஙகுகின்றது.

2015 இல் இ.பி.ப.ஆ. சந்தை இடையீட்டாளர்கள் மீதான அதன் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு செயல்முறையினை பலப்படுத்தியது. சம்பந்தப்பட்ட இடர்நேர்கைகளை கண்காணிப்பதற்கும், மட்டுப்படுத்துவதற்கும் மற்றும் முகாமைப்படுத்துவதற்காகவும் இ.பி.ப.ஆ. ஆல் மேற்கொள்ளப்பட்ட இடர்நேர்கை அடிப்படையிலான தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான பரிசீலனைகள் அதிகரித்தன. நாம் பின்வருவனவற்றில் சந்தை இடையீட்டாளர்கள் மீது இணக்கப்பாட்டு மீளாய்வுகளை மேற்கொண்டோம். பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டு மதிப்பீடு, உள்ளக கட்டுப்பாடுகளிலான பலவீனம், வாடிக்கையாளரது சொத்திற்கான பாதுகாப்பு மற்றும் முரண்பாட்டு நலன் முகாமைத்துவம் என்பனவாகும். இவ்வருடத்தில், உயர்ந்த மட்டத்திலான இடர்நேர்கை

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

செறிவினை உடைய நிறுவனங்கள் ஓர் துல்லியமான கண்காணிப்பு முறையின் பிரயோகத்தினூடாக இனங்காணப்பட்டன. கவனமாக திட்டமிடப்பட்ட மேற்பார்வை பொறிமுறையினை கடைப்பிடிப்பதனாது அத்தகைய நிறுவனங்களின் உயர்ந்த இடர்நேர்கை நிலைமைகளை மட்டுப்படுத்துவதற்கு இயலுமையாக்கியது.

இவ்வாண்டில், சந்தை இடையீட்டாளர்களது ஆளுகை முறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன செயல்திறனுடனான, பகுப்பாய்வுடனான மற்றும் இடர்நேர்கை முனைப்புடைய மேற்பார்வையினூடாக பலப்படுத்தப்பட்டன.

2015 இல் துர்நடத்தைக்கான சந்தர்ப்பங்களை இனங்கண்டு தவிர்ப்பது நோக்கிய முறைமைப்படுத்தல் முயற்சிகளில் நாம் கவனஞ்செலுத்தியதுடன் சந்தை இடையீட்டாளர்களது மீளெழும்தன்மையினையும் அத்தகைய சந்தை இடையீட்டாளர்களது நடத்தையினையும் மதிப்பீடு செய்தோம். இது குறிப்பிட்ட அக்கறையுடைய பிரிவுகளில் கிரமமான தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான பரிசீலனைகள் நடாத்துவதனையும் உள்ளடக்குகின்றது.

இவ்வருடம் முழுவதும் நாம் பின்வருவனவற்றை அடைவதற்காக திடமான எமது கடப்பாட்டினை செயல்முறை விளக்கமளித்தோம். சந்தையின் நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையினை பாதுகாப்பதற்காக நம்பத்தக்க தடைசெய்யும் முயற்சிகள் உள்ளடங்களாக பயனுறுதிமிக்க வலியுறுத்தல் விளைவுகளை அடைவதற்காகும். 2015 இல், இ.பி.ப.ஆ. இன் ஆதிக்கவரம்பின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓர் கடன் தரப்படுத்தல் முகவருக்கெதிராக பின்வருவனவற்றிற்காக வலியுறுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவுறுதல், இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றை மீறியதன் விளைவாக கடன் தரப்படுத்தல் முகவராக கடமையாற்றுவதற்கான பதிவீடானது புதுப்பிக்கப்படவில்லை. (உருவம் 15)

**உருவம் 15: ஏனைய சந்தை இடையீட்டாளர்களின் நிதியியல் சிறப்புக்கூறுகள் (31 டிசம்பர் 2015 இல் உள்ளவாறானது)**

| | மொத்த வருமானம் ரூபா | வரிக்கு முந்திய மொத்த தேறிய இலாபம் ரூபா | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா |
|---|---|---|---|---|
| எல்லைக் கடன் வழங்குனர் | 302,151,437 | 102,425,794 | 3,465,752,711 | 1,006,962,764 |
| முதலீட்டு முகாமையாளர் * | 366,498,491 | 329,570,696 | 8,272,645,179 | 4,019,032,943 |
| ஒப்புரவாளர் ** | 1,122,233,713 | 1,591,654,590 | 16,883,547,000 | 151,644,000 |
| கடன் தரப்படுத்தல் முகவர்கள் | 115,712,500 | 36,741,680 | 150,187,196 | 23,965,386 |
| பல்நோக்கு நிறுவனங்கள் *** | 159,054,942 | 579,886,567 | 2,893,685,570 | 376,640,948 |

*மூலம்: இ.பி.ப.ஆ. க்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள்*

*இலங்கை மத்திய வங்கியினால் முறைமைப்படுத்தப்படும் உரிமமளிக்கப்பட்ட வங்கிகள், பதிவீடு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகள் தொடர்பான தகவல்கள் ஓர் நியாயமான துறைசார் நிலைமையினை சமர்ப்பிப்பதற்காக விலக்கப்பட்டுள்ளது.*

** முதலீட்டு முகாமையாளர் பதிவீட்டினை பெற்றுள்ள 12 நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகள் இருமுறை எண்ணப்படுவதனை தவிர்ப்பதற்காக கணக்கிடுதலிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது.*

*** 2015 இல் ஒப்புரவாளர்கள் எந்தவொரு ஒப்புரவளித்தல் ஒப்படைகளையும் மேற்கொள்ளவில்லை.*

**** பல்நோக்கு நிறுவனங்கள் என்பன ஒன்றுக்கு மேற்பட்ட முறைமைப்படுத்தப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பதிவீடளிக்கப்பட்ட முறைமைப்படுத்தப்படும் நிறுவனங்களாகும்.*

### நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித் துறை

பின்வரும் பரவலான இடர்நேர்கை பிரிவுகளை உள்ளடக்கிய இடர்நேர்கை அடிப்படையிலான தளத்திலான பரிசீலனைகளை முகாமைத்துவக் கம்பனிகளில் இ.பி.ப.ஆ. இவ்வாண்டில் மேற்கொண்டது. இவற்றின் நிதியியல் பலத்தின் போதுமான தன்மையினை மதிப்பிடுவதற்காக விவேகம், செயற்பாடு மற்றும் முகாமைத்துவக் கொள்கைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகளுக்கு அமைவுறல், ஆளுகை, தகவல் முறைகள் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளது தேவைப்பாடுகள் என்பனவாகும். முகாமைத்துவக் கம்பனிகள் இ.பி.ப.ஆ. இனால் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தேறிய மூலதனத் தேவைப்பாடுகளை பராமரித்திருப்பதனையும் அவை நிதியியல் ரீதியாக திடமாக காணப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத மாதாந்த நிதிக் கூற்றுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இதற்கும்

மேலாக நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் மாதாந்த அறிக்கைகள், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள், பொருத்தமான நம்பிக்கைப் பொறுப்புறுதிகள் மற்றும் நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி விதிக்கோவை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டங்களில் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் திரவத்தன்மை மற்றும் வெளிப்பாடு மட்டங்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக ஆராயப்பட்டன.

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்

2015 டிசம்பர் 31 இல் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூபா 130 பில்லியனாக (அண்ணளவாக) காணப்பட்டது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2% அதிகரிப்பினை பிரதிபலித்தது. அலகுடைமையாளர்களின் எண்ணிக்கையானது 17% ஆனால் அதிகரித்தவேளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையானது 10% ஆல் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் 6 புதிய நம்பிக்கை அலகுப்பொறுப்பாட்சி நிதியங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. (உருவம் 16)

**உருவம் 16: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் ஒட்டுமொத்த நிலைமை.**

| | 31.12.2015 இல் | 31.12.2014 இல் | % மாற்றம் |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் எண்ணிக்கை | 79 | 74 | 7% |
| நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்களின் தேறிய சொத்தின் பெறுமதி (ரூபா மில்லியன்) | 129,844 | 127,356 | 2% |
| அலகுடைமையாளர்களின் எண்ணிக்கை | 38,140 | 32,619 | 17% |
| வழங்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை (மில்லியன். அண்ணளவாக) | 8,812 | 9,772 | -10% |
| உரித்துடைமைகளில் முதலீடு (ரூபா மில்லியன்) | 14,376 | 14,591 | -1% |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு (ரூ.மில்லி.) | 28,294 | 60,897 | -54% |
| ஏனைய சாதனங்களில் முதலீடு ** (ரூ.மில்லியன்) | 87,272 | 52,202 | 67% |

*** வணிகத் தாள்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள், தொகுதிக்கடன்கள், வங்கி வைப்புகள் முதலியன*

*மூலம்: நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் முறைமைப்படுத்தல் சமர்ப்பிப்புகள்*

கீழ்காணும் வரைபடமானது தேறிய சொத்தின் பெறுமதியின் அடிப்படையில் ஒவ்வொரு நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனியினதும் சந்தைப் பங்களிப்பினை பிரதபலிக்கின்றது. (உருவம் 17)

**உருவம் 17: 31 டிசம்பர் 2015 இல் உள்ளவாறான நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் சந்தை பங்களிப்பு**



# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

## கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் வலியுறுத்தல்

**உருவம் 18: கண்காணிப்பு/புலனாய்வுகள்/வலியுறுத்தல் செயல்முறை/பாய்வுப்படம்**




1. மெய்நேர சந்தை கண்காணிப்பு மற்றும் கண்டுபிடிப்பு
2. எழுப்பப்பட்ட மற்றும் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆலோசனைக் கோரல்கள்
3. கண்காணிப்பு மற்றும் புலனாய்வுக் குழுவில் கலந்தாலோசிக்கப்பட்ட ஆலோசனைக் கோரல்கள். இதன்பின்னர் மேற்கொள்ளவேண்டியதை வழிகாட்டுபவை.
4. முற்றுமுழுதான புலனாய்வு அவசியமான விடயங்கள்
5. கண்டுபிடிப்புகளுடன் கண்காணிப்பு மற்றும் புலனாய்வுக் குழுவினது சிபாரிசுடன் ஆணைக்குழு அறிவிக்கப்படுகின்றது.
   சட்ட அமுலாக்கல் பிரிவிற்கு வலியுறுத்தல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்
   வலியுறுத்தல் /சட்டமா அதிபர் திணைக்களத்தினது அபிப்பிராயம்

இ.பி.ப.ஆ. மூன்றாம் தரப்புகள்

## கண்காணிப்பு

இ.பி.ப.ஆ. சந்தை துர்நடத்தைகளை கண்டுபிடித்து தவிர்ப்பதற்காக கொ.ப.ப. இன் வர்த்தக நடவடிக்கைகளை பயனுறுதியுடன் கண்காணிப்பதற்கு பொறுப்பாயுள்ளது. நாம் பின்வருவன உள்ளடங்களாக பல்வேறு கண்காணிப்பு கருவிகளில் தங்கியுள்ளோம். அசாதாரணமான சந்தை நடவடிக்கைகளை இனங்காண்பதற்காக மெய்நேர வர்த்தகத் தரவுகள், வரலாற்றுத் தரவுகள், எச்சரிக்கைகள் மற்றும் கொ.ப.ப. இலிருந்து பரிந்துரைகள் மற்றும் ஏனைய பங்காளிகளிடமிருந்து தகவல்கள் என்பவற்றில் தங்கியுள்ளது.

இவ்வருடத்தில் நாம் சில கண்காணிப்பு முறைகள் மற்றும் செயல்முறைகளை சீரமைத்து மேம்படுத்தியதுடன் சந்தை துர்ப்பிரயோகங்கள் / பாதகமான நிலைமைகள் என்பவற்றை கண்டுபிடித்து சந்தையில் சாத்தியப்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்கான பொருத்தமான

செயல்திறனான நடவடிக்கையை தொடர்வதற்கு முயற்சித்தோம். (உருவம் 18).

மேம்படுத்தப்பட்ட இந்த கண்காணிப்பு கொள்கைக்கமைய, இ.பி.ப.ஆ. சில தரகர்கள் / வர்த்தகர்கள் / முதலீட்டாளர்களது அசாதாரணமான சந்தை நடத்தைகள் மற்றும் வழமைக்கு மாறான வர்த்தகப் போக்குகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்து விளக்கத்திற்காக உடனடியாக தொடர்புடைய தரகர்கள் / வர்த்தகர்களை தொடர்புகொண்டு அவர்களது வர்த்தக போக்குகள் அவதானிக்கப்படுகின்றன என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. சிலசமயங்களில், நாம் தரகர்கள் /வர்த்தகர்களை எச்சரித்தோம் மற்றும் அவர்களது விளக்கங்கள் எளிதில் நம்பத்தக்க வகையில் தோன்றாதவிடத்து நாம் மேற்கூறிய தரகர்கள் மற்றும் முதலீட்டாளர்களை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கு ஓர் விழிப்புநிலை பட்டியலை உருவாக்கினோம்.

இந்த கொடுக்கல் வாங்கல்களில் மேலதிக நடவடிக்கை அவசியமானது என நாம் எதிர்நோக்கினால், நாம் ஓர் முற்றுமுழுதான பகுப்பாய்வினை நடாத்தி கண்காணிப்பு மற்றும் விசாரணைகள் குழுவுக்கு ஓர் அறிக்கையினை சமர்ப்பித்தோம். இதன்பின்னர், குழுவானது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றிய தீர்மானத்தை எடுக்கும். இவ்வாண்டில், நாம் 87 நபர்களிடமிருந்து (61 தரகர்கள் / வர்த்தகர்கள் / இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் 26 முதலீட்டாளர்கள்) விளக்கங்களை கோரினோம்.

கண்காணிப்பு கடமையினை மேம்படுத்துவதற்காக நாம் ஓர் புதிய கண்காணிப்பு முறையினை பெற்றுக்கொள்வதற்கு அல்லது நடைமுறையிலுள்ளதனை சிறப்பம்சங்களுடன் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்தோம்.

நிதியியல் குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் என்பவற்றிற்கு அவர்களது புலன்விசாரணைகளுக்காக முழுமையான அறிக்கைகளை வழங்கி இ.பி.ப.ஆ. துணைபுரிந்தது. மேலாக, பங்குச் சந்தை ஒழுங்காக செயற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இணையத்தளங்கள் மற்றும் முதலீட்டாளர் வலைப்பதிவுகளை கணக்காணித்தோம்.

2015 இல், நாம் பல்வேறு விடயங்களில் மொத்தமாக 8 கண்காணிப்பு ஆலோசனைக் கோரல்களை தயாரித்தோம். இவற்றில் 3 விடயங்கள் உள்ளுறைபவர் வர்த்தகமாகவும், 4 விடயங்கள் முன்னோடுதலாகவும் 1 விடயம் சந்தை கையாளுகையாகவும் இனங்காணப்பட்டன.

### புலனாய்வுகள்

கண்காணிப்பு கண்டுபிடிப்புகள், பங்குப் பரிமாற்றகத்திலிருந்து ஆலோசனைக் கோரல்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் போன்றவை உள்ளடங்களான பல்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு இ.பி.ப.ஆ. பிணையங்கள் சட்டங்களில் சந்தேகத்திற்கிடமான மீறுதல்களை பரிசீலிப்பதற்காக புலனாய்வுகளை நடாத்துகின்றது.

2015 இல், சந்தேகத்திற்கிடமான சந்தை துர்நடத்தைகள், சந்தை / விலைக் கையாளுகை உள்ளடங்களாக, உள்ளுறைபவர் வர்த்தகம், முன்னோடுதல் போன்றவற்றில் இ.பி.ப.ஆ. புலனாய்வுகளை நடாத்தியது. குறிப்பிட்ட புலனாய்வுகளில் சில 2015 க்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கும் மேலாக, 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்து அதே ஆண்டில் முடிவுற்ற ஓர் புலனாய்வு தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் அபிப்பிராயம் பெறப்பட்டதுடன் இது மீளாய்வாண்டில் நிலுவையாயுள்ளது. மேலும், 2014 இல் மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஆலோசனை கோரி அனுப்பிவைக்கப்பட்ட ஏனைய மூன்று விடயங்கள் மீளாய்வாண்டில் நிலுவையிலுள்ளன.

மேலும், முன்னைய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட மூன்று புலனாய்வுகளில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் பணிப்பிற்கிணங்க மேலதிக புலனாய்வுகள் நடாத்தப்பட்டன.

2015 டிசம்பர் இறுதியில் குறிப்பிட்ட புலனாய்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலவரம் ஆகியவற்றின் விளக்கங்கள் மற்றும் ஓர் சுருக்கமான விபரம் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 19)

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

**உருவம் 19 : புலனாய்வுகளின் விபரங்கள்**

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை /தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| உள்ளுறைபவர் வர்த்தகம் 1 | 1 | ➲ 2015 டிசம்பர் இறுதியில் ஓர் உள்ளுறைபவர் வர்த்தகப் புலனாய்வு தொடர்பான அறிக்கையொன்று தொகுக்கப்பட்ட வண்ணமுள்ளது. |
| சந்தை / விலை கையாளுகை 2 | 2 | ➲ 2014 இல், சந்தை / விலை கையாளுகையில் ஓர் புலனாய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், இரண்டு நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயமானது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டதுடன் 2015 இன் இறுதியில் இவ்விடயமானது அதற்குரிய திணைக்களத்திடம் நிலுவையிலுள்ளது.<br>➲ 2015 டிசம்பர் இறுதியில், இரண்டு பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் குறிப்பிட்ட சில முதலீட்டு ஆலோசகர்களினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்களில் ஓர் விசாரணை நடந்தவண்ணமுள்ளது. |
| சந்தை / விலைக் கையாளுகை மற்றும் /அல்லது உள்ளுறைபவர் வர்த்தகம் | 03 | ➲ 2014 ஆம் ஆண்டில் சந்தை /விலைக் கையாளுகை மற்றும் / அல்லது உள்ளுறைபவர் வர்த்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மூன்று நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயமானது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டதுடன் 2015 இன் இறுதியில் இவ்விடயமானது அதற்குரிய திணைக்களத்திடம் நிலுவையிலுள்ளது.<br>➲ 2015 இன் இறுதியில் இத்தகைய ஓர் புலனாய்வு தொடர்பான அறிக்கையானது தொகுக்கப்பட்டவண்ணமுள்ளது.<br>➲ 2015 இன் இறுதியில் இன்னுமோர் புலனாய்வு நடந்தவண்ணமுள்ளது. |
| முன்னோடுதல் 3 | 02 | ➲ மீளாய்வாண்டில், சந்தேகத்திற்கடமான முன்னோடுதலை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஆலோசனைக் கோரல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட ஓர் புலனாய்விலான அறிக்கையானது கண்காணிப்பு மற்றும் புலனாய்வுக் குழுவினால் நிதானமாக சிந்திக்கப்பட்டது. குறிப்பிட்ட புலனாய்வின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு வலியுறுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு குழு தீர்மானித்தது.<br>➲ 2015 இன் இறுதியில், இத்தகைய ஓர் புலனாய்வு தொடர்பான அறிக்கையானது தொகுக்கப்பட்டவண்ணமுள்ளது. |
| ஒரு பங்குத்தரகுக் கம்பனியினால் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்கள் தொடர்பான சந்தேகத்திற்கிடமான முறைகேடான நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு | 01 | ➲ இது தொடர்பான புலனாய்வானது 2012 இல் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயலகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவாறும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் அறிவுறுத்தப்பட்டவாறும் இவ்விடயம் தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரிடமிருந்து ஓர் முறைப்படியான அபிப்பிராயத்திற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.<br>➲ 2015 டிசம்பரில் இம்முறைப்படியான அபிப்பிராயமானது நிலுவையிலுள்ளது. |

*1 ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பங்குகளில், அக்குறிப்பிட்ட கம்பனியின் பிணையங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படாத விலை உணர்திறன் தகவல்களை வைத்திருக்கும் சமயம் வர்த்தகம் மேற்கொள்ளல்.*

*2 ஓர் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களது விலை அல்லது வர்த்தகம் தொடர்பாக ஓர் பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் தோற்றப்பாட்டினை உருவாக்குதல்.*

*3 ஒரு வாடிக்கையாளருக்கு குறித்த கம்பனியின் பிணையங்களில் கணிசமான அளவு கொள்வனவு அல்லது விற்பனைக்கு முன்னர் ஒரு கம்பனியின் பிணையங்களில் வர்த்தகத்தினை மேற்கொண்டு அதன் பின்னர் இலாபமடையும் நோக்கத்துடன் அக்குறிப்பிட்ட பிணையங்களில் வர்த்தகம் செய்தல்.*

| புலனாய்வுகளின் தன்மை | புலனாய்வுகளின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை /தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| முறைப்பாடுகள் | 02 | ➲ 2014 ஆம் ஆண்டில் ஒரு பங்குத்தரகுக் கம்பனிக்கெதிராக முதலீட்டாளர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இரண்டு புலனாய்வுகள் நடாத்தப்பட்டன. வலியுறுத்தல் நடவடிக்கைக்கு சிபாரிசு செய்யப்பட்ட அத்தகைய ஒரு புலனாய்வு 2015 இல் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் கருத்திலெடுக்கப்பட்டதுடன் மற்றைய புலனாய்விலான அறிக்கை மீளாய்வாண்டில் தொகுக்கப்பட்டது. |
| ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் வணிக விவகாரங்கள் தொடர்பான புலனாய்வு | 01 | ➲ 2014 இல் ஒரு பட்டியலிடப்பட்ட கம்பனியின் வணிக விவகாரங்கள் தொடர்பான புலனாாய்வுகள் அறிக்கை மற்றும் புலனாய்வு தொடர்பான விபரங்கள் சட்ட நடவடிக்கை யாருக்கு எதிராக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனை இனங்காண்பதற்காக மதிப்பிற்குரிய சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.<br><br>➲ 2015 இன் இறுதியில், இவ்விடயம் தொடர்பான மதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் ஆலோசனை நிலுவையிலுள்ளது. |
| ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியினால் பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் நியமத்தின் சந்தேகத்திற்கிடமான மீறுதல் தொடர்பான புலனாய்வு | 01 | ➲ இவ்விடயத்திலான அறிக்கையானது மீளாய்வாண்டில் புலனாய்வுக் குழுவின் அங்கத்தவர்களிடையே சுற்றனுப்பப்பட்டது. |
| முன்னைய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களிலான மேலதிக புலனாய்வுகள் | 03 | ➲ ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் பணிப்பின் நிமித்தம், முன்னைய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட புலனாய்வுகளின் குறிப்பிட்ட சில புதிய வர்த்தக தோற்றத்தில் மேலதிக புலனாய்வுகள் நடாத்தப்பட்டன.<br>➲ 2015 இன் இறுதியில் புலனாய்வுகள் நடந்தவண்ணமுள்ளன. |
| ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியினால் உரிமை வழங்கல் நிதி கையாடல் தொடர்பான புலனாய்வு | 01 | ➲ 2015 இன் இறுதியில் புலனாய்வுகள் நடந்தவண்ணமுள்ளன. |
| கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தின் பட்டியலிடல் விதிகளுக்கு அமைவுறாமை | 01 | ➲ 2015 இன் இறுதியில் புலனாய்வுகள் நடந்தவண்ணமுள்ளன. |
| ஓர் முன்னாள் முதலீட்டு முகாமைத்துவக் கம்பனிக்கெதிரான ஆரம்பகட்ட விசாரணை | 01 | ➲ 2015 இல், குறிப்பிட்ட ஆரம்பகட்ட விசாரணை தொடர்பான அறிக்கையானது புலனாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

**முறைப்பாடுகள்**

பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பான 87 விடயங்களை இ.பி.ப.ஆ. கையாண்டதுடன் மீளாய்வாண்டில் 82 விடயங்கள் தீர்த்துவைக்கப்பட்டன.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

**வழக்காடல்கள்**

**மெக்பெக் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் எதிர் இ.பி.ப.ஆ. வழக்கு இலக்கம் HCMCA 217/2007**

இ.பி.ப.ஆ. விதிகளுக்கு முரணாக சில முக்கியமான தகவல்களை உடனடியாக வெளிப்படுத்தாமைக்காக அறிவுபடைத்த கொழும்பு கோட்டை நீதிவான் அவர்களினால் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் தீர்ப்புக்கும் அவர்களது தண்டனைத் தீர்ப்புக்கும் எதிராக மாகாண மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்கள். மாகாண மேல்நீதிமன்றத்தின் அறிவுபடைத்த நீதிபதி அவர்கள் இவ்விடயத்தில் ஓர் இணக்கமாக மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை உறுதிப்படுத்தி இரண்டு குற்றச்சாட்டெண்களுக்கும் தலா ரூபா 3.0 மில்லியனை குற்றப்பணமாக விதித்தார். அறிவுபடைத்த நீதிவான் அவர்களால் சுமத்தப்பட்ட சிறைவாசத் தண்டனையானது ஒதுக்கிவைக்கப்பட்டது. குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனைத் தீர்ப்பு இரண்டிற்கும் எதிரான 6ஆம் குற்றஞ்சாட்டப்பட்ட மேன்முறையீட்டாளரது மேன்முறையீடானது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

**இ.பி.ப.ஆ. எதிர் மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் ஏனையோர் நீ.நீ. வழக்கு இலக்கங்கள் S/72082/2010 & S/72083/2010**

இ.பி.ப.ஆணைக்குழுவின் விதி இலக்கம் 3(1) மற்றும் 17க்கு முரணாக 31 மார்ச் 2008 மற்றும் 31 மார்ச் 2009 இல் நிறைவடைந்த நிதியாண்டுகளுக்கான கம்பனியின் ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறியமைக்காக மிரமார் பீச் ஹோட்டல்ஸ் மற்றும் கம்பனியின் பணிப்பாளர்களுக்கெதிராக 2010 நவம்பர் 04 இல் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

கம்பனியானது 2015 ஆம் ஆண்டில் 31 மார்ச் 2008 மற்றும் 31 மார்ச் 2009 இல் நிறைவடைந்த நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சந்தைக்கு வெளியிட்டது. இதன் பின்னர் கம்பனியானது குறிப்பிட்ட வருடாந்த அறிக்கைகள் இப்போது சந்தைக்கு வெளியிடப்பட்டதன் அடிப்படையில் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளையும் வாபஸ் செய்வதன் மூலம் இ.பி.ப.ஆ. இனை இந்த விடயத்தினை தீர்த்துவிடுமாறு வேண்டுதல் விடுத்தது.

ஆணைக்குழுவானது ஆழ்ந்து ஆராய்ந்ததன் பின்னர் இவ்வேண்டுதலானது நிராகரிக்கப்பட்டதுடன் இவ்விடயமானது கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் முன் நிலுவையிலுள்ளது.

**மினு மனோ மெல்வானி எதிர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் ஏனையோர். மேன்முறையீட்டு நீதிமன்றம் (W) 128 / 2015**

திருமதி. எம். எம். மெல்வானியினால் தாக்கல் செய்யப்பட்ட ஆணை விண்ணப்பத்தில் இ.பி.ப.ஆ. மற்றும் ஏனைய மூன்று பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. இவர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை நாடுகின்றார்.

- இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இனை பின்வருவனவற்றிற்கு கட்டாயப்படுத்தும் மற்றும் / அல்லது பணிப்புறுத்தும் ஆணையீட்டெழுத்தானை தன்மையில் ஓர் பணிப்பாணை:
  அ. மூன்றாவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் பங்குத் தரகரில் இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 13 (i) மற்றும் 46 ஏ என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் நடாத்தப்பட்ட நியதிச்சட்ட விசாரணை / புலனாய்வினை பின்வருவனவற்றிற்காக துரிதமாக நிறைவேற்றல் வேண்டும். இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஓர் வெளிப்படையான, நம்பகத்தன்மையான மற்றும் பாரபட்சமற்ற விதத்தில் ஏதேனும் தவறுகள் இழைக்கப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்காகும்.

  ஆ. பங்குத் தரகருக்கெதிராக முறைப்பாடு செய்யப்பட்ட மேற்கூறிய சட்டத்திற்கு முரணான மற்றும் /அல்லது ஒழுங்கற்ற நடத்தையில் இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவுகள் 13 (i) மற்றும் 46 ஏ என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய ஓர் முற்றான மற்றும் பாரபட்சமற்ற புலனாய்வினை ஆரம்பித்தல். இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேலே குறிப்பிட்ட நியதிச்சட்ட விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகளையும் ஒன்றிணைத்து ஏதேனும் தவறுகள் இழைக்கப்பட்டதா என்பதை உறுதிசெய்வதற்காக இதனை தொடர்ச்சியாக முன்னெடுத்து ஓர் துரிதமான முடிவிற்கு வருதல்.
- இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 51 இன் ஏற்பாடுகளுக்கமைய முறைப்பாடு செய்யப்பட்டவாறு பங்குத் தரகர் மற்றும் /அல்லது தவறுகளை இழைப்பதில் தொடர்புடைய ஏனையவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடருதல்
- நியதிச்சட்ட விசாரணை /புலனாய்வின் நிறைவில் இ.பி.ப.ஆ. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பங்குத் தரகர் ஏதேனும் தவறினை இழைத்தவராக குற்றமுடையவராயின் அப் பங்குத்தரகருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்தல் மற்றும் /அல்லது நீக்குதல் மற்றும் /அல்லது அழித்தல்.
- முறைப்பாட்டாளருக்கு ஏற்பட்ட பணவகை நட்டங்களான ரூபா 60,423,327.68 இனை தீர்ப்பதற்காக இ.பி.ப.ஆ. சட்டத்தின் பிரிவு 13 (d) இன் ஏற்பாடுகளுக்கமைய முறைப்பாட்டாளருக்கு நட்டஈடு வழங்குதல்.
- கொ.ப.ப. இன் பங்குத் தரகர் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய கொ.ப.ப. இனை பங்குத் தரகருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் பொருத்தமான வலுவளிப்புகளையும் சுமத்துமாறும் திட்டவட்டமான பணிப்புரைகளை வழங்குதல்.

இந்த விடயத்தில் இ.பி.ப.ஆ. புலனாய்வினை ஏற்கனவே முடிவுறுத்தியுள்ளதுடன் வலியுறுத்தலுக்கான ஓர் சிபாரிசு ஏற்கனவே

மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏதேனும் வலியுறுத்தல் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் இவ்விடயத்தை கொ.ப.ப. இன் ஒழுக்காற்று குழுவிற்கு அனுப்புமாறு ஆணைக்குழு பணித்தது. இவ்விடயமானது மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு முன்னால் நிலுவையிலுள்ளது.

### வலியுறுத்தல் செயற்பாடுகள்

ஆணைக்குழுவின் வழிகாட்டல் மற்றும் தீர்மானத்தின் பிரகாரம் இ.பி.ப.ஆ. ஆல் வலியுறுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளுக்காக இ.பி.ப.ஆ. மூன்று விடயங்களை மதிப்பிற்குரிய சட்டமா அதிபரது ஆலோசனைக்காக அனுப்பிவைத்தது.

### மதிப்பிற்குரிய சட்டமா அதிபரது அபிப்பிராயத்திற்காக அனுப்பிவைக்கப்பட்ட விடயங்கள்

2012 இல் தேசிய சேமிப்பு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட த வைனான்ஸ் பி எல் சி இனது பங்குகள் கொள்வனவில் நடாத்தப்பட்ட ஓர் புலனாய்வு தொடர்பாக அபிப்பிராயம் கோரப்பட்டது. பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் கோவையினை மீறியமைக்கான ஓர் சார்த்துரையில் இ.பி.ப.ஆ. ஆல் நடாத்தப்பட்ட ஓர் ஆரம்பகட்ட விசாரணையானது நிலுவையிலுள்ளது.

### தவறுதல் பலகைக்கு மாற்றல் செய்யப்பட்ட கம்பனிகளுக்கெதிரான நடவடிக்கை

வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்காமைக்காக தொடர்ச்சியாக தவறுதல் பலகையில் காணப்பட்ட இரண்டு கம்பனிகளுக்கு எதிராக வழக்கினை ஆரம்பிப்பதற்கான நடடிவடிக்கைகளை இ.பி.ப.ஆ. மேற்கொண்டுள்ளது. அமைவுறுமாறு இ.பி.ப.ஆ. ஆல் மேற்கொள்ளப்பட்ட பல வேண்டுகோள்களுக்கு பதிலளிக்காத கம்பனிகளுக்கெதிராக வழக்குத்தொடர்வதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

### கொ.ப.ப. இன் அறிவுசார் சொத்து உரிமையினை மீறி வணிகம் மேற்கொள்ளும் ஓர் கம்பனி

கொ.ப.ப. இனால் மேற்கொள்ளப்பட்ட ஓர் முறைப்பாட்டினையடுத்து கொ.ப.ப. இன் அறிவுசார் சொத்து உரிமையினை மீறி வணிகத்தில் ஈடுபட்ட ஓர் இணையத்தளத்தின் செயற்பாடுகளை நிறுத்துமாறு இ.பி.ப.ஆ. பணித்தது.

## மூலதனச் சந்தை அபிவிருத்தி

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சந்தைகளது ஆழமான மற்றும் பரவலான அபிவிருத்தி அவசியமானதாகும். மீளாய்வாண்டில் இ.பி.ப.ஆ. பின்வரும் முன்னெடுப்புகளுக்கு வசதியளித்தது.

### மத்திய எதிர் தரப்பினர் பொறிமுறையின் (ம.எ.த.) அமுலாக்கம்

- பொருத்தமான இடர்நேர்கை முகாமைத்துவ பொறிமுறையுடனான ஓர் நன்கு வடிவமைக்கப்பட்ட ம.எ.த. ஆனது சந்தையில் தற்போது காணப்படும் சொத்துக் கடப்பாடு மற்றும் தீர்ப்பனவு இடர்நேர்கைகளை கருத்திற்கொள்வதுடன் நிதியியல் ஸ்திரத்தன்மை இலக்குக்கும் பங்களிக்கும்.
- எனவே, அனைத்து நிதியியல் சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்கும் ம.எ.த. பொறிமுறையினை அமுலாக்குதல் ஓர் முதன்மை திட்டமாக இனங்காணப்பட்டது. இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தை கட்டமைப்பிற்கான முன்னேற்றங்களை விரைவுபடுத்தும் முகமாக இத்திட்டத்தின் ஆலோசனை சேவைகளுக்கு கூட்டு நிதியளிப்பதன் மூலம் வசதியளிக்கின்றது.
- ஆரம்பத்தில், இ.பி.ப.ஆ., இலங்கை மத்திய வங்கி (இ.ம.வ.) மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (கொ.ப.ப.) என்பன அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஓர் ஒன்றிணைக்கப்பட்ட ம.எ.த. இனை கூட்டாக நிறுவுவதற்கு ஓர் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், முதலாம் கட்டத்தின் இறுதிப் பகுதியில் இ.ம.வ. இத்திட்டத்திலிருந்து வெளியேறுவதற்கு தீர்மானித்தது. தற்போது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. என்பன கூட்டாண்மை பிணையங்கள் தொடர்பாக இந்த முன்னெடுப்பினை முன்கொண்டு செல்கின்றன.
- இந்த முன்னெடுப்பினை முன்கொண்டு செல்வதற்காக ஆலோசனை மற்றும் திட்ட முகாமைத்துவ சேவைகளுக்காக அழைப்புவிடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஓர் முற்றுமுழுதான மதிப்பீட்டு செயல்முறையின் பின்னர், உலகளாவிய ரீதியில் மூலதனச் சந்தை தொடர்பான ஒப்படைப்புகளில் விசேடத்துவம் வாய்ந்த ஓர் நிறுவனம் ஆலோசனை மற்றும் திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.
- பின்வரும் உருவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இத்திட்டத்தின் நிறைவிற்கு ஐந்து கட்டங்கள் காணப்படுகின்றன. (உருவம் 20)

**உருவம் 20: திட்டத்தின் ஐந்து கட்டங்கள்**

| | |
|---|---|
| கட்டம் 1 | வணிகத் தேவைப்பாடுகள் மற்றும் ஆரம்ப அறிக்கை |
| கட்டம் 2 | கொள்வனவு மற்றும் விற்பனையாளர் முகாமைத்துவம் |
| கட்டம் 3 | சட்ட, முறைமைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டு ஆவணங்கள் |
| கட்டம் 4 | ம.எ.த. இனது செயற்படுத்துகை மற்றும் நேரலையாக செல்லல் |
| கட்டம் 5 | அமுல்படுத்தலின் பின்னரான உறுதுணை |

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

- பல்வேறு கட்டங்களினூடாக இத்திட்டத்தின் முன்னேற்றத்தில் வினைத்திறன் மற்றும் விளைவுடைமையினை உறுதிசெய்வதற்காக ஓர் ஒன்றிணைக்கப்பட்ட திட்ட முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பானது நிறுவப்பட்டுள்ளது.
- 2015 மார்ச் 09 முதல் 13 வரையான காலப்பகுதியில் திட்டத்தின் செயற்குழு மற்றும் சந்தை பங்குபற்றுனர்களுக்காக ஆலோசகர்களினால் ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டது. செயலமர்வின்போது பின்வரும் முக்கிய பிரிவுகளை வலியுறுத்தி ம.எ.த. கட்டமைப்பிற்காக ஒட்டுமொத்த அணுகுமுறையானது கலந்துரையாடப்பட்டது. சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்கள், இடர்நேர்கை முகாமைத்துவம், வணிக மற்றும் செயற்பாட்டு விடயங்கள், மென்பொருள் மற்றும் வன்பொருட்களது கொள்வனவு, தகவல் தொழில்நுட்பம், நிதியியல் மற்றும் வரி விளைவுகள் என்பனவாகும்.
- மேற்கூறப்பட்ட பிரிவுகள் தொடர்பாக ஆலோசகர்கள் ஒப்படைகளை சமர்ப்பித்ததுடன் இவற்றை திட்டத்தின் அனைத்து செயற்குழுக்களும் முழுமையாக மீளாய்வு செய்து அவசியமான திருத்தங்களை அறிவுறுத்தியது. இதன் பின்னர் அனைத்து ஒப்படைகளும் பங்காளிகளினால் அங்கீகரிக்கப்பட்டன.
- ஆலோசகர்கள் திட்டத்தின் முதலாம் கட்டத்தை நிறைவேற்றியதுடன் ஓர் ஆரம்ப அறிக்கையினை சமர்ப்பித்தார்கள். இது சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பு, சர்வதேச தீர்ப்பனவுகளுக்கான வங்கி ஆகியவற்றின் நிதியியல் சந்தை கட்டமைப்பு கொள்கைகளுக்கு அமைவாகவும் ம.எ.த. தீர்வக இல்லங்களின் ஐரோப்பிய சங்கங்களின் வழிகாட்டிகளுக்கு ஏற்பவும் காணப்பட்டன. ஆரம்ப அறிக்கையின் பாகங்கள் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கின;
  - வணிக மற்றும் செயற்பாட்டு வடிவமைப்பு
  - இடர்நேர்கை முகாமைத்து வடிவமைப்பு
  - சட்ட, முறைமைப்படுத்தல், வரி இடைவெளிகள் மற்றும் பொருத்தமான சட்ட மறுசீரமைப்புக்கான அணுக்கம்
  - உரித்துவம் மற்றும் ஆளுகை கட்டமைப்பு
  - தகவல் தொழில்நுட்ப தேவைப்பாடுகள்
  - நிதியியல் மாதிரி மற்றும் முக்கியத்துவங்கள்
- அதன் பின்னர், இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ம.எ.த. திட்ட குழுவினரது சிங்கப்பூர் மற்றும் மலேஷியாவிற்கான விஜயத்திற்கு வசதியளிப்பதற்கு ஆணைக்குழுவானது தீர்மானித்தது. இது ஆரம்ப அறிக்கையினை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் ஆலோசகர்களினால் சிபாரிசு செய்யப்பட்ட மாதிரியினை மட்டக்குறியிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டது.
- இந்த தெரிந்துகொள்வதற்கான விஜயமானது 2015 ஆகஸ்ட் 25 முதல் 29 வரை சிங்கப்பூர் நாணய அதிகார சபை (சி.நா.அ.ச.) மற்றும் சிங்கப்பூர் பங்குப் பரிவர்த்தனையின் தீர்வக அங்கமான மத்திய வைப்பக (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்பட்டது. இதற்கும் மேலாக, குழுவானது பொருத்தமான தீர்வக செயற்பாடுகளை ஆழமாக கற்பதற்காக CLSA (தீர்வக அங்கத்தவர் மற்றும் தரகர் - நிறுவனங்கள்) செட் கிளியர், HSBC (காப்பாளர்) மற்றும் CIMB (தரகர் - சிற்றளவு) ஆகியவற்றிற்கும் விஜயம் மேற்கொண்டது.
- திட்டக் குழுவானது ம.எ.த. வணிகம் மற்றும் சிங்கப்பூரில் உள்ள செயற்பாட்டு மாதிரி மற்றும் ஆலோசகர்களினால் பிரேரிக்கப்பட்ட மாதிரி என்பவற்றுக்கிடையேயான சிறப்பியல்புகளின் ஒப்பீடு உள்ளடங்களான ஓர் அவதானிப்பு அறிக்கையினை முடிவுறுத்தி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தது. ஆணைக்குழுவானது ஆரம்ப அறிக்கையினை ஏற்றுக்கொண்டது.
- இ.பி.ப.ஆ. சட்டத்தின் திருத்தங்களை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழுவானது ம.எ.த. தொடர்பான வரைவு ஏற்பாடுகளை மீளாய்வு செய்கின்றது.
- இ.ம.வ. இன் வெளியேற்றத்துடன் பிரேரிக்கப்பட்ட ம.எ.த. வடிவமைப்பிற்கு தேவையான திருத்தங்களை ஒன்றிணைத்த நிகழ்வரையாக்கப்பட்ட ஆரம்ப அறிக்கையானது ஆலோசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

**தரகர் உறுதுணை காரியாலயம் (த.உ.கா.) மற்றும் கட்டளை முகாமைத்துவ முறை (க.மு.மு.)**

- இ.பி.ப.ஆ. பங்குத் தரகு நிறுவனங்களுக்கான த.உ.கா. மற்றும் க.மு.மு. இனது அமுலாக்கலுக்கு வசதியளிக்கின்றது. இது பங்குத் தரகு நிறுவனங்கள் வர்த்தகத்தின் செயற்திறன், தீர்ப்பனவு ஆகியவற்றை மேம்படுத்தவும், பங்குத் தரகர்களது த.உ.கா. முறையில் ஒருமைப்பாட்டினை பராமரிப்பதற்குமாகும். இவை ம.எ.த. பொறிமுறையின் அமுலாக்கத்திற்கு அவசியமானவையாகும்.
- த.உ.கா. மற்றும் க.மு.மு. அமைப்பு தொடர்பாக ஓர் திட்ட அறிக்கைக்கான கோரிக்கை இ.பி.ப.ஆ., கொ.ப.ப. மற்றும் பங்குத் தரகு நிறுவனங்களினால் கூட்டாக விருத்திசெய்யப்பட்டன.
- அமுல்படுத்தல் முகவராக செயற்படும் கொ.ப.பரிவர்த்தனையானது த.உ.கா. மற்றும் க.மு.மு. இனை வழங்குவதற்கான திட்ட அறிக்கைக்கான கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரக்குறிப்புகளுக்கு இணங்கும் ஆர்வமுள்ள விற்பனையாளர்களை வரவேற்றது.
- நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதியியல் மதிப்பீட்டுக் குழுவின் முற்றுமுழுதான மதிப்பாய்வு செயல்முறையின் பின்னர், நான்கு விற்பனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்கள், நொமுரா ரிசர்ச் இன்ஸ்டிடியூட், அயர்ன்வன் டெக்னோலோஜீஸ் லிமிட்டட், டிரக்ட் எவ்னன் டெக்னோலோஜீஸ் லிமிட்டட் மற்றும் போலரிஸ் வைனான்சியல் டெக்னோலோஜீஸ் லிமிட்டட் என்பனவாகும்.
- திட்டத்தின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காகவும் முன்னெடுப்பினை விரைவுபடுத்துவதற்காகவும், இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இன் உத்தியோகத்தர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் த.உ.கா. மற்றும் க.மு.மு. திட்டக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டது.
- திட்டக் கண்காணிப்புக் குழுவானது அமைப்பு விற்பனையாளர்களது பிரதிநிதிகளுடனும் பங்குத்தரகு நிறுவனங்களுடனும்,

முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்காகவும் த.உ.கா. மற்றும் க.முமு. இனது அமுலாக்கல் தொடர்பான ஏதேனும் கரிசனைகளை கையாள்வதற்காக கிரமமான கூட்டங்கள் நடைபெறுகின்றன.

- நேரலையாகச் செல்வதற்கான இலக்கு 31 மார்ச் 2016 ஆகும்.
- இத்திட்டத்திற்கு இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இனால் கூட்டாக நிதியளிக்கப்படுவதுடன், இ.பி.ப.ஆ. இன் பங்களிப்பானது ஒவ்வொரு பங்குத் தரகு நிறுவனத்திற்கும் தலா ரூபா 5 மில்லியன் ஆகும்.
- நிதிக் கொடுப்பனவு தொடர்பான விதிமுறைகளும் வரையறைகளும் கூட்டாக இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. இனால் முடிவுறுத்தப்பட்டன. மேலும், இந்த விதிமுறைகளும் வரையறைகளும் அந்தந்த பங்குத்தரகு நிறுவனங்களினால் இணங்கப்பட்டு கையொப்பமிடப்பட்டன.
- நிதியானது பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. பொருத்தமானவிடத்து ஒவ்வொரு திட்டத்தினதும் மைற்கல்லை அடைந்தமைக்கான எழுத்துமூல உறுதிக்கமையவும் பின்வரும் நபர்களினால் திட்டத்தில் நடாத்தப்படும் ஓர் இணக்கப்பாட்டு கணக்காய்வுக்கமையவும் கொடுப்பனவு செய்யப்படும். இக்கணக்காய்வானது இ.பி.ப.ஆ. மற்றும் கொ.ப.ப. பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் இ.பி.ப.ஆ. ஆல் நியமிக்கப்பட்டிருக்கும் ஓர் வெளிவாரி தகவல் தொழில்நுட்ப ஆலோசகரினாலும் மேற்கொள்ளப்படும்.

### மூலதனச் சந்தைக்கு பரிமாற்றகமூலம் வர்த்தகம் செய்யப்படும் நிதியங்கள் (ப.வ.நி.) மற்றும் ஆதனத்துறை முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புக்கள் (ஆ.மு.ந.பொ.) போன்ற புதிய கருவிகளது அறிமுகம்.

- ப.வ.நி. இல் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கிய கற்கையொன்று நடாத்தப்பட்டது. உலகளாவிய ப.வ.நி. துறை, ச.பி.ஆ.ஒ. னால் ப.வ.நி. தொடர்பான கொள்கைகள் மற்றும் சிங்கப்பூர், ஹொங்கொங், இந்தியா மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளில் ப.வ.நி. தொடர்பான முக்கிய பண்புகளது ஒப்பீடு என்பனவாகும்.
- ஆ.மு.ந.பொ. இல் பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஓர் கற்கை மேற்கொள்ளப்பட்டது. சிங்கப்பூர், மலேஷியா, ஹொங்கொங் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் முறைமைப்படுத்தல் வடிவமைப்பு, மூலதனத் தேவைப்பாடுகள், கருவியினது கட்டமைப்பு, பட்டியலிடல் தேவைப்பாடுகள், முதலீட்டு மூலோபாயம், அனுமதிக்கத்தக்க முதலீடுகள், முதலீடுகளிலான முக்கிய கட்டுப்பாடுகள், வரி நடத்துமுறை மற்றும் விநியோக நடத்துமுறை ஆகியவற்றிலான முக்கிய பண்புகளில் ஓர் ஒப்பீட்டினை உள்ளடக்கியதாகும். இதற்கும் மேலாக இக்கற்கையானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியது:
  - இலங்கையின் சந்தைக்கு ஓர் புதிய முதலீட்டு சொத்து வகுப்பான ஆ.மு.ந.பொ. பினை அறிமுகப்படுத்துவதற்கான உகந்த சூழல்.
  - ஆ.மு.ந.பொ. உடன் இணைந்த நலன்கள் / இடர்நேர்கைகள்
  - ஆ.மு.ந.பொ. இல் இருக்கவேண்டிய கருவியினது சிறப்பியல்புகள் மற்றும் அதனுடன் இலங்கையில் வெற்றிகரமாக ஆரம்பிப்பதற்கு சாத்தியப்படக்கூடிய வரிச் சலுகைகள் போன்ற ஊக்கமூட்டங்கள்.

### பொது - தனியார் பங்குடைமையினூடாக உட்கட்டமைப்பு நிதியளித்தல் மற்றும் ஏனைய மாற்றீட்டு வழிகளான மூலதனச் சந்தையூடான மார்க்கமான உட்கட்டமைப்ப நிதியங்கள் / நம்பிக்கை பொறுப்புக்கள்.

- பொது - தனியார் பங்குடைமையினூடாக (பொ.த.ப.) உட்கட்டமைப்பு நிதியளித்தலுக்கு வசதியளிக்கும்பொருட்டு பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கிய ஓர் கொள்கைப் பத்திரிகை விருத்திசெய்யப்பட்டது.
  - தெரிவுசெய்யப்பட்ட நியாயாதிக்கங்களில் பொ.த.ப. தொடர்பான முன்னெடுப்புகளில் ஓர் ஒப்பீட்டு மதிப்பீடு உள்ளடங்களான உலகளாவிய பொ.த.ப. சந்தையில் ஓர் பகுப்பாய்வு;
  - பொதுப்படையான பொ.த.ப. வடிவ மாதிரிகள், பொ.த.ப. வினை ஊக்குவிப்பதற்கான பாரிய கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் இந்தியாவில் கிடைக்கக்கூடிய பொ.த.ப. செயற்பாடுகள் தொடர்பான ஏனைய முக்கிய தோற்றங்கள்;
  - இலங்கையில் பொ.த.ப. வினை அறிமுகப்படுத்துவதற்கான உகந்த சூழல், நாட்டில் பொ.த.ப. க்கு தற்போது காணப்படும் நிறுவன மற்றும் சட்ட வடிவமைப்பு மற்றும் அதன் குறைபாடுகள்;
  - பொ.த.ப. செயற்பாடுகளை ஊக்குவிக்கும் மற்றும் தற்போதைய சூழலில் காணப்படும் பிரச்சனைகள் மற்றும் நெரிசல்களில் கவனஞ்செலுத்தும் ஓர் ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்பானது பிரேரிக்கப்பட்டது.
- தனியார் உட்கட்டமைப்பு முதலீட்டு கருவிகளில் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கிய ஓர் கொள்கைப் பத்திரிகை விருத்திசெய்யப்பட்டது;
  - புதிய கருவிகள் தொடர்பான சிறப்பம்சங்களில் ஓர் பகுப்பாய்வு;
    - இந்தியாவில் காணப்படும் உட்கட்டமைப்பு முதலீட்டு நம்பிக்கை பொறுப்புக்கள் மற்றும் உட்கட்டமைப்பு கடன் நிதியங்கள்;
    - தாய்லாந்தில் காணப்படும் உட்கட்டமைப்பு நிதியங்கள் மற்றும் உட்கட்டமைப்பு நம்பிக்கை பொறுப்புக்கள்;
  - ஆசிய உட்கட்டமைப்பு திட்டங்களில் ஓய்வூதிய நலன் முதலீடுகள் நோக்கிய உலகளாவிய உந்துதல்;
  - இலங்கையின் மூலதனச் சந்தையில் உட்கட்டமைப்பு தொடர்பான புதிய முதலீட்டுக் கருவிகளை ஊக்குவிப்பதன் இயலுமை.

### ஏனைய முன்னெடுப்புகள்

- இலங்கையில் ஆதனத்துறை முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பினை அறிமுகப்படுத்துவதற்காக விதிகள் மற்றும் வடிவமைப்பினது வரைவு.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

- காப்புறுதிக் கம்பனிகளின் ஆயுள் மற்றும் ஆயுளற்ற வணிகங்களை வேறாக்குவதற்காக இலங்கை காப்புறுதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட முறைமைப்படுத்தல் முன்னெடுப்பிற்கு வசதியளித்தமை.
- ஓர் முதலீட்டாளர்களது சங்கத்தினை நிறுவுவதற்கான பொது கலந்துரையாடல்களது விளைவினை மீளாய்வு செய்தமை.
- தவறுதல் பலகையில் ஓர் நீண்டகாலத்திற்கு கம்பனிகள் காணப்படுவதற்கு தீர்வு காண்பதற்காக செயல்முறைகள் மற்றும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை சீராக்குவதற்காக தவறுதல் பலகையிலுள்ள கம்பனிகளை மீளாய்வு செய்தமை.
- 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியில் மூலதனச் சந்தையூடாக உரித்துடைமை மற்றும் கடன் பிணையங்களை வழங்கி பொதுமக்களிடமிருந்து நிதியைத் திரட்டிய 144 கம்பனிகளை சந்தை வெளிப்படுத்தலுடன் ஒப்பிடும்போது அவை எவ்வாறு இந்நிதியினை பயன்படுத்தின என்பதற்காக மீளாய்வு செய்தது. மீளாய்வின் அடிப்படையில், முறைப்படுத்தல் இடைவெளிகளை தீர்ப்பதற்காக கொள்கைகள் முன்மொழியப்பட்டதுடன், இந்த வெளிப்பாட்டு இடைவெளிகளை நிரப்புவதற்காக எட்டு பட்டியலிடப்பட்ட கம்பனிகள் சந்தைக்கு வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டன. (உருவம் 21)

**உருவம் 21: ஜனவரி முதல் டிசம்பர் வரைக்குமான காலப்பகுதியில் நிதி திரட்டுவதிலான மீளாய்வு**

| விபரங்கள் | ஆ.பொ.வ. உரித்துவம் | பிணையங்களது மேலதிக வழங்கல்கள் உரித்துவம் | பிணையங்களது மேலதிக வழங்கல்கள் கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மீளாய்வு செய்யப்பட்ட வேண்டுதல்களின் எண்ணிக்கை | 03 | 07 | 16 | 26 |

- சில பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் அவர்களது ஆதிக்கமிகைப்புடைய முதலீட்டாளர்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 246 ஆம் பிரிவினை சிறுபான்மை பங்குதாரர்களது பங்குகளை கையகப்படுத்துவதற்கு பயன்படுத்தியுள்ளார்கள். இ.பி.ப.ஆ. இந்த சூழ்நிலைமைகளை மீளாய்வு செய்து சட்டமா அதிபரிடமிருந்து அபிப்பிராயத்தினை பெற்றதன் பின்னர் இத்தகைய நிறுவனங்களுக்கு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 246 ஆம் பிரிவினை கொடுக்கப்பட்ட சூழ்நிலைமையில் கட்டாயப்படுத்தி சிறுபான்மை பங்குகளை கையகப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது என அறிவித்தது.

### மூலதனச் சந்தை கல்வி மற்றும் பயிற்சி

இ.பி.ப.ஆ. இன் மூலதனச் சந்தைக் கல்வி மற்றும் பயிற்றுவித்தல் (மூ.ச.க.ம.ப.) அங்கமானது தொடர்ந்தும் உரிமமளித்தல் பரீட்சைகள், பல்வேறு அவையோருக்கான நிதியியல் கல்வியறிவு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை விநியோகித்ததுடன் பிணையங்கள் துறையிலுள்ள தொழில்வல்லுனர்களுக்கு தொடர்ச்சியான கற்றல் வாய்ப்புக்களையும் வழங்கியது.

### மூலதனச் சந்தையில் சான்றிதல் (மூ.ச.சா.) மற்றும் பதிவுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.)

இவ்வாண்டில் பங்குத் தரகுக் கம்பனிகளிலுள்ள பயிற்சி முதலீட்டு ஆலோசகர்களுக்கான ஆகக்குறைந்த தேர்ச்சி மட்டங்களை வழங்கும் நோக்கில் நாம் தொடர்ந்தும் தகமைக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தினோம். தகமைக் கட்டமைப்பானது மூன்று பிரதான தகமைகளைக் கொண்டுள்ளது. அவையாவன, மூலதனச் சந்தையில் சான்றிதழ் (மூ.ச.சா.), பதிவுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் நிலை (ப.மு.ஆ.) மற்றும் மூலதனச் சந்தையில் டிப்ளோமா (மூ.ச.டி.) என்பனவாகும்.

மூ.ச.க.ம.ப. அங்கமானது மூ.ச.சா. நிகழ்ச்சித்திட்டத்தில் பிணையங்கள் துறையைச் சாராத நபர்களான பாடசாலை கல்வியை முடித்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய துறையைச் சார்ந்த தொழில்வல்லுனர்கள் இணைந்துகொள்வதில் ஓர் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை இனங்கண்டுள்ளது. இந்த வருடத்தில் மொத்தமாக 95 பங்குபற்றுனர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்துள்ளார்கள். (உருவம் 22, 23)

**உருவம் 22: 2015 இல் மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. பரீட்சைகளின் என்பவற்றை நிறைவுசெய்த மாணவர்கள்**

| மொழி மூலம் | பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள் | உரித்துடைமை தொடரை நிறைவு செய்தவர்கள் | கடன் தொடரை நிறைவு செய்தவர்கள் | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறையை நிறைவு செய்தவர்கள் | மூ.ச.சா. நிறைவு செய்தவர்கள் | பதிவு செய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் நிறைவு செய்தவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | 34 | 9 | 9 | 7 | 4 | 7 |
| ஆங்கிலம் | 195 | 35 | 40 | 36 | 33 | 13 |
| மொத்தம் | 229 | 44 | 49 | 43 | 37 | 20 |

**உருவம் 23: மூ.ச.சா. மற்றும் ப.மு.ஆ. க்கு நடாத்தப்பட்ட பரீட்சைகள்**

| நிகழ்ச்சித்திட்டம் | தொடர் | வருடத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | சித்தி % |
|---|---|---|---|
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் தொடர் (சிங்கள மொழி) | உரித்துடைமைத் தொடர் | 1 | 56% |
| | கடன் தொடர் | 1 | 90% |
| | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறை | 1 | 100% |
| மூலதனச் சந்தைச் சான்றிதழ் தொடர் (ஆங்கில மொழி) | உரித்துடைமைத் தொடர் | 4 | 57% |
| | கடன் தொடர் | 4 | 82% |
| | பிணையங்கள் முறைமைப்படுத்தல் மற்றும் நெறிமுறை | 4 | 65% |
| பதிவிடப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (சிங்கள மொழி) | பொருத்தமற்றது | 3 | 74% |
| பதிவிடப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ஆங்கில மொழி) | பொருத்தமற்றது | 4 | 94% |

### மூலதனச் சந்தையில் டிப்ளோமா (மூ.ச.டி.)

இ.பி.ப.ஆ. ஐக்கிய இராச்சியத்தின் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் பட்டய நிறுவகத்துடன் கூட்டிணைந்து மூ.ச.டி. நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்தது. மீளாய்வுக் காலப்பகுதியில் மூ.ச.க.ம.ப. அங்கமானது ஆறாவது தொகுதிக்கான விரிவுரைகளை நிறைவு செய்தது.

### முதலீடு செய்வதில் நிகழ்ச்சித்திட்டம் (மு.நி.)

மூ.ச.க.ம.ப. அங்கமானது இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தில் அவர்களுக்கு அடிப்படையான கோட்பாடுசார்ந்த மற்றும் நடைமுறை அம்சங்களை வழங்கும் நோக்கத்துடன் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மொத்தமாக 54 பங்குபற்றுனர்கள் பதிவுசெய்திருந்தார்கள்.

### முதலீடு செய்வதில் மேம்பட்ட நிகழ்ச்சித்திட்டம் (மு.மே.நி.)

மூ.ச.க.ம.ப. அங்கமானது 2015 ஆம் ஆண்டில் நடைமுறையிலுள்ள முதலீட்டாளர்களுக்கு பங்கு வர்த்தகத்தில் அவர்களுக்கு மேம்பட்ட கோட்பாடுசார்ந்த மற்றும் நடைமுறை அம்சங்களை வழங்கும் நோக்கத்துடன் ஓர் நிகழ்ச்சித்திட்டத்தினை சிங்கள மொழியில் நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு 22 பங்குபற்றுனர்கள் பதிவுசெய்திருந்தார்கள்.

### நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் (ந.அ.பொ.சா.நி.)

இந்நிகழ்ச்சித்திட்டமானது நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி முகாமைத்துவக் கம்பனிகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் ஊழியர்களுக்கான ஆகக் குறைந்த தகமையினை அறிமுகப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ஓர் நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. பின்வரும் ந.அ.பொ.சா.நி. பரீட்சைகள் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. ந.அ.பொ.சா.நி. பரீட்சைகளது புள்ளிவிபரச் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (உருவம் 24)

**உருவம் 24: ந.அ.பொ.சா.நி. பரீட்சைகளின் புள்ளிவிபரச் சுருக்கம் - 2015**

| பரீட்சை மொழிமூலம் | பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர்கள் | முதலீடுகளுக்கான அறிமுகம் மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி தொடரை நிறைவு செய்தவர்கள் | சந்தைப்படுத்தல், விநியோகம், விற்பனை, முதலீட்டு சேவைகள் மற்றும் நெறிமுறைத் தொடரை நிறைவு செய்தவர்கள் | ந.அ.பொ.சா.நி. நிறைவு செய்தவர்கள் |
|---|---|---|---|---|
| சிங்கள மொழி | 26 | 17 | 18 | 17 |
| ஆங்கில மொழி | 9 | 8 | 9 | 8 |
| | 35 | 25 | 27 | 25 |

### வருடாந்த விருதுவழங்கல் விழா

2014 /2015 இல் மூலதனச் சந்தைச் சான்றிதழ் (மூ.ச.சா.), பதிவுசெய்யப்பட்ட முதலீட்டு ஆலோசகர் (ப.மு.ஆ.), மூலதனச் சந்தை டிப்ளோமா (மூ.ச.டி.) மற்றும் நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளில் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் (ந.அ.பொ.சா.நி.) ஆகியவற்றை வெற்றிகரமாக நிறைவுசெய்த

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

மாணவர்களுக்கு மூ.ச.க.ம.ப. அங்கமானது 4ஆவது வருடாந்த சான்றிதல் மற்றும் டிப்ளோமா விருதுகள் வழங்கும் விழாவினை 2015 ஜூலை 24 ஆம் திகதி நடாத்தியது.

இந்த ஒளிமயமான விழாவின் பிரதம அதிதியாக அப்போதைய கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கலாநிதி. ஹர்ஷா டி சில்வா கலந்துகொண்டதுடன் அண்ணளவாக 140 மாணவர்கள் அவர்களது விருதுகளை பெற்றுக்கொண்டார்கள். இ.பி.ப.ஆ. இன் ஆணைக்குழு அங்கத்தவர்கள், சிரேஷ்ட முகாமைத்துவம், கொ.ப.ப. இன் சிரேஷ்ட முகாமைத்துவம், பங்குத்தரகர்கள், நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சித்துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு ஏனைய பிரசித்திபெற்ற விருந்தினர்கள் ஆகியோர் இந்த விழாவினை கண்டுகளித்தார்கள்.

### தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (தொ.தொ.அ.)

மீளாய்வாண்டில், உள்ளூர் மற்றும் உலகளாவிய மூலதனச் சந்தைகளில் நவீன போக்குகளுடன் தங்களை நிகழ்வரையாக்கிக்கொள்வதற்கும் தொடர்ந்தும் மதிப்பிடுவதற்கும் வசதியளிப்பதற்காக மூலதனச் சந்தையில் தற்போதுள்ள முதலீட்டு ஆலோசகர்களுக்கு ஏழு (7) வடிவமைக்கப்பட்ட தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பங்குத்தரகுக் கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் பகுப்பாய்வாளர்கள் உள்ளடங்களாக 1000 க்கும் அதிகமான பங்குபற்றுனர்களை கவர்ந்தது. (உருவம் 25)

நடைமுறையிலுள்ள முதலீட்டு ஆலோசகர்கள் அவர்களது வர்த்தக உரிமத்தினைப் புதுப்பிப்பதற்காக ஆகக் குறைந்தது 2 தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றவேண்டும் என இ.பி.ப.ஆ. கட்டாயமாக்கியுள்ளது.

**உருவம் 25: 2014 இல் நடாத்தப்பட்ட தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டங்களின் சுருக்கம்**

| இலக்கம் | தொ.தொ.அ. நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | பங்குபற்றிய அதிகாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலங்கையின் பங்குச் சந்தையின் இறந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் | 286 |
| 2 | பங்குத்தரகர் விதிகளின் முக்கியமான அம்சங்கள் | 165 |
| 3 | முதலீட்டுத் தீர்மானம் மேற்கொள்வதில் நிதிக் கூற்றுக்களது பகுப்பாய்வின் பங்களிப்பு | 107 |
| 4 | நடத்தை நிதியியல் - மனம் எவ்வாறு மூலதன வெற்றிக்கு உதவ அல்லது தடங்கலாக இருக்கும் என்பதை புரிந்துகொள்ளுதல் | 239 |
| 5 | நீடிப்புத்திறன் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடனான முதலீடு | 109 |
| 6 | ஆக்கபூர்வ விற்பனை | 95 |
| 7 | தொழில்நுட்ப பகுப்பாய்வினை பயன்படுத்தி போக்குகளை இனங்காணுதல் | 77 |

### தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டம்

பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தை தொடர்பான பாடங்களைப் பல்கலைக்கழக மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தங்கப் பதக்கம் மற்றும் பணக்கொடைத் திட்டத்தினை மூ.ச.க.ம.ப. அங்கமானது மீளாய்வாண்டில் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகங்களில் மூலதனச் சந்தைப் பிரிவுகளில் மிகச்சிறந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவனுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பணப் பரிசு வழங்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பாக பதினொரு (11) பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (பு.ஒ.) கைச்சாத்திடப்பட்டன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பத்து பல்கழைக்கழக மாணவர்களுக்கு 2015 ஆம் ஆண்டில் தங்கப் பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்கள் என்பன வழங்கப்பட்டன.

- களனிப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகம்
- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- இலங்கையின் ரஜரட்ட பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்

### மூலதனச் சந்தை விழிப்புணர்வு மற்றும் வெளிவாரி உறவுகள்.

முதலீட்டாளர்களது நலன்களைப் பாதுகாப்பது, அறிவுபடைத்த முதுலீட்டாளர்களது சேர்மத்தினை உருவாக்குவது மற்றும் நிதியியல் உட்படுத்தலை அடைதல் என்பவற்றை இலக்கு வைத்து இ.பி.ப.ஆ. பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு முன்னெடுப்புகளை பின்பற்றுவதனை தொடர்ந்தது. மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்ற பல்வேறு குழுக்களை இலக்குவைத்து மூலதனச் சந்தையில் அவர்களது அறிவு

மற்றும் புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்காக பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. (உருவம் 26)

எமது கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் மாகாண ரீதியான பங்குபற்றலை இலங்கையின் வரைபடம் விளக்குகின்றது. (உருவம் 27)

### தேசிய பல்கலைக்கழகங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வுக் காலப்பகுதியில் மூ.ச.க.ம.ப. அங்கமானது இலங்கையின் மூலதனச் சந்தை கட்டமைப்பு தொடர்பாக பல்கலைக்கழக சமூகத்தினது தொழில்நுட்ப மற்றும் அடிப்படை அறிவினை புதுப்பிக்க மற்றும் மேம்படுத்துவதற்கு உதவும்முகமாக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பல்கலைக்கழக சமூகத்துடன் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. மூலதனச் சந்தை சார்ந்த நிதியியல் கல்வியறிவினை மேம்படுத்தும் அதன் முயற்சிகளின் ஓர் பகுதியாக மூ.ச.க.ம.ப. அனேகமான தேசிய பல்கலைக்கழகங்களது சிரேஷ்ட கல்வியாளர்களுடன் அவர்களது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினுள் பாடவிதான உள்ளடக்கத்தினை அறிமுகம் செய்வதற்கு / மேம்படுத்துவதற்காக கலந்துரையாடினோம். மேலும், பின்வரும் பல்கலைக்கழகங்களுடன் அவற்றின் மாணவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட பயிற்சி அட்டவணைகள் மற்றும் கள விஜயத்திற்கான வசதிகள் என்பவற்றை வழங்குவதற்காக கலந்துரையாடலை மேற்கொண்டோம். இந்த பல்கலைக்கழகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

- கொழும்பு பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் சபரகமுவ பல்கலைக்கழகம்
- இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகம்
- இலங்கையின் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா கெம்பஸ்

### உயர் தேசிய டிப்ளோமா மாணவர்கள் (உ.தே.டி.)

மீளாய்வுக் காலப்பகுதியில் இலங்கையின் உயர்நிலை தொழில்நுட்ப கல்வி நிருவகத்துடன் (இ.உ.தொ.க.நி.) பின்வரும் பாடக்கோப்புகளில் மாணவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ஓர் உடன்பாட்டினை எட்டினோம்:

- கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா
- வணிக நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா
- வணிக நிதியியலில் உயர் தேசிய டிப்ளோமா
- முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா

இந்த உடன்பாடானது இ.பி.ப.ஆ. இன் பணிப்பாளர் நாயகம் மற்றும் இ.உ.தொ.க.நி. இன் பணிப்பாளர் நாயகம் அவர்களது விசேட வேண்டுகோளுக்கமைய எட்டப்பட்டது.

**உருவம் 26: 2015 இல் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**




**உருவம் 27: மாகாணரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள்**



# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் செய்தித்தாள் நிறுவனங்களோடு இணைந்து வெளியிடப்பட்ட கட்டுரைகள்**



කොටස් වෙළෙඳපොළ කඩා වැටිලාද?

BUSINESS TIMES ON SUNDAY
Sunday, June 28, 2015

SEC to continue to balance regulation, says SEC Chairman

The Securities and Exchange Commission of Sri Lanka (SEC) says that it continues to ensure that it strikes a balance in regulation since over regulation can stifle growth and discourage active stakeholder participation.

"A vital aspect in maintaining the integrity of the market, as well as making certain that investors are protected is the dissemination of quality and reliable information on an ongoing basis. Disclosures in-

In line with our mandate we continue to monitor, mitigate and manage risk with the aim of pro... integrity in the ma... Since systemic ris... the potential to no... affect the financia... market but the ent... economy as well

regulated entities, as well as corporate disclosure-related offences, etc. "However, the current Sri Lanka securities law, which was enacted 28 years ago, has its drawbacks inter alia the enforcement framework

22.02.2015
வர்த்தகம்

மூலதன சந்தையும் முதலீடுகளும்

முதலீட்டின் போது முதலீட்டாளர்கள் விடும் ஏழு தவறுகள்
(Seven Common Mistakes in Investment)

மூலதனச் சந்தையும் முதலீடுகளும்

பங்குச்சந்தையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்

2015.03.23

දැනුමෙන් ආයෝජනයට
කොටස් වෙළෙඳ පොළ

කොටස් වෙළෙඳ පොළේ ආයෝජනය - සම්පේක්ෂණය (Speculation) සහ කොටස් වෙළෙඳ පොළ කෘත්‍රිමව ඉහළ පහළ දැමීම වරදක්ද?

INVEST

කොටස් මිලදී ගන්නේ කවුරුන්ද?

Thursday 30th July, 2015
News Features/Advertorial
The Island

How the lack of good governance affects corporate entities

Address by the Chief Guest, Thilak Karunaratne, chairman, Securities and Exchange Commission of Sri Lanka (SEC) at the Board Leadership Director Certification Programme conducted by SLID on July 28.

Stock market regulation: Safeguards interest of investors?

Market GUIDE
In collaboration with SEC

How does insider dealing work?

Market manipulation

What is market manipulation?

Insider dealing

What is the penalty?

MONDAY, SEPTEMBER 21, 2015
MARKET/MANAGEMENT

Mistakes first-time investors make

RULE NUMBER ONE OF INVESTING IS TO MAKE SURE YOU CAN LEAVE THOSE FUNDS IN THE MARKET FOR AT LEAST FIVE YEARS (AND 10 YEARS IS BETTER)

SPEECH / NEWS

REGIONAL CROSS-BORDER REGULATORY COOPERATION VITAL TO BUILD ROBUST CAPITAL MARKETS: SEC DG

Vajira Wijegunawardane

### வெளிவாரி உறவுகள்

ஓர் திடமான மூலதனச் சந்தைக்கு நன்கு தகவலறிந்த சமூகமானது ஓர் முக்கியமான பாகமாகும். இது தொடர்பில் பிணையங்கள் சந்தையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் அபிவிருத்திகள், முக்கியமான தீர்மானங்கள் மற்றும் முதலீட்டாளர் கல்வி என்பவற்றை பரப்புவதற்காக நாம் பொதுவான முதலிடும் மக்கள் உள்ளடங்களாக பங்காளிகளுடன் பல்வேறுவகைப்பட்ட தொடர்பாடல் கால்வாய்களூடாக தீவிரமாக ஈடுபட்டோம்.

### ஊடக உறவுகள்

முதலீட்டாளர்கள் தங்களுக்கான முதலீட்டுத்தெரிவுகள் பற்றி முற்றாக அறிந்திருப்பதும் அவர்களது சொந்த நிதியியல் தீர்மானங்களுக்கு பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பதும் முக்கியமானதாகும். எனவே, அறிவுடைய மற்றும் விவேகமான முதலீட்டாளர்களை உருவாக்குவதற்காக இ.பி.ப.ஆ. மூலதனச் சந்தையில் முதலிடுவது பற்றி “டெய்லி மிரர்” மற்றும் “அத” ஆகிய பத்திரிகைகளில் வாராந்த கட்டுரைத் தொடர்களை தொடர்ந்தது. 2015 இல் “டெய்லி மிரர்” மற்றும் “அத” ஆகியவற்றில் 80 க்கும் அதிகமான கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. இந்த இரண்டு தொடர்களுக்கும் அப்பால், ஏனைய பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும் இ.பி.ப.ஆ. கிரமமாக கட்டுரைகளை பிரசுரித்தது. 2015 இல் 120 க்கும் அதிகமாக கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

இவ்வாண்டில் நாம் முறைமைப்படுத்தல் முன்னெடுப்புகள், வலியுறுத்தல் நடவடிக்கைகள், பொது விழிப்புணர்வு விடயங்களில் அறிவித்தல்கள் மற்றும் மூலதனச் சந்தை அபிவிருத்தி பொறுப்பேற்புகள் என்பவற்றை ஊடக வெளியீடுகளாக பிரசுரித்தோம். மேலாக, பலமான ஊடக பிரசன்னமானது இ.பி.ப.ஆ. இன் புலப்படும் தன்மையினை மேம்படுத்துவதுடன் முதலீட்டாளர்களது நம்பகத்தன்மையினையும் கட்டியெழுப்பும்.

துறைசார் மன்றங்களில் இ.பி.ப.ஆ. இன் சிரேஷ்ட முகாமைத்துவமானது பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றியதுடன் பொதுமக்களுக்கு சமீபத்தைய முறைமைப்படுத்தல் நடவடிக்கைகளில் அதிக தெளிவினை வழங்குவதற்காக செய்தியாளர் மாநாடு மற்றும் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை நேர்காணல்களையும் நடாத்தியது.

சமீபத்தைய முறைமைப்படுத்தல் புதுப்பித்தல்கள், பிரசுரங்கள், நிகழ்வுகள் மற்றும் ஆலோசனை ஆவணங்கள் உள்ளடங்களாக நிகழ்வரையாக்கப்பட்ட தகவல்களை இலகுவாக அணுகத்தக்கவாறு நாம் தொடர்ச்சியாக எமது வலைப்பக்கத்தினை மேம்படுத்தினோம்.

### சர்வதேச உறவுகள்

#### ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) நிதியியல் முறைமைப்படுத்துபவர்கள் பயிற்றுவித்தல் முன்னெடுப்பு (நி.மு.ப.மு.) பிராந்திய கருத்தரங்கு.

தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக இ.பி.ப.ஆ. “முதலீட்டாளர் மற்றும் சந்தை இடையீட்டாளர் கல்வி” என்பதில் ஆ.ப.பொ.ஒ. மற்றும் நி.மு.ப.மு. பிராந்திய கருத்தரங்கினை விருந்தோம்பியது. இந்த அறிவுத்திறன் கட்டியெழுப்புதல் முன்னெடுப்பானது முதலீட்டாளர்கள், சந்தை இடையீட்டாளர்கள் / நிதியியல் ஆலோசகர்கள் மற்றும் கம்பனி பணிப்பாளர்களுக்கான நிதியியல் அறிவுத்திறன் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்வதில் ஆர்வமுள்ள அல்லது பொறுப்பாயுள்ள நபர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. பங்களாதேஷ், கம்போடியா, சீனா, கானா, இந்தியா, இந்தோனேஷியா, கென்யா, கொரியா, மாலைதீவு, நேபாள், பிலிப்பைன்ஸ், தய்ப்பே மற்றும் தாய்லாந்து உள்ளடங்களாக 13 நாடுகளிலிருந்து மொத்தமாக 73 பங்குபற்றுனர்கள் இந்தக் கருத்தரங்களில் சமூகமளித்ததுடன் இதுவரை இலங்கையில் இடம்பெற்ற ஆ.ப.பொ.ஒ. கருத்தரங்கில் சமூகமளித்த வெளிநாட்டு பங்குபற்றுனர்களில் ஆகக்கூடியது இதுவாகும்.

#### சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்களுக்கான ஒழுங்கமைப்பு (ச.பி.ஆ.ஒ.)

பிணையங்கள் முறைமைப்படுத்தலில் உலகளாவிய நியமங்கள் பொறுத்துபவரான ச.பி.ஆ.ஒ. இன் நடவடிக்கைகளில் இ.பி.ப.ஆ. பங்குபற்றி பங்களித்தது. நாம் ஆசிய பசிபிக் பிராந்திய குழு, வளர்ச்சி மற்றும் வெளித்தோன்றும் சந்தைகள் குழு மற்றும் பன்முக புரிந்துணர்வு ஒப்பந்த பரிசோதனை குழு ஆகியவற்றின் அங்கத்தவராவோம். இவ்வாண்டில், குழு 4 இல் இ.பி.ப.ஆ. அங்கத்துவத்தினை பெற்றதுடன் (வலியுறுத்தல் மற்றும் தகவல் பரிமாற்றம்) இது உலகளாவிய நிதியியல் சந்தைகளில் பிணையங்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மீறல்களை கண்டுபிடிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் உதவுவதற்கு முனைகின்றது. இ.பி.ப.ஆ. தொடர்ச்சியாக ச.பி.ஆ.ஒ. இன் சுற்றாய்வுகளில் பங்குபற்றியது.

#### பத்திரிகைகளுடன் இணைந்து இ.பி.ப.ஆ. ஆல் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள்

#### நிதியியல் துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்ட சுற்றாய்வு

இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட நிதியியல் துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு (நி.து.ம.நி.) இ.பி.ப.ஆ. பங்களிப்பு செய்தது. இது நிதியியல் துறையின் மீளெழுச்சி, முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பின் தகமை மற்றும் நிதியியல் சிக்கல்களை முகாமைப்படுத்துவதற்கும் தீர்ப்பதற்குமான கொள்ளளவு ஆகியவற்றினை ஆய்வுசெய்யும் நாட்டின் நிதியியல் துறையில் விசாலமான மற்றும் ஆழமான மதிப்பீடாகும். நி.து.ம.நி. மதிப்பீடுகள் அபிவிருத்தியடையும் மற்றும் வெளித்தோன்றும் சந்தை நாடுகளில், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கூட்டு பொறுப்பாகும்.

### எமதுபலம்

மனித மூலதனமென்பது இ.பி.ப.ஆ. இன் மிகப்பெரிய பலமும் மூலோபாய சொத்தும் ஆகும். எனவே இ.பி.ப.ஆ. க்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடப்பாட்டினை பயனுறுதிமிக்க விதத்தில் நிறைவேற்றுவதற்கான வசதியினை அளிக்கும் பொருட்டு பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்களுக்காக கணிசமான அளவு முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது.

#### சேனைகளின் திரட்டு

செயலகமானது இ.பி.ப.ஆ. இன் குழுவில் இணைந்துகொள்வதற்கு தேவையான திறன்களுடன் நேர்மை மற்றும் இரகசியத்தன்மையினை பேணக்கூடிய ஆற்றலைக் கொண்ட பொருத்தமான தகமையையுடைய மற்றும் அனுபவமிக்க தொழில்நெறிஞர்களை தேடுவதில் அயராது ஈடுபடுகின்றது.

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

பத்திரிகைகளில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஓர் கடுமையான நேர்முகத்தேர்வு செயல்முறையின் பின்னர் ஓர் உள்வாரி மனுதாரர் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். இவர் இ.பி.ப.ஆ. இல் தொடர்ச்சியாக எட்டு வருடக் காலப்பகுதியில் பணிப்பாளர் மூலதனச் சந்தை அபிவிருத்தி பதவியினை வகித்திருந்தார். மேலும் இரண்டு உதவிப் பணிப்பாளர்கள், ஒரு நிறைவேற்றுனர் மற்றும் ஓர் தொலைபேசி இயக்குபவர் உடன் வரவேற்பாளர் ஆகியோர் நிரந்தர பணிநிலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். எங்கெங்கு சாத்தியப்படுகின்றதோ உள்வாரி ஊழியர்கள் அடுத்த உயர் பதவிக்கு உயர்த்தப்படுகிறார்கள். இதற்கமைய, மேற்பார்வை, சட்டம் மற்றும் அமுலாக்கல் மற்றும் கூட்டாண்மை விடயங்கள் ஆகிய பிரிவுகளிலில் கடமையாற்றிய மூன்று நிறைவேற்றுனர்கள் அவர்களது கடந்தகால செயற்திறன், சேவை மற்றும் நன்னடத்தை என்பவற்றை கருத்திற்கொண்டு சிரேஷ்ட நிறைவேற்றுனர்களாக பதவியுயர்த்தப்பட்டார்கள். ஓர் உதவிப் பணிப்பாளர், நான்கு நிறைவேற்றனர்கள் மற்றும் இரண்டு நிறைவேற்றனரல்லாதோர் உள்ளடங்களாக ஏழு பதவி விலகல்கள் பதிவு செய்யப்பட்டன. (உருவம் 28)

**உருவம் 28 : 31 டிசம்பர் 2015 இல் உள்ளவாறானசேனையின் தகவல்கள்**

| வர்க்கம் | அங்கீகரிக்கப்பட்ட மொத்த சேனை | தொழிலில் தற்போது உள்ள சேனை | | வெற்றிடமாயுள்ள பதவிகள் |
|---|---|---|---|---|
| | | நிலையானது | ஓப்பந்தம் | |
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | | - |
| பிரதிபணிப்பாளர் நாயகம் | 1 | 1 | | - |
| பணிப்பாளர்கள் | 11 | 6 | 1 | 4 |
| உதவிப் பணிப்பாளர்கள் | 5 | 2 | | 3 |
| முகாமையாளர்கள் | 8 | 4 | | 4 |
| சிரேஷ்ட உதவி முகாமையாளர்கள் | 40 | 16 | | - |
| முகாமையாளர்கள் | | 17 | | 7 |
| சிரேஷ்ட நிறைவேற்று காரியதரிசி | 3 | 2 | | |
| நிறைவேற்று காரியதரிசி | | 1 | | |
| நிறைவேற்றுனரல்லாதோர் | 17 | 15 | | 2 |
| சிரேஷ்ட அலுவலகஉதவியாளர்கள் | 10 | 6 | 1 | 1 |
| அலுவலகஉதவியாளர்கள் | | 1 | | |
| அலுவலகதுணையாளர் | | 1 | | |
| மொத்தம் | 96 | 73 | 2 | 21 |

இ.பி.ப.ஆ. இல் முக்கியமான கடமைகளை நிறைவேற்றும் தொழில்வல்லுநர்களுக்கு உரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்காகவும் ஏனைய முறைமைப்படுத்தல் நியாயாதிக்கங்களுடன் ஒப்பிட்டும், சிரேஷ்ட நிறைவேற்றுனர்கள் மற்றும் நிறைவேற்றுனர்களை வருடத்தின் இறுதிப் பாகத்தில் முறையே சிரேஷ்ட உதவி முகாமையாளர்களாகவும் உதவி முகாமையாளர்களாகவும் மீள்நியமிக்கப்பட்டார்கள்.

2015 டிசம்பர் 31 இல், இருபத்து ஒன்பது ஆண்களும் நாற்பத்து ஆறு பெண்களும் உள்ளடங்களாக எழுபத்து ஐந்து பணியாளர்கள் இ.பி.ப.ஆ. இல் சேவையாற்றினார்கள். பால், வயது மற்றும் வருடத்தின் இறுதியில் பணியாளர்களது சேவைக்காலம் என்பன உருவடிவத்தில் விளக்கப்பட்டுள்ளது. (உருவங்கள் 29, 30, 31, 32)

**உருவம் 29 : தொழிலிலுள்ளோர்**




- ப.நா. உ.ப.நா. மற்றும் பணிப்பாளர்கள்
- உதவிப் பணிப்பாளர்கள்
- முகாமையாளர்கள்
- சிரேஷ்ட உதவி முகாமையாளர்கள்
- உதவி முகாமையாளர்கள்
- சிரேஷ்ட நிறைவேற்று காரியதரிசிகள்
- நிறைவேற்று காரியதரிசிகள்
- நிறைவேற்றுனரல்லாதோர்
- உதவி ஊழியர்கள்

**உருவம் 30 : பால் ஆய்வியல்**




- ஆண்கள்
- பெண்கள்

**உருவம் 31 : வயதுஆய்வியல்**




- 25-35
- 36-45
- 46-55
- 55க்கு மேல்

**உருவம் 32 : சேவைக்காலத் தகவல்கள்**




- 2 வருடங்கள் வரைக்கும்
- 3 - 4 வருடங்கள்
- 5 - 6 வருடங்கள்
- 7 - 8 வருடங்கள்
- 9 - 10 வருடங்கள்
- 10 வருடங்களுக்கு மேல்

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

**வேதனம்**
மீளாய்வாண்டில் சிபாரிசு செய்யப்பட்ட அரசாங்கப் படிகள் உள்ளடங்களாக மிகவும் காத்திருந்த சம்பள சீராய்வு அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது.

**பயிற்சியும் அபிவிருத்தியும்**
கல்வி, பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி என்பன ஊழியர்களது திறமையினை விடுவித்து அதிகாரமளிப்பதனால் இ.பி.ப.ஆ. க்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணையை பயனுறுதிமிக்க விதத்தில் நிறைவேற்றுவதற்கு வழிசமைக்கும். எனவே இ.பி.ப.ஆ. ஊழியர்களுக்கு பொருத்தமான அபிவிருத்தி வாய்ப்புக்களை உள்ளூரிலும் ஏனைய நியாயாதிக்கங்களிலும் வழங்குகின்றது. வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏனைய முறைமைப்படுத்தல் முகவர்களிடம் காணப்படும் சிறந்த நடைமுறைகளில் எமது ஊழியர்கள் பரிச்சயமாவதனை இயலுமையாக்குகின்றது. இந்த மன்றங்களில் கலந்துரையாடப்படும் நிகழ்வு ஆய்வுகள் முறைமைப்படுத்தல் சிக்கல்கள், சக முறைமைப்படுத்துபவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் மற்றும் ஒழுங்கான மற்றும் நன்கு முறைமைப்படுத்தப்படும் ஓர் மூலதனச் சந்தையினை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பதில் ஊழியர்களுக்கு ஓர் வெளிப்பாட்டினை வழங்குகின்றது.

மீளாய்வாண்டில் மொத்தமாக ஊழியர்களது கல்வி, பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்திக்கு ரூபா 19.8 மில்லியன் பின்வருமாறு முதலீடு செய்யப்பட்டது. ரூபா 16.4 மில்லியன் வெளிநாட்டுபயிற்சிக்காகவும் ரூபா 2.1 மில்லியன் உள்ளூர் பயிற்சிக்காகவும் முதலீடுசெய்யப்பட்டதுடன் உயர்கல்வி அனுசரணை மற்றும் தொழில்சார் அங்கத்துவக் கட்டணம் ஆகியவற்றுக்கு ரூபா 1.3 மில்லியனும் செலவிடப்பட்டது.

ஊழியர் சேனையில் நாற்பத்து ஒரு ஊழியர்கள் பிராந்தியத்திலுள்ள நாடுகள் மற்றும் ஜப்பான், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஐக்கிய இராச்சியம், ஸ்பெயின், இத்தாலி, ஸ்விட்சலாந்து, தென் கொரியா போன்ற நாடுகளின் 22 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழு ஒழுங்கமைப்பு (ச.பி.ஆ.ஒ.) மற்றும் ஏனைய முறைமைப்படுத்தல் முகவரமைப்புகள், ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (ஆ.ப.பொ.ஒ.) போன்றவற்றிற்கு எமது ஊழியர்கள் தற்போதைய மூலதனச் சந்தைப் போக்குகள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றுடன் காலத்திற்கேற்றவாறு மிகவும் பொருத்தமான பயிற்சி மற்றம் விழிப்புணர்வு சந்தர்ப்பங்களை வழங்கியமைக்காக எமது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் ஓர் படி முன்னோக்கி இ.பி.ப.ஆ. ஓர் சிரேஷ்ட உதவி முகாமையாளருக்கு தொழில் புரிந்துகொண்டு பயிற்றுவிக்கப்படும் நான்கு மாத நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்கியது. இது ஜப்பானிலுள்ள ஆசிய நிதியியல் பங்குடைமை மையத்தினால் நடாத்தப்படும் வருகைதரும் தோழமை நிகழ்ச்சித்திட்டத்தின் கர்கை அனுசரணையின் கீழ் ஜப்பானிலுள்ள நிதியியல் சேவைகள் முகவரினால் வழங்கப்பட்டதாகும். மிகவும் பெறுமதிமிக்க ஓர் தோழமை நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்கியமைக்காக ஜப்பானிலுள்ள நிதியியல் சேவைகள் முகவருக்கு எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இதற்கும் மேலாக எமது ஊழியர்கள் பின்வரும் தொடர்புடைய உள்ளூர் பயிற்சியினையும் பெற்றார்கள். தேசிய மனிதவள கருத்தரங்குகள் 2015, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட பட்டயக் கணக்காளர்களது தேசிய கருத்தரங்கு, இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கை பொருளாதார மாநாடு 2015, இலங்கையின் கணினி சங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு 2015, கூட்டாண்மை சட்டக் கருத்தரங்கு 2015, கூடடாண்மை மோசடி மற்றும் தடயவியல் கணக்கியல், இலங்கைப் பிரிவின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட வணிக முதல்வர்கள் மாநாடு 2015 மற்றும் மூலதனச் சந்தை கருத்தரங்கு 2015 என்பனவாகும்.

ஊழியர்களது கல்விக்கான கடப்பாட்டினை செயல்விளக்கமளிக்கும் வண்ணம், இ.பி.ப.ஆ. இன் பயிற்றுவித்தல் அங்கமானது ஊழியர்களுக்கு அவர்களது மூலதனச் சந்தை அறிவினை தரமுயர்த்துவதை முன்னிறுத்தும் கர்கை பாடக்கோப்பினை பின்பற்றுவதற்கு தொடர்ச்சியாக சந்தர்ப்பம் அளிக்கின்றது. பட்டய நிதியியல் பகுப்பாய்வு நிறுவகமும் (ப.நி.ப.நி.) பாடக்கோப்பினை கழிவிறக்கத் தொகையில் பின்பற்றுவதற்கு ஊழியர்களுக்கு முறைமைப்படுத்துபவர் கல்வி உதவித் தொகைகளை வழங்குகின்றது. இதற்கும் மேலாக இ.பி.ப.ஆணைக்குழு ஊழியர்களுக்கு மேல்நிலை கல்வியை, பட்டப்படிப்பின் பின்னரான பல்கலைக்கழகப் பட்டம் உள்ளடங்களாக, தொடர்வதற்கான அனுசரணையினை வழங்குகின்றது. இது அவர்கள் அப்பாடத்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின்னர் இ.பி.ப.ஆணைக்குழுவில் இரண்டுவருடங்கள் சேவையாற்றல் வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டதாகும்.

**ஊழியர் நலன்கள்**
ஊழியர்களது நலனே இ.பி.ப.ஆ. இன் செல்வம். எனவே, ஊழியர்கள் ஓர் பயனுறுதிமிக்க தொழில் வாழ்க்கை சமநிலையினை பேணுமாறு நாம் ஊக்கமளிக்கின்றோம். இது தொடர்பாக தேவையானபோது அவர்களுக்கான விடுமுறையினை பெற்றுக்கொள்வதற்காக தாராளமான வாய்ப்புக்களை வழங்குவதுடன் வேலைநாட்களில் நகரத்தை அடைவதற்கு ஊழியர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களினால் எழும் அழுத்தங்களை குறைப்பதற்காக ஓர் நெகிழ்ச்சி வருகை முறையினையும் வழங்கியுள்ளோம்.

இதற்கும் மேலாக, வெளிவாரி மற்றும் உள்வாரி மருத்துவ நலன்கள், கடன் திட்டங்கள், வட்டி மானியம் என்பன ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஏனைய நலனோம்பல் வசதிகளுள் சிலவாகும்.

விளையாட்டுத் தினம் மற்றும் கிறிஸ்மஸ் விருந்து உள்ளடங்களான வருடாந்த நிகழ்வுகள் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் மறைந்துள்ள திறமைகளை இனங்காண்பதற்கும் ஒவ்வொருவருக்கிடையே

புரிந்துணர்வினை உருவாக்கவும் இ.பி.ப.ஆ. குடும்பத்தில் ஐக்கியத்தை மேம்படுத்தவும் வசதியளிக்கின்றது.

### கற்கைப் பயிற்சி

அனைத்து தேசிய பல்கலைக்கழகங்களின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மூலதனச் சந்தை முறைமைப்படுத்துபவரது தொழிற்பாட்டில் வெளிப்பாட்டினை வழங்கும் நோக்கில் நாம் தொடர்ச்சியாக கற்கைப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்கினோம்.

### தகவல் தொழில்நுட்பம்

அரசாங்கம் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தகவல் அமைப்புகளானது அதிநவீன இணையத் தாக்குதல்களுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியதாகும். எனவே, இ.பி.ப.ஆ. இன் குறும்பரப்பு வலையமைப்பினை, நிலைமாற்றக் கொள்திறனை மேம்படுத்துவதற்கு, கிடைக்கக்கூடிய தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு, தரவுப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு முதலியவற்றை கட்டுப்படுத்துவதற்காக, தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இ.பி.ப.ஆ. இன் தகவல்களது நேர்மையினை தரமுயர்த்தி பாதுகாப்பதற்காக குறும்பரப்பு வலையமைப்பில் “ஆழமான பாதுகாப்பு” என்னும் கருத்தாக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

## சட்டபூர்வமானநிதியங்கள்

### தீர்வைநிதியம்

1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 14A மற்றும் 14B பிரிவுகளும், 1991 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும், 2003 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கத் திருத்தச்சட்டமும் 2009 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் திருத்தச் சட்டமும் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றது.

14A (1) அமைச்சரின் உத்தரவின் பேரில் குறிப்பிடப்பட்ட ஓர் கட்டணம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற பங்குப் பரிமாற்றகமொன்றில் பதிவாகும் ஒவ்வொரு பிணையங்கள் கொள்வனவு விற்பனையிலும் அல்லது அதன் விதிகளுக்கேற்ப கொள்வனவாளராலும் விற்பனையாளராலும் அறிவிக்கப்பட்ட கொள்வனவு விற்பனையிலும் தீர்வையாக கோரி வசூல் செய்து செலுத்தப்படவேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட பிணையங்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் குறிப்பிடப்படலாம்.

(2) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையானது வேறு ஏதேனும் எழுதப்பட்டசட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் வேறு ஏதேனும் வரி அல்லது தீர்வைக்கு மேலாகச் செலுத்தப்படவேண்டும்.

14B (1) 14 A பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தீர்வையை வரவு வைப்பதற்காக தீர்வை நிதியம் எனப்படும் நிதியமொன்று நிருவப்படவேண்டும்.

(2) ஆணைக்குழுவின் உத்தரவின்படி பின்வரும் நோக்கங்களுக்காக தீர்வை நிதியத்திலிருந்து கொடுப்பனவுகள் செய்யலாம் :

அ) பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு

ஆ) 38ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட இழப்பீட்டு நிதியத்தின் வரவிலுள்ள பணத்தை மேம்படுத்தல்

இ) ஆணைக்குழுவின் நோக்கங்களை அடையும் பொருட்டு அதனது அதிகாரம், கடமைகள், தொழிற்பாடுகள் போன்றவற்றை உபயோகிப்பதற்கும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும்.

(3) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் தீர்வை நிதியத்திலுள்ள பணத்தை ஆணைக்குழு முதலீடு செய்ய முடியும்.

உங்களது தகவலுக்காக இ.பி.ப.ஆணைக்குழுவினால் அறவிடப்படும் தீர்வைக் கட்டணமானது பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் இரண்டாவது தடவையாக 2010 ஆகஸ்ட் 01 முதல் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.09% இலிருந்து 0.072% ஆகக் குறைக்கப்பட்டது. முன்னைய குறைப்பானது 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாந் திகதி தொடக்கம் பிரயோகத்திலுள்ள தீர்வைக் கட்டணம் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் 0.1% இலிருந்து 0.09% ஆகக் குறைக்கப்பட்டது.

2011 ஜனவரி 1 முதல் இ.பி.ப.ஆ. தீர்வையானது ரூபா 50 மில்லியன் வரையான கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.072% உம்,ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு 0.045% உம் அறவிடப்படும்.

2006 பெப்ரவரி 15 தொடக்கம் தரகர், கொ.ப.ப., ம.வை.தி. மற்றும் இ.பி.ப.ஆ. க்குக் கொடுபடவேண்டிய கொடுக்கல் வாங்கல் கட்டணமானது, ஒரு வாடிக்கையாளர் ஒரே நாளில் ஒரே பிணையத்தை ஒரே தரகரூடாக வாங்கி விற்று அல்லது விற்று வாங்கியிருந்தால் ஒரு பக்கக் கொடுக்கல் வாங்கலுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. பங்குக் கொடுக்கல் வாங்கல் வரியான 0.300% ஆனது இரண்டு பக்கக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அறவிடப்படும்.

- கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை விற்பனை செய்த பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதவிடத்து மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல் கட்டணம் குறைந்த எண்ணிக்கையிலான வாங்கிய அல்லது விற்ற பங்குகளுக்கு அறவிடப்படமாட்டாது.
- வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை விற்ற பங்குகளின் எண்ணிக்கைக்கு சமமாக உள்ளவிடத்து கொடுக்கல் வாங்கல் கட்டணம் விற்பனைக்கு அறவிடப்படமாட்டாது.

தரகுக்கூலி, கொ.ப.ப., ம.வை.தி. மற்றும் இ.பி.ப.ஆ. கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களிப்பதனை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஒரு வாடிக்கையாளரது ஒரே பிணையத்திலான மொத்தக் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் கவனத்திலெடுக்கப்படும்.

இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்தவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதற்கும் மேலாக ரூபா 100 மில்லியன் தீர்வை நிதியத்திலிருந்து தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்திற்குச் சமமாக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மாற்றல் செய்யப்பட்டது. திரட்டிய நிதியத்திற்கு

# செயற்பாட்டு மீளாய்வு தொடர்ச்சி.

மூன்று தடவைகள் மேற்கொண்ட மாற்றல்கள் முறையே ரூபா 276 மில்லியன்,ரூபா 380 மில்லியன் மற்றும் ரூபா 94 மில்லியன் என்பன முறையே 30.09.2010, 24.09.2012 மற்றும் 31.12.2013 ஆகும்.

2015ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் இத்தீர்வை நிதியத்தின் வரவிலுள்ள தொகை ரூபா 2,554,179,392/= ஆகும். 2006-2015 வரையான காலப்பகுதியில் தீர்வை நிதியத்தின் நிலுவைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 33)

**உருவம் 33: தீர்வை நிதியத்தின் வளர்ச்சி**




## இழப்பீட்டு நிதியம்

1987 இல் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவப்பட்டதோடு இழப்பீட்டு நிதியமும் செயற்பாட்டிற்கு வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு (திருத்தியமைக்கப்பட்டது) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

உரிமம் பெற்ற பங்குத் தரகர் அல்லது உரிமம் பெற்ற பங்கு வர்த்தகர் ஒருவர் அவரது ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதன் நிமித்தம் யாரேனும் ஒரு முதலீட்டாளருக்கு பணவகை நட்டமேற்படுமிடத்து அவருக்கு இழப்பீடு வழங்கும் பொருட்டு இழப்பீட்டு நிதியமொன்று நிறுவப்படல் வேண்டும்.

இந்த இழப்பீட்டு நிதியமானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- இந்நிதியத்தின் நோக்கத்திற்காகப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட பணத்தொகைகள்.
- 51 ஏ பிரிவின் கீழ் இந்நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடிய பணத்தொகைகள். (51 ஏ பிரிவானது தவறுகளுக்கான ஒத்திணங்குதல் பற்றியது.)
- இ.பி.ப.ஆ. சட்டத்தின் 14 பி பிரிவின் கீழ் தீர்வை நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படும் பணத்தொகைகள்.

இழப்பீட்டு நிதியத்திலுள்ள பணத்தொகைகள் ஆணைக்குழுவினால் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க முதலீடு செய்யப்படலாம்.

அமைச்சர் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கிடையிலிருந்து மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்து இழப்பீட்டுக் குழுவை நியமிக்கவேண்டும்.

இக்குழுவானது செய்யப்படும் எந்த விண்ணப்பத்தின் தொடர்பிலும் இழப்பீட்டை மதிப்பிடுவதற்கும் வழங்குவதற்கும் பொறுப்பாயிருப்பதோடு, அத்தகைய மதிப்பீட்டின் அல்லது அளிப்பின் மீதான இக்குழுவின் தீர்மானம் இச்சட்டத்தின் தேவைகளுக்காக இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும்.

இச்சட்டமானது இழப்பீட்டிற்கு விண்ணப்பம் செய்வதற்கான வழிமுறையையும் கூட வழங்குகிறது. இச்சட்டத்தின் பிரகாரம் இக்குழுவானது விண்ணப்பதாரரொருவரினால் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களையும் பிற சான்றுகளையும் பரிசீலனை செய்த பின்னர், அல்லது எவ்வாறாயினும் விசாரணையொன்று நடத்தப்பட்டிருந்தால் அவ் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அந்த உரிமைக்கோரிக்கையை இழப்பீடு பெறுவதற்கு அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.இழப்பீட்டு நிதியத்தினைப் பலப்படுத்துவதற்காக 2009 ஆம் ஆண்டில் தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் மாற்றல் செய்யப்பட்டது. இதுநாள்வரை இழப்பீட்டு நிதியத்திலிருந்து எவ்வித உரிமைக்கோரிக்கைகளும் செய்யப்படவில்லை.

31.12.2015 இல் இந்த இழப்பீட்டு நிதியத்தின் வரவு மீதி ரூபா 313,362,992/= ஆகும். 2006 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் இழப்பீட்டு நிதியத்தின் வளர்ச்சி கீழே காண்பிக்கப்பட்டள்ளது. (உருவம் 34)

**உருவம் 34: இழப்பீட்டு நிதியத்தின் வளர்ச்சி**



**தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் (தீ.உ.நி.)**

தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் 1998 மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மத்திய வைப்பக முறைமையில் பங்குபற்றுபவர்களுக்கிடையேயான வர்த்தகங்களின் தீர்ப்பனவை உத்தரவாதமிடும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு கீழே விளக்கப்பட்டுள்ளது.

- வர்த்தகமொன்று நிறைவேற்றப்பட்டவுடன் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் உடைமை மாற்றப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆந் திகதி கொ.ப.ப. ஆனது ஓரடுக்குத் தீர்வுச்சுற்றை அமுல்படுத்தியது. இதற்கமைய வாங்குபவர் T+3 மீது கொடுப்பனவு செய்யவேண்டும், அதாவது வர்த்தகம் செய்த நாள் உள்ளடங்களாக 4 ஆவது சந்தை தினத்தில் செலுத்தவேண்டும். விற்பனை செய்பவர் தீர்ப்பனவை T+3 ஆம் நாளன்று பெறுவார், அதாவது வர்த்தகம் செய்த நாளிலிருந்து 4ஆவது சந்தை நாளில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. உடமையின் மாற்றத்திற்கும் வரும்படிகளின் பெறுகைகளுக்குமிடையிலான ஒப்பீட்டளவிலான நீண்ட இடைவெளி பாதுகாப்பற்ற தீர்ப்பனவுஇடர்நோ்கைக்கு வழிவகுத்துள்ளது. இது தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் தாபிக்கப்படும் தேவையை ஏற்படுத்தியுள்ளது.
- இந்நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக கீழ் காண்பவர்கள் பதவி வழி நியமனம் பெற்றுள்ளனர். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தலைவர், திறைசேரிப் பிரதிச் செயலாளர்,இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம்.

**உருவம் 35: தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் வளர்ச்சி**




- இலங்கை அரசாங்கமானது இந்த நிதியத்தினை உருவாக்குவதற்கு 50 மில்லியன் ரூபாயைக் கொண்ட தொகையை வழங்கியுள்ளது. இப்பணத்தொகை நம்பிக்கைப் பொறுப்பு உறுதி நியதிகளுக்கமைய அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. தீர்ப்பனவு உத்தரவாத நிதியமானது மீள நிறைவாக்கல்களாக நன்கொடைகள், கொடைகள், தரும சாதனங்கள் போன்றவற்றைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது தரகர்களும் காப்பக வங்கிகளும் இந்நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதில்லை.
- இந்நிதியத்தினைப் பலப்படுத்தும்பொருட்டு தீர்வை நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சமனாக இந்நிதியத்திற்கு மாற்றல் செய்யப்பட்டது. கொ.ப.பரிவர்த்தனையும் ஜனவரி 2012 இல் இந்நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை, தீ.உ.நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புறுதியில் இத்தகைய பெறுகைகளுக்கு வசதியளிக்கும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் மாற்றல் செய்தது.

எவ்வாறாயினும் தீ.உ.நி. ஆனது தீர்ப்பனவுஇடர்நேர்கையை முறையாகத் தீர்ப்பதற்கு போதாததாகக் காணப்படுவதனால் இ.பி.ப.ஆ. இத் தீர்ப்பனவுஇடர்நேர்கையை பயனுள்ள விதத்தில் சந்திக்கத்தக்க ஒரு மத்திய தீர்வக கூட்டுத்தாபனத்தை (ம.தீ.கூ.) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ம.தீ.கூ. இன் மூலதனத்தின் ஒரு பகுதியாக தீ.உ.நிதியம் காணப்படலாம்.

இதுநாள் வரைக்கும் தீ.உ.நி. இலிருந்து எவ்வித உரிமைகோரல்களும் இடம்பெறவில்லை. 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆந் திகதியில் இந்நிதியத்தின் வரவில் உள்ள மீதி ரூபா 640,228,252/= ஆகும். 2006 முதல் 2015 வரையான காலப்பகுதியில் தீ.உ.நிதியத்தின் வளர்ச்சியானது கீழே காண்பிக்கப்பட்டுள்ளது. (உருவம் 35)

# மேலதிகத் தகவல்கள்

## நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சி நிதியங்கள்

கீழ்காணும் கம்பனிகளுக்கு குறிப்பிடப்பட்டுள்ள நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளை நிர்வகிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது:

1. **சிலோன் எஸட் மெனேஜ்மன்ட் கம்பனி லிமிட்டெட்**
   - சிலோன் இன்கம் வன்ட்
   - சிலோன் இன்டெக்ஸ் வன்ட்
   - சிலோன் டுஹரிசம் வன்ட்
   - சிலோன் வைனான்சியல் செக்டர் வன்ட்
   - சிலோன் ஐபிஓ வன்ட்
   - சிலோன் எம்டிஐ ஷரியா வன்ட்
   - சிலோன் குளோபல் கம்பக்ட் சஸ்டேனபிலிட்டி வன்ட்
   - சிலோன் கிள்ட் எட்ஜ் வன்ட்
   - சிலோன டிரசரி பில் வன்ட்
   - சிலோன டொலர் பொன்ட் வன்ட்
   - சிலோன் மணி மார்க்கட் வன்ட்

2. **கொம்ட்ரஸ்ட் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்**
   - கொம்ரஸ்ட் இக்யுடி வன்ட்
   - கிரசன்ட் ஐ வன்ட்
   - கொம்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்
   - கொம்ரஸ்ட் அடல் முதாரபஹா வன்ட்
   - கொம்ரஸ்ட் கில்ட் எட்ஜ்ட் வன்ட்

3. **என்டிபி வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்**
   - என்டிபி வெல்த் குரோத் அன்ட் இன்கம் வன்ட்
   - என்டிபி வெல்த் கில்ட் எட்ஜ்ட் வன்ட்
   - என்டிபி வெல்த் இன்கம் வன்ட்
   - என்டிபி வெல்த் குரோத் வன்ட்
   - என்டிபி வெல்த் மணி வன்ட்
   - என்டிபி வெல்த் மணி பிளஸ் வன்ட்
   - என்டிபி வெல்த் சோட்ரேம் LKR ட்ரஸரி வன்ட்
   - என்டிபி வெல்த் இஸ்லாமிக் மணி பிளஸ் வன்ட்

4. **சீ பேங்க் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட்**
   - சீபேங்க் யுனிட் ட்ரஸ்ட்
   - சீபேங்க் சென்சரி குரோத் வன்ட்
   - சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (A சீரீஸ்)
   - சீபேங்க் சேவிங்ஸ் ப்ளஸ் மனி மார்க்கட் வன்ட்
   - சீபேங்க் சுரகும்
   - சீபேங்க் கில்ட் எட்ஜட் வன்ட் (பி சீரீஸ்)

5. **நெஷனல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்**
   - நாமல் இன்கம் வன்ட்
   - நாமல் மணி மார்க்கட் வன்ட்
   - நெஷனல் இக்யுடி வன்ட்
   - நாமல் குரோத் வன்ட்
   - நாமல் எக்யூட்டி வெலியு வன்ட் (மூடிய நிதியம்)
   - நாமல் ஐபிஓ வன்ட்
   - நாமல் ஐ ஈல்ட் வன்ட்
   - நாமல் கில்ட் வன்ட்

6. **வெர்ஸ்ட் கெப்பிட்டல் எஸட் மெனேஜ்மன்ட் லிமிட்டெட்**
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் வெல்த் வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   - வெர்ஸ்ட் மணி மார்க்கட் வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் கில்ட் எட்ஜட் வன்ட்
   - வெர்ஸ்ட் கெப்பிட்டல் இக்யூட்டி வன்ட்

7. **ஜே பி வைனான்சியல் (பிரைவேட்) லிமிட்டட்**
   - ஜே பி வான்டேஜ் மணி மார்க்கட் வன்ட்
   - ஜே பி வான்டேஜ் வெலியூ ஈக்யுட்டி வன்ட்
   - ஜே பி வான்டேஜ: சோட்ரேம் கில்ட் வன்ட்

8. **கார்டியன் எக்யூட்டி எசட் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**
   - கார்டியன் எக்யூட்டி இக்யுடி வன்ட்
   - கார்டியன் எக்யூட்டி விக்ஸ்ட் இன்கம் வன்ட்
   - கார்டியன் எக்யூட்டி மணி மார்க்கட் வன்ட்

9. **கென்டோர் எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**
   - கென்டோர் கெப்பிட்டல் குரோத் வன்ட்
   - அமானா கென்டோர் ஷாரியா பெலன்ஸ் வன்ட்
   - அமானா கென்டோர் ஷாரியா இன்கம் வன்ட்
   - கென்டோர் மணி மார்க்கட் வன்ட்
   - கென்டோர் ஒப்பர்சுனிட்டி வன்ட்

**10. எசட் ட்ரஸ்ட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**

- எஸ்ட்ரூ கில்ட் எஜ் வன்ட்
- எஸ்ட்ரூ மணி மார்க்கட் வன்ட்
- எஸ்ட்ரூ அல்பா வன்ட்

**11. கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் லிமிட்டட்**

- கெப்பிட்டல் எலாயன்ஸ் ஐ ஈல்ட் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் கோர்ப்பரேட் ட்ரஸரி வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் குவான்டிடேடிவ் இக்யுடி வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் கில்ட் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்வெஸ்ட்மன்ட் கிரேட் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் இன்கம் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் கில்ட் ட்ரேடிங் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் மீடியங் ரிஸ்க் டெட் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் கோர்ப்பரேட் டெட் அன்ட் கில்ட் ட்ரேடிங் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் பெலன்ஸ்ட் வன்ட்
- கெப்பிட்டல் எலாயன்ஸ் கில்ட் மணி மார்க்கட் வன்ட்

**12. ஆர்பிக்கோ ஹடரக்ஷியா எஸட் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டட்**

- ஆர்பிப்கோ ஹடரக்ஷியா கேஷ் மெனேஜ்மன்ட் ட்ரஸ்ட் வன்ட்
- ஆர்பிப்கோ ஹடரக்ஷியா ரிபோ வன்ட்
- ஆர்பிப்கோ ஹடரக்ஷியா ஸ்ரீலங்கா பொன்ட் வன்ட் - கில்ட் எட்ஜட் வன்ட்
- ஆர்பிப்கோ ஹடரக்ஷியா எஸ் அன்ட் பி 20 இன்டெக்ஸ் வன்ட்

**13. இன்வெஸ்ட்ரஸ்ட் வெல்த் மெனேஜ்மன்ட் லிமிட்டட்**

- இன்வெஸ்ட்ரஸ்ட் இன்கம் வன்ட்
- இன்வெஸ்ட்ரஸ்ட் க்ரோத் வன்ட்
- இன்வெஸ்ட்ரஸ்ட் கில்ட் எட்ஜட் வன்ட்
- இன்வெஸ்ட்ரஸ்ட் மணி மார்க்கட் வன்ட்

**14. எஸட்லைன் கெப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்**

- எஸட்லைன் இன்கம் ப்ளஸ் க்ரோத் வன்ட்
- எஸட்லைன் கில்ட் எட்ஜட் வன்ட்
- எஸட்லைன் இன்கம் வன்ட்

# மேலதிகத் தகவல்கள் தொடர்ச்சி.

**31 டிசம்பர் 2015 இல் உள்ளவாறான உரிமம் பெற்ற பங்குத் தரகர்கள்**

| கம்பனி |
|---|
